
# திருக்கோயில்

செப்டம்பர்–அக்டோபர் 1983 விலை ரூ. 4-00





மதுரை அருள்மகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு வந்திருந்த, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் நிர்வாகத்தினைத் தனியாகப் பிரித்தமைக்கும் சிறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துதல். உடன் இருப்போர்: அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலின் தக்கார் திரு வி.என். சிதம்பரம், அவர்கள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி. டாக்டர் இராதா தியாகராஜன், M.A., Ph.D. திருக்குறளார் திரு. வி. முனுசாமி, B.A.,B.L.; ஆகியோர். (20.6.83)



திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு விழாவில், பல மாவட்டங்களைச் சேர்ந்த, கணவனை இழந்த கைம்பெண்கள் பதினைந்து பேருக்கு (15), ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐயாயிரம் (ரூ. 5000/-), உதவித் தொகை நிதியை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வழங்குதல். உடனிருப்பவர்: முன்னாள் அறநிலைய ஆணையரும், இந்நாள் வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் செயலாளருமாகிய திரு. ஆர், ஷண்முகசிகாமணி, I.A.S., அவர்கள்.

முகப்பு

சென்னை-புரசைவாக்கம்
அருள்மிகு கங்காதரேசுவரர்
திருக்கோயில் இராசகோபுரக் காட்சி

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 25 | திருவள்ளுவர் ஆண்டு 2014, ருத்ரோத்காரி ஆண்டு-புரட்டாசி&ஐப்பசி செப்டம்பர் & அக்டோபர் 1983 விலை ரூ. 4-00 | மணி : 9 & 10

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | |
|---|---|
| **உள்நாடு** | ரூ. 24.00 |
| **வெளிநாடு** | ரூ. 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருநல்லம் கல்வெட்டுக்கள்
—திரு. டாக்டர் இரா. கலைக்கோவன்

திருமந்திரயோகம்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

சிவ தந்திரங்கள் —திரு. மு. அருணாசலம்

சிவபிரானும் திருமாலும்
—திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,

திருமாலை (உரை)
—ஆசிரியர்

சிவஞானபோதச் செழும்பொருள்
—ஆசிரியர்

முருகன் திருத்தலங்கள்
—திரு. டாக்டர். க. த. திருநாவுக்கரசு

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் (உரை)
—ஆசிரியர்

திருநாவுக்கரசர் மாட்சி
—திரு இராசரத்தின முதலியார்

தமிழகச் சமயங்களும் கோயில்களும்
—கவிஞர் மனசை ப. கீரன்

இளைஞர்களுக்கு ஓர் இனிய அருளுரை
—அருட்டிரு ஞானியார் அடிகள்

திருப்பாலைவனம்
—திரு. சிறுவை. நச்சினார்க்கினியன்

அகந்தரும் அருளிச் செயல்கள்
—திரு. நா. வேணுகோபால நாயகர்

திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பு
—ஆசிரியர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# திருநல்லம் கல்வெட்டுக்கள்

திரு. டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்தி லிருந்து காரைக்கால் செல்லும் வழியில், பதி னெட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள புதூரிலிருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் மண்பாதையில், மூன்று கிலோமிட்டர் தொலை வில் அமைந்துள்ள சிற்றூர்தான், கோனேரிராச புரம். தேவார காலத்தில் திருநல்லம் என்று அழைக்கப்பட்ட இவ்வூரில், 'உமைக்கு நல்ல வன்' என்று அப்பரடிகளால் பாடப்பெற்ற, இறைவன் வாழும் திருக்கோயில் அழகுற அமைந்துள்ளது. சம்பந்தர் காலத்தில் மண்டளி யாக இருந்த இக்கோயிலைச் சோழப்பேரரசி செம்பியன்மாதேவி கருங்கல் கட்டடமாக மாற்றியமைத்தார். சோழப் பேரரசர்களின் செல்லப்பிள்ளையாய் விளங்கிய இத்திருக் கோயிலில் இருந்து நாற்பத்திரண்டு கல்வெட்டுக் கள் படியெடுக்கப் பட்டுள்ளன. உத்தமசோழன் காலம் முதல் மூன்றாம் இராசராசன் காலம் வரை, அரியணை ஏறிய சோழவேந்தர்கள் பெரும்பான்மையோரது கல்வெட்டுக்கள் இக் கோயிலில் காணப்படுகின்றன. இவை மன்னர் களின் பெயர்களுடன் கால வரிசைப்படி கீழே தரப்பட்டுள்ளன.

| | மன்னன் பெயர் | கல் வெட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உத்தமசோழன் | நான்கு |
| 2. | முதலாம் இராசராசன் | ஐந்து |
| 3. | முதலாம் இராசேந்திரன் | பத்து |
| 4. | முதலாம் இராசாதிராசன் | மூன்று |
| 5. | இரண்டாம் இராசேந்திரன் | மூன்று |
| 6. | முதற் குலோத்துங்கன் | ஏழு |
| 7. | விக்கிரம சோழன் | ஒன்று |
| 8. | மூன்றாம் குலோத்துங்கன் | இரண்டு |
| 9. | மூன்றாம் இராசராசன் | ஒன்று |
| 10. | இன்னார் என்று குறிப்பிட முடியாத பரகேசரியின் கல் வெட்டுக்கள் | மூன்று |
| 11. | இன்னார் என்று குறிப்பிட முடியாத இராசகேசரியின் கல் வெட்டு | ஒன்று |
| 12. | மன்னர் பெயரும் வழியும் அறிய முடியாத கல்வெட்டுக்கள் | இரண்டு |

இக் கல்வெட்டுக்கள் பல • சுவையான செய்திகளைத் தருவதுடன், அக்காலத்துக் கோயில் ஆட்சி முறைகளையும் தெளிவாக விளக்குகின்றன.

## உத்தம சோழனின் கல்வெட்டுக்கள் :

இம்மன்னனின் நான்கு கல்வெட்டுக்களில் ஒன்று இக்கோயிலைச் செம்பியன் மாதேவி கற் றளியாக்கிய செய்தியைக் கூறுகிறது. இது கண்டராதித்தர் திருநல்லமுடையாரை வணங் குவது போலுள்ள சிற்பத்தின் அடியில், கரு வறையின் தென்புறச் சுவரில் காணப்படுவ தாகும். இன்னொரு கல்வெட்டு இக்கோயிலை எடுப்பித்த சாத்தன் குணபட்டனைப் பற்றிப் பேசுகிறது. இம்மன்னனின் ஆறாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, இக்கோயில்ல் உள்ள கதிரவன் திருமுன்னுக்கு (ஆதித்தேசுவரம் உடையார்) ஒரு நந்தா விளக்கெரிப்பதற்கு நிலக்கொடை தரப்பட்ட செய்தியைக் கூறு கிறது.

உத்தமசோழனின் அடுத்த கல்வெட்டு தான், இங்குள்ள கல்வெட்டுக்களிலேயே மிக மிக முக்கியமானதும் சிறப்புக்குரியதுமாகும். இது மையக் கோயிலிலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இம்மன்னனின் எட்டாம் ஆட்சியாண்டில் ,வெட்டப்பட்டிருக்கும் இக் கல்வெட்டு, பல செய்திகளைத் தெரிவிப்பதால் அவற்றை வரிசைப் படுத்துவது இன்றியமை யாததொன்றாகிறது.

1. செம்பியன் மாதேவி திருநல்லத்தில் இக் கற்றளியை எடுப்பித்தார்.

2. உத்தமசோழனுடைய மூன்றாம் ஆட்சியாண் டில், அப்பெருமாட்டி, ஊரவையாரிடம் இரண்டு வேலி நிலத்தை விலைக்கு வாங்கி னார். ஆண்டிற்கு 224 கலம் நெல் வருமானம் வரக்கூடிய இந்நிலங்களை ,இக்கோயிலுக் குரிய, கண்டராதித்தன் என்னும் பெயரில் அமைந்திருந்த பூந்தோட்டத்தையும், ஏனைய நந்தவனங்களையும் காப்பதன் பொருட்டு நந்தவனப்புறமாக வழங்கினார்.

3. உத்தமசோழன் தன் ஏழாம் ஆட்சியாண்டில் கடம்பூரின் வடபகுதியிலுள்ள பிச்சன்கோயில் அரண்மனையில் முகாமிட்டிருந்தபோது, பரகேசரி மூவேந்த வேளான் என்பவர், செம்பியன் மாதேவியார் திருநல்லம் கோயில் திட்டங்களை விரிவுபடுத்தவும், அவ்வூரில் இருபத்தைந்து அந்தணர்களுக்கு நாடோறும் உணவிடும் அறச்சாலையொன்றைக் கண்டராதித்தரின் ஆன்ம லாபத்திற்காக நிறுவவும் கொண்டிருந்த எண்ணத்தைக் கூறினான்.

4. திருநல்லம் கோயிலுக்களித்த கொடையாகப் பூங்குடியில் பன்னிரண்டு வேலி நிலமும், முசிட்டக்குடியில் நான்குவேலி நிலமும் இருந்தன. அவற்றிலிருந்து முறையே அறுநூறு கலமும், இருநூறு கலமுமாக, மொத்தம் எண்ணூறு கலம் நெல் அவனுக்குப் பஞ்சவாரமாக வரி கட்டப்பட்டு வந்தது. உத்தம சோழன் தன் அன்னையின் எண்ணத்தை நிறைவேற்ற, பூங்குடி நிலத்திலிருந்து வந்த அறுநூறு கலம் நெல்லையும் தன் ஆறாம் ஆட்சியாண்டுமுதல் வழங்க வேண்டுவதில்லை யென ஆணையிட்டான். சிலநாட்களுக்குப் பிறகு இவ்வருமானமும் போதாமற் போனதால், வெண்ணாட்டு ஈழநலம் என்ற சிற்றூரில் ஆண்டுக்கு 1590 கலம் நெல்லை வருமானமாகத் தரவல்ல பன்னிரண்டு வேலி நிலத்தை இச்கோயிலுக்குத் தேவதானமாகவும் அறச்சாலைக்கு வழங்கப்படும் சாலாபோகமாகவும் வழங்கினான்.

5. உத்தமசோழன் தன் எட்டாவது ஆட்சியாண்டில் காரைக்காட்டுப் பனையூரில் முகாமிட்டிருந்தபோது, திருநல்லத்திலிருந்து தனக்குப் பஞ்சவாரமாக வரவேண்டிய முப்பத்தொன்பது கல நெல்லையும், மூன்று கழஞ்சுக்கு மேற்பட்ட பொன்னையும் தனக்கு வழங்க வேண்டாமென்று ஆணையிட்டான். அத்துடன் திருநல்லத்திலுள்ள எழுபது வேலி நிலத்தில் மூன்றரை வேலி நிலத்தை இறையிலியாக்கி அதனைத் திருநல்லம் இறைவனுக்குத் திருநாமத்துக் காணியாக வழங்கினான்.

இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் பூங்குடியும் முசிட்டக்குடியும் இன்றும் கோனேரிராசபுரம் என்னும் திருநல்லத்துக்கு அருகில் விளங்குவது குறிப்பிடத்தக்கது

6. இக் கல்வெட்டின் பிற்பகுதி கோயில் நிலங்களின் வருமானத்தைக் கோயிலின் பல்வகைப்பட்ட செயல்பாடுகளுக்குச் செலவழிக்கத் திட்டமிட்ட முறைகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இறைவனுக்குரிய பலவகைப்பட்ட உணவுகள், சந்தனக்காப்பு, தூபம், தீபங்கள், செம்பியன் மாதேவியின் பிறந்த நாளான கேட்டையன்று நிகழ்த்தப்படும் திருப்பலிச் சடங்குக்கு வேண்டிய செலவினங்கள், மார்கழித் திருவாதிரை, வைகாசிவிசாகம் ஆகிய திருவிழாக்களின் போது அந்தணர்களுக்கும், ஏனைய அடியார்களுக்கும் உணவிடல், சந்தனம் அரைப்பாருக்கு ஊதியம் ,செப்புத் திருமேனிகள் வலம் வரும் போது விதானங்கள் தூக்குவோருக்கு ஊதியம் ,பூப்பறித்து வருவார், மாலை தொடுப்பார், கோயிலைப் பெருக்கி மெழுகிவைப்பார், இன்னிசைபாடுவார், முரசு அறைவார், காளமும் சங்கும் ஊதுவார், மெய்க்காவற்காரர்கள், திருப்பதியம் ஓதுவார், கோயில் திருச்செயல் பார்க்கும் அந்தணர்கள், கோயில் கணக்கர், கோயில்களுக்குச் சக்கரமிடுவார், திருப்பரிவட்டத்துக்குச் சாயம் தோய்ப்பார், இறைவனுடைய திருக்குளியலுக்குக் காவிரியிலிருந்து நீர்கொண்டுவரும் அந்தணர், கோயில்கணக்குகளைத் தணிக்கை செய்பவர், கோயிலில் நல் ஓலை வாசிப்பவர், தோட்டங்களைக் கவனிப்பவர், கோயிற் கொத்தர், தச்சர், கொல்லர், ஆகியவர்களின் ஊதியங்கள், கோயிலைப் பழுதுபார்க்கும் செலவு, மாதப்பிறப்பு, கிரகண தினம் ஆகியவற்றின்போது நிகழும் சிறப்பு வழிபாடு, திருநந்தவனத்தைச் சீர்செய்தல், விதானங்கள், விருதுகள் முதலியவற்றைப் பழுது பார்த்தல், ஜலபவித்திரம் என்ற புண்ணியாவசனம், ஆண்டுதோறும் திருப்பரி வட்டங்களைப் புதுப்பித்தல், திரிபுராந்தகர், ரிஷப தேவர், கணபதி ஆகிய செப்புத் திருமேனிகளுக்குப் பால், தயிர், வெண்ணெய், சர்க்கரை தேன் முதலியவற்றால் முழுக்காட்டும் செலவு, கோயில் வேலையாட்கள், திருப்பதியம் பாடுவார், குருக்கள், பாடகர், திருச்செயல் செய்வார் முதலியவர்களுக்குரிய வீட்டுவசதி ஆகிய செலவினங்களுக்கு வழிவகுக்கப்பட்டது.

இக்கல்வெட்டில் அரசனுடைய செயலை அறிவிக்கும் அதிகாரி, ஆணத்தி, புறவுவரி, திருவாய்க்கேள்வி, வரிப்பொத்தகம், முகவெட்டி முதலிய அரசியல் அதிகாரிகளின் மேல் ஒப்பங்களைக் காணலாம். இக்கல்வெட்டிலிருந்து அக்காலத்துக் கோயிற் பணிகள் எத்தனைச் செம்மையாக நடத்தப்பட்டன என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

செம்பியன்மாதேவி இக்கோயிலைக் கற்றளியாக்கியதாகக் கூறும் கல்வெட்டு பின்வருமாறு அமைந்துள்ளது.

''ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளார் ஸ்ரீ செம்பியன் மாதேவியார், தம்முடைய திருமகனாரான, ஸ்ரீமதுராந்தக தேவரான, ஸ்ரீ உத்தமசோழன் திருராச்சியம் செய்தருளாநிற்கத் தம் உடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லம் உடையார்க்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து, இத்திருக்கற்றளியிலேயே, திருநல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்ததேவர் இவர்''. இக்கல்வெட்டிற்கு மேல் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பத்தில் கண்டராதித்த சோழர் திருநல்லமுடையாரை வணங்கும் காட்சியைக் கண்டு மகிழலாம்.

இக்கற்றளியை எடுப்பித்த சாத்தன் குணபட்டனைப் பற்றிக்குறிப்பிடும் கல்வெட்டினருகில், இப்பெருமகனின் வடிவமும் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். செம்பியன் மாதேவியார் ஆணைப்படி இக்கோயிலைக் கற்றளியாக எடுப்பித்த சாத்தன் குணபட்டன் என்ற ஆலத்தூர் அரசேந்திரசேகரனின் பணிகளைப் பாராட்டி இராசகேசரி மூவேந்த வேளான் என்ற சிறப்புப்பட்டம் இவனுக்கு

வழங்கப்பட்டதையும் இக்கல்வெட்டு வெளி வாக உணர்த்துகிறது.

## பரகேசரிவர்மனின் கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் காணப்படும் மன்னன் பெய ரில்லாத பரகேசரிவர்மனுடைய மூன்று கல் வெட்டுக்களையும், திரு எஸ். ஆர். பாலசுப்பிர மணியம், உத்தமசோழனுடையதாகவே கருது கிறார். இம்மூன்றனுள் முதலாவது கல்வெட்டு பரகேசரிவர்மனுடைய மூன்றாம் ஆட்சியாண் டில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பூந் தோட்டமொன்றுக்கு நிலம் கொடையாகத் தரப்பட்ட செய்தியைத் தருவதுடன், இக் கோயில் கட்டப்பட்ட காலத்தையும் நிர்ணயிக் கிறது. இது உத்தமசோழனுடைய கல்வெட்டு என்பது உறுதிப்பட்டால், திருநல்லம் சிவன் கோயில், செம்பியன் மாதேவியால், உத்தம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக்கு முன்பே கற்றளியாக்கப்பட்டது என்பதும் உறுதிப்படும்.

பரகேசரிவர்மனுடைய பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்கெரிப்பதற் குத் தரப்பட்ட நிலக்கொடை பற்றியும், பதி னான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, திரு நல்லம் கணபதிகோயில் வழிபாட்டுக்குத் தரப் பட்ட நிலக்கொடை பற்றியும் குறிப்பிடுகின் றன. இப்பதினான்காம் ஆட்சியாண்டுக் கல் வெட்டால் திருநல்லம் பிரமதேயமாக இருந்த நிலையும் தெளிவாகிறது.

## முதலாம் இராசராசனின் கல்வெட்டுக்கள்

உத்தமசோழனை அடுத்து சோழப் பேர ரசை ஆண்ட முதலாம் இராச ராசனின் கல் வெட்டுக்கள் ஐந்து இங்குள்ளன. இம்மன்ன னின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக் கோயிலில் திருப்பதியம் பாடியவர்களுக்கு இவ் வூர் அவையார் பூங்குடியில், 'காணி' என்ற பெயரில் நிலக்கொடை அளித்ததை எடுத்துரைக் கிறது.

இம்மன்னனின் பதினோராம் ஆட்சியாண் டுக் கல்வெட்டு, அரசி ஒருத்தியின் கொடை பற்றிப் பேசுகிறது. இவனுடைய பன்னிரண் டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு இங்குள்ளன. ஒன்று இராசராசத் தெரிஞ்ச கைக்கோளர் இனத்தைச் சார்ந்தவளும், அந் தப்புரத்துப் பணிப்பெண்ணுமான நக்கன் நல் லத்தடிகள் என்பவள் உமா மகேசுவரருடைய வெள்ளித் திருமேனி ஒன்றையும், சண்டேசு வரருடைய செப்புத்திருமேனி ஒன்றையும், இக் கோயிலுக்கு வழங்கிய செய்தியைக் கூறுகிறது. இன்னொன்று வெண்ணாட்டு வடகரை மங்க லத்தைச் சேர்ந்த அரிஞ்சிளக நின்றான் என்பவர் திருநல்லத்துத் திருமூலத்தானமுடைய மகாதேவர் கோயிலுக்குக் கொடுத்த நிலக் கொடையைப் பற்றிக் கூறுகிறது.

இராசராசனின் பதினைந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் உள்ள கதிரவன் திருமுன்னில் விளக்கொன்று எரிக்க, ஏழுகாசு நன்கொடையாகத் தரப்பட்ட செய்தி யைச் சொல்கிறது.

## முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுக்கள்

இக்கோயில்லி காணப்படும் முதலாம் இரா சேந்திரனின் பத்துக் கல்வெட்டுக்களுள் ஆட்சி யாண்டு தெரியாத கல்வெட்டுக்கள் மூன்று. இவற்றுள் ஒன்று இம்மன்னனின் மெய்க்கீர்த் தியை மட்டும் கொண்டு விளங்குகிறது. இன் னொன்று 97½ காசுக்கு நிலமொன்று திருநல்ல முடைய மகாதேவர் கோயிலுக்குவிற்கப்பட்ட செய்தியைத் தருகிறது. இதில் திருநல்லம், உய்யக்கொண்டார் வளநாட்டின் ஒரு பகுதி யான வெண்ணாட்டிலுள்ள பிரமதேயமாகக் குறிப்பிடப்படுகிறது. பிறிதொன்று இக்கோயி லில் விளக்கெரிக்க ஆறுகாசு தரப்பட்ட செய் தியைத் தருகிறது.

முதலாம் இராசேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, குடந்தைக்கு அருகி லுள்ள பழையாறையிலிருந்த அரண்மனையில் தங்கியிருந்த அப்பெருமகனின் அத்தையான ஆழ்வார் பராந்தகர் குந்தவைப் பிராட்டியார் வழங்கிய நன்கொடையைப் பற்றிக் குறிப்பிடு கிறது.

இப்பேரரசனது ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு இங்குள்ளன. ஒன்று வடகரை இராசேந்திர சோழவளநாட்டு, திரு வாலிநாட்டுத் திருவாலயைச் சேர்ந்த ஒருவர் இக்கோயிலில் விளக்கெரிக்க முப்பது காசு கொடையாகக் கொடுத்த செய்தியைக் கூறு கிறது. இன்னொன்று வேளாளர் ஒருவரால் தரப்பட்ட எட்டுக் காசுகளைப் பெற்றுக் கொண்ட திருநல்லம் கோயில் முரசறைவோர் இக்கோயிலின் விடியற்காலை வழிபாட்டின் போது, முரசறையவும், காளம், சங்கு முதலி யன ஊதவும் ஒப்புக் கொண்டமையைப் புலப் படுத்துகிறது.

இராசேந்திரனின் பதினோராம் ஆட்சி யாண்டுக்கல்வெட்டு (இதை இரண்டாம் இராசேந்திரனின் கல்வெட்டாகக் குறிப்பிடு கிறார். திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்), இக்கோயில் இறைவனை உமைக்கு நல்லவர் என்று குறிப்பிடுகிறது. அப்பர் சூட்டிய திருப் பெயர், அவருக்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இராசேந்திரன் காலத்தில் இறை வனுக்கு வழங்கப்பட்டமை புதுமையானதொரு செய்தியாகும். இராசராசனால் கண்டுபிடிக்கப் பட்டதிருமுறைகளே இராசேந்திரன் காலத்தில் ஏற்பட்ட இப்பெயர் மாற்றத்துக்குக் காரணம் என்பதும், இங்குத் தெள்ளிதின் விளங்கும். காரைக்காட்டைச் சேர்ந்த வாணகோவரையர் மனைவியார் இக்கோயில் இறைவனுக்குத் தங்க நகைகளும் வெள்ளி ஊதுகுழலும் வழங்கிய செய்தி இக்கல்வெட்டால் உணரக்கிடக்கிறது.

இராசேந்திரனின் பதினேழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, அரிஞ்சயன் மாதேவி என் னும் அரசி இக்கோயிலில் சேத்திரபாலர்

வடிவத்தை நிறுவியதைக் குறிப்பிடுகிறது. இம் மன்னனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்கெரிக்கத் தரப்பட்ட பணக் கொடை பற்றிக் கூறுகிறது. இதே மன்னனின் முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயில் பணியாள் ஒருவனுக்கு நெற் கொடை தரப்பட்டதை எடுத்துரைக்கிறது.

## முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டுக்கள்

முதலாம் இராசாதிராசனின் மூன்று கல் வெட்டுக்களுள் இரண்டு, இம் மன்னனின் முப் பத்து மூன்றாம் ஆட்சியாண்டிலும், முப்பத் தைந்தாம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட் டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுக்களும் இவ் வூரில் உத்தமசோழன் பெயரால் உத்தமசோழ விண்ணகர் என்றொரு பெருமாள்கோயில் இருந் ததையும், அக்கோயிலில் விளக்கெரிக்கத் தரப் பட்ட பணக்கொடை குறித்தும் பேசுகின்றன.

இம்மன்னனின் முப்பத்தாறாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு உய்யக்கொண்டார் வள நாட்டைச் சேர்ந்த பிரமதேயமான பாவைக் குடியில் ஊரவையார், திருநல்லம் கோயிலுக்கு நிலம் விற்ற செய்தியைக் குறிப்பிடுவதுடன், இன்னொரு சுவையான செய்தியையும் குறிக் கிறது. ஊரவையினர் கால்வாய்க் கரையிலிருந்த 'இராசேந்திரன்' என்னும் மரத்தடியில் கூடி னர் என்று இக்கல்வெட்டு அறிவிப்பது, மரங் களுக்கும்கூட அக்காலத்தில் பெயர் இருந்த விந்தையைப் புலப்படுத்துகிறது. சங்ககாலந் தொட்டே ஊர்ப்பொதுவிடமான மன்றில், ஒரு மரத்தடியில் ஊரவையார் கூடிய செய்தி இங்கு நினைந்து இன்புறத்தக்கதாகும்.

## இரண்டாம் இராசேந்திரனின் கல்வெட்டுகள்

இம்மன்னனின் மூன்று கல்வெட்டுக்களும் இரண்டு, இப்பெரு வேந்தனின் மெய்க்கீர்த்தி யுடன் விளங்குவதால், எளிதாக இம்மன்ன னுக்குரியவையாக்கிக் கொள்ளப்பட்டன. மூன்றாவது கல்வெட்டு குறிக்கப்படும் செய்தி யால் இம்மன்னனுடையதாகக் கொள்ளப்படு கிறது. முதற் கல்வெட்டு ஊரவையாரால் இக் கோயிலுக்கு ஒருமா நிலம் விற்கப்பட்ட செய் தியைக் குறிக்கிறது. ஏனைய இரண்டு கல் வெட்டுக்களும் இவ்வூரில் மதுராந்தகி ஈசுவர முடையார் என்ற பெயரில் ஒரு கோயில் இருந்த செய்தியைக் கூறுகின்றன. இம்மன்னனின் ஏழா வது ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டு ஊரவையார் மதுராந்தகி ஈசுவர முடையார் கோயிலில் கூடியதைத் தெரிவிக் கிறது. இரண்டாம் இராசேந்திரனின் திருமகள் பெயர் மதுராந்தகி என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணி யம் இவ்விரண்டு கல்வெட்டுக்களும் குறிப்பிடும் மதுராந்தகி ஈசுவரமுடையார் கோயில், தனிக் கோயில் அல்ல என்றும், இந்தத் திருநல்லம் கோயில்தான் இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் இப்பெயரால் வழங்கப்பட்டது என் றும் குறிப்பிடுகிறார். மதுராந்தகி ஈசுவர முடையார் கோயில் தனிக்கோயிலா அல்லது திருநல்லம் கோயிலுக்கு இரண்டாம் இராசேந் திரன் காலத்தில் வழங்கப்பட்ட பெயரா என் பது ஆய்வுக்குரிய செய்தியாகும். இவ்விரண்டு கல்வெட்டுக்களும் மையக்கோயிலின் புறச்சுவர் களில் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவை தெளிவாகப் படிக்கப்பட்டால்தான் இப்புதிர் புலப்படும் வாய்ப்பு உண்டு.

## முதற்குலோத்துங்கனின் கல்வெட்டுகள்

இம்மன்னனின் ஏழு கல்வெட்டுக்களுள் இரண்டு, ஆட்சியாண்டு பற்றிய குறிப்பற் றவை. இவற்றுள் ஒன்று வழிபாட்டுக்கு நெல் கொடையாகத் தரப்பட்டதைக் குறிக்கிறது. இன்னொன்று இம்மன்னனின் மெய்க்கீர்த்தி மட்டும் கொண்டு விளங்குகிறது.

இப்பேரரசனது பதினைந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு சண்டேசுவரர் கோயிலின் மேற்குச்சுவரில் காணப்படுகிறது. திட்டை விழு மியான் என்னும் பிள்ளை அடியார் இச்சண் டேசுவரர் கோயிலை எழுப்பியதை இக்கல் வெட்டு கூறுகிறது. இம்மன்னனின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, விஜயராஜேந்திர வளநாட்டு, தேவூர்நாட்டுத் தேவூரைச் சேர்ந்த ஒருவர், இக்கோயில் இறைவனுக்குரிய வழி பாட்டிற்குப் பணம் வழங்கியதைக் குறிக்கிறது. இம்மன்னனின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல் வெட்டு, திருநல்லம் கோயிலில் மகேசுவரர்களை களை உண்பிக்க நித்தவிநோதச் சதுர்வேதிமங் கலமான பாவைக்குடி ஊரவையார் தந்த நிலக் கொடையைக் குறிப்பிடுகிறது.

இம்மன்னனின் நாற்பத்தேழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, உய்யக் கொண்டார் வள நாட்டைச் சேர்ந்த, வெண்ணாட்டிலுள்ள பிரம தேயமான, நித்தவிநோதச் சதுர்வேதி மங்கலம் எனப்படும் பாவைக்குடி ஊரவையார் ,திரு நல்லத்துக் கைலாசமுடைய மகாதேவர்க்கு நிலம் விற்ற செய்தியை உணர்த்துகிறது. இதே மன்னரின் நாற்பத்தொன்பதாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, வரிகட்ட இயலாமல், மக்கள் விட்டுச்சென்ற கோயில் நிலங்களை ஊரவையார் திரும்ப எடுத்துக்கொண்ட செய்தியைக் கூறுகிறது.

## விக்கிரமசோழன், மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாம் இராசராசன் கல்வெட்டுக்கள்

விக்கிரமசோழனுடைய கல்வெட்டு இக் கோயில் இறைவனுக்குரிய திருமுழுக்காட்டிற் கும் வழிபாட்டிற்கும் செய்யப்பட்ட நிலக் கொடையைக் குறிக்கிறது. மூன்றாம் குலோத் துங்கனுடைய இரண்டு கல்வெட்டுக்களுள், அவ னது பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, திருநல்லம் உடையார் கோயிலின் புகழாபரண மண்டபத்தின் தென்புறத்தில் அமைந்துள்ள விநாயகப்பிள்ளையார் கோயிலுக்குத் தரப் பட்ட நிலக் கொடையைக் குறிப்பிடுகிறது.

இதே மன்னனது பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயில் இறைவிக்கு நகைகள் நன்கொடையாகத் தரப்பட்டதை விளக்கு கிறது.

மூன்றாம் இராசராசனின் இருபத்தைந் தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயிலுக் குரிய மாலைகள் தயாரிப்பதற்காக நிலக் கொடை வழங்கிய செய்தியைத் தெளிவாக்கு கிறது.

## பிற கல்வெட்டுக்கள்

பெயர் தெரியாத இராசகேசரியின் கல் வெட்டு மாகேசுவரர்களை உண்பிக்க ஏற்பா டானதைக் குறிக்கிறது. இது முதற் குலோத்துங்க னுடையதாக இருக்கலாமென்று கருதப்படு கிறது. மன்னர் பெயர் அறியமுடியாத இரண்டு கல்வெட்டுக்களுள் ஒன்று, இக்கோயிலின் கோபு ரம், வேங்கிபுரம் முதலிப்பிள்ளையின் நன் கொடையால் அமைக்கப்பட்டதைக் கூறுகிறது. பிறிதொரு கல்வெட்டு, திருநடை மாளிகை அமைக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டுக்களால் செம்பியன் மா தேவியாரின் இறைப்பற்றும், கோயில் திருப் பணிகளும், தன் கணவர்மீது அவர் கொண்டி ருந்த இணையற்ற அன்பும் உள்ளங்கைக் கனி யென புலப்படுகின்றன. கோயிலாட்சி முறை களும், கோயிலுக்குக் கொடைகள் தருவதில் மக்களும் மன்னர்களும் காட்டிய ஆர்வமும், ஈடுபாடும் நம்மை அயர வைக்கின்றன. இவ் வூரில் இருந்து, இன்று சுவடழிந்துபோன இரண்டு கோயில்களைப் பற்றிய குறிப்பையும் இக்கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். வார்ப்புக்கலையின்பொற்காலமாகச்செம்பியன் மாதேவியாரின் காலம் இருந்ததையும், இக்கல் வெட்டுக்களில் குறிக்கப்படும் பல திருமேனிக் கொடைகளால் தெரிந்துகொள்ள முடிகின்றது. கோயிலைக் கட்டிமுடித்த கலைஞனுக்குச் சமு தாயமும், அரசியலாரும் தந்த மதிப்பையும், செய்த சிறப்பையும் வேளானின் சிற்பமும், திட்டை விழுமியான் சிற்பமும் நமக்கு மகிழ் வோடு உணர்த்தி நிற்கின்றது.

## முடிவுரை :

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாகச் சோழப் பேரரசர்களால் சீரும் சிறப்புடன் போற்றப்பட்டு வந்த இத்திருக்கோயில், இன்று புகழ் மங்கி இருந்தாலும், நன்முறையில் பாது காக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. இக் கோயிலின் நிர்வாக அதிகாரிதிரு. முத்துக்குமார சாமியும், இதன் நிர்வாக அறங்காவலர் திரு. கோ. சு. இராமனும் நற்பண்புகள் நிறைந்த பேராளர்கள். இவர்களின் மனம் நிறைந்த உழைப்பாலும், இக்கோயிலின் சிவாச்சாரியார் நடராச குருக்களின் இனிய நேயம் நிறைந்த தொண்டாலும், இக்கோயில் பழம்புகழைப் பெற்றுப் பாரிற் சிறந்த கோயில்களுள் ஒன் றாய்த் திகழப்போவது உறுதி.

---

## "திருமுறை"

'திருமுறை' என்னும் பெயர், சைவசமய ஆசிரியர்கள் அருளிச் செய்துள்ள பாடல்களின் பன்னிரு தொகுதிகளுக்கும் உரியதொன்று. ''சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்'' என மணிவாசகரும், ''திருவே என் செல்வமே தேனே'' எனத் திருநாவுக்கரசரும் பாடியிருத்தலின், திரு என்னும் சொல் சிவம் எனப் பொருள் தரும். முறை என்பது நெறி என்று பொருள் பயக்கும். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்னும் திருக்குறளில் வரும் முறை என்னும் சொல்லுக்கு ஆசிரியர் பரிமேலழகர் 'அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி'' எனப் பொருள் கூறியிருத்தல் காண லாம். ஆதலின் திருமுறை என்பதற்கு,'சிவ பரம் பொருளின்பால் நெறிப்படுத்தி உய்விக்கும் நூல்கள்' எனப் பொருள் கொள்ளலாம்.

இனி, திரு-தெய்வத் தன்மை; முறை-நூல் எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். முறை என்னும் சொல், நூல் என்னும் ஒரு பொருளையும் குறிக்கும். இவ்வுண்மையினையுணர்த்தும்வண்ணம் இச்சொல்,

''இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேள்என முயல்வது ஒக்குமால்;
அறுமுகம் உடையஒர் அமலன் மாக்கதை
சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே''

எனவரும் கந்தபுராண அவையடக்கச் செய்யுளின்கண், ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் அவர்களாற் பயன்படுத்தப்பட்டிருத்தல் காணலாம். ஆதலின் தெய்வத் தன்மை மிக்க சிறந்த நூல்கள் எனவும், திருமுறை என்னும் சொற்குப் பொருள் உரைத்தல் அமையும்.

—ஆசிரியர்

# திருமந்திர யோகம்

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

(முற்றொடர்ச்சி)

## இருவகையன்பு :

இவற்றிற்கெல்லாம் அடிப்படை இறையன்பாகும். உள்ளன்பாலே யோகம் வரும். நாம் அளிப்பது அன்பு. இறைவன் அளிப்பது அருள், கருணை இன்பமே. எல்லாம் அன்பின் விளக்கமே. திருமூலர் இரண்டு வகை அன்பைப் போற்றுகிறார். ஒன்று மகனுக்கும் தந்தைக்கும் உள்ள அன்புறவு. மற்றொன்று தொண்டனுக்கும் தலைவனுக்கும் உள்ள அன்புறவு. தந்தை-தனையன் உறவு சற்புத்திரமார்க்கம், நன்மகன் தந்தையைப் பணிவதுபோலக் கடவுளைப் பணிதல்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்தல்
ஆசற்ற நற்றவம், வாய்மை அழுக்கின்மை,
நேசித்திட்டு அன்னமும் நீர்சுத்தி செய்தல், மற்று
ஆசற்ற சத்புத்திர மார்க்கம் ஆகுமே.

ஓர் தந்தை முதிர்ந்த வயதில், தனயன் தனக்கு உணவு உடை இருக்கை அளித்துக் கைங்கரியம் செய்வதை விரும்புவான், மகன் நன்றாகப் படித்து, கற்றவழி நின்று, சூது பொறாமையின்றி, உண்மையும் அறமும் பேணி வாழ்ந்தால் தந்தைக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்படும். அத்தகைய குற்றமற்ற புதல்வனைப் போல், அன்பன் உலகத் தந்தையான இறைவனை வணக்கமுடன் பேணி, அவன் பெருமைகளைக் கற்றுக் கேட்டுச் சிந்தித்து அவன் வகுத்த அறவழியறிந்து நடந்து, அவனை வாய்மையுடன் பூசித்து, தன்னையும் தனதையும் அளித்து, என்றும் நன்றிபாராட்டுதலே நல்ல புதல்வன் ஆகிய பக்தன் கடமையாகும். 'மேவிய சற்புத்திர மார்க்கம் மெய்த்தொழில் தாபிப்பதாம்' என்கிறார் மூலர். வண்டு மலர்களைச் சேர்ந்து தேனுண்ணும். நாரை மடவாயைச் சேர்ந்து அமைதியாக மீனுக்குக் காத்துநிற்கும். அன்னம் தாமரையைச் சேரும். அதுபோல் அவரவருக்குரிய அறநெறியில் மாந்தர் சேர்ந்தொழுக வேண்டும். மனித ஆன்மா சேரத்தக்க அருங்கரை இறைவன் அடிநிழலேயாம்-அருங்கரை ஆவது அவ்வடி நீழல். உயர்ந்து நின்றும், விழுந்து பணிந்தும், முகர்ந்தும், தழுவியும், வியந்து பாராட்டியும், அரனுக்கேமுறை செய்யுங்கள். அதுவே பிறவிப் பயனாகும். இறைவன் அருளைப் அன்பன் பூண்டால், அவனும் கடவுட் பான்மையன் ஆவான். தெய்வத் தன்மையன் ஆவான். இறைவனை நான் நின்றும் கிடந்தும் தொழுவேன். நீங்கள் அன்பு மலர் தூவித் தொழுங்கள். தொழுந்தோறும் எழிலோங்கும் பரஞ்சோதி இறைவன் வெளிப்படுவான்.

நின்று தொழுவன், கிடந்துஎம்பிரான் தன்னை
என்றுந் தொழுவன்; எழிற்பரஞ் சோதியை
துன்றுமலர் தூவித் தொழுமின்; தொழுந் தோறும்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே.

உருத் தொழுகையாளர் சரியைபோலச் சற்புத்திர மார்க்கத்தைப் போற்றி இறைவனைக் கைகூப்பி வணங்குமின். இருக்கும் நாளெல்லாம் இன்புற்றிருந்து போற்றி செய்மின்.

## தாசமார்க்கம் :

தாசமார்க்கம் ஆவ தென்ன? கடவுட் பணியே அடியார்வழி. அதுவே தாசமார்க்கம். பிரபத்திமார்க்கம் அடைக்கல வழியே-தாச மார்க்கமே. இறைவனைச் சரண்புகுந்து, என்றும் அவனது திருத்தொண்டு ஆற்றலே தாச மார்க்கமாம். திருக்கோயிலில் விளக்குவைத்தல், மலர்கொய்வித்து அளித்தல், கோயிலைக் கூட்டி மெழுகிக் கோலம்போட்டு அணியுறுத்தல், பூசைவேளையில் திருமணியைப் பற்றி அடித்தல், திருமஞ்சனத்திற்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்தல், இறைவனை வாழ்த்துதல் ஆகியவையே தாசமார்க்கம், தொண்டு வழியாகும்.

எளியனல் தீப மிடல், மலர் கொய்தல்,
அளிதின் மெழுகல், அதுதூர்த்தல், வாழ்த்தல்
பளிமணி பற்றல், பன்மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.

இறைவனை வந்தித்துச் சிந்தித்துத் துதித்துப் பணிக. தேவர் ஆயிரம் பெயர் சொல்லி

அந்த ஒருவனையே உன்னுவர். வாயால் வழுத்துவதைக் காட்டிலும், நெஞ்சில் வணங்குதல் சிறப்பாகும். அவன் என் கண்ணன் என்று போற்றிக் கருதும் தொண்டருக்கு இறைவன் பேரன்பு பற்றி நிற்பான். சும்மா வாயால் மட்டும் தலைவனை முகத்துதி செய்வதால் என்ன? உள்ளத்தில் நன்றியும் மகிழ்வும் வணக்கமும் கொண்டு இணக்கமாக அவன் ஆணையைப் போற்றலே அடியானுக்கு அழகாகும்.

ஆண்ணலை வானவர் ஆயிரம் பெயர்சொல்லி
உண்ணுவர், உளமகிழ்ந் துள்நின்று அடிதொழக்
கண்ணவன் என்று கருது மவர்க்கும்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே.

பாசி அதிகமாக உள்ள குளத்தில் விழுந்த கல்லைப் பார்க்க முடியாது. அதைப் போன்று பாசக்குளத்தில் மனம் படிந்தால், மாசற்ற சோதியான இறைவனை நீலகண்டனை, ஆன்ம நேயத்துடன் அவன் இருந்தும், வினைக்க அறியார் மாந்தர். வாசித்தும், பூசித்தும் மலர் கொய்தும் பயனில்லை. பாசம் இன்றி மனம் தெளிந்தாலே இறைவனை உள்ளே உணரவும் தியானிக்கவும் இயலும்.

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்,
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம் பார்க்கில்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே.

இனி அன்பு செய்து நினைவறிந்து தியானிக்கும் பக்தர் பெறும் பதவிகளை விளக்குவோம்.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணா யாமம் பிரத்தியா காரம்,
சயமிகு தாரனை தியானம் சமாதி,
அயமுறும் அட்டாங்கம் ஆவம் ஆமே

## இயமம் :

ஐம்புலன்களையும் மனதையும் நல்வழிப் படுத்தித் தீமையைத் தவிர்ப்பது யமம், இயமம் கொல்லாமை, பொய்யாமை, உண்மை, களவாடாமை, பிரமசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைரியம், தூய உணவு, அளவறிந்து உண்ணல், மனோவாக்குக் காய சுத்தம்-இவை இயமமாம். பிற உயிர்களை எக்காரணத்தாலும் கொல்லாதவன். கொன்றதை உண்ணாதவன், பொய்சொல்லாதவன், பிறர் பொருளை விருக்பாதவன், திருடாதவன், பிறர் எண்ணிமதிக்கத் தகும் நற்குணசீலன், நன்மையே செய்பவன், தற்பெருமை பேசாது அடக்கமாய் இருப்பவன், நடுநிலை நியாயமுள்ளவன், ஓரகம் அற்றவன் தான் உழைத்துச் சேர்த்த உணவையும் பொருளையும் பலருக்கு உழைப்பும் பிழைப்பும் பெருகப் பங்கு வைத்து உண்பவன், பாத்தூண் மருவுவோன், மாசில்லாத மனத்தன், தூய வாழ்வினன், கள்ளுண்ணாதவன், மாகத்தை அடக்கியவன்-அவனே இயமத்தில் நின்று பயன் பெற்றவன் ஆவான்.

கொல்லான், பொய்கூறான், களவில்லான்,
எண்குணன்,
நல்லான், அடக்க முடையான், நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான், மாசிலான், கட்மாகம்
இல்லான் இயமத் திடையின்நின் றானே

இயமத்தால் சாதகன் வாழ்க்கை பரிசுத்தமாகும். 'எண்குணன்' என்றால் எதையும் எண்ணி ஆய்ந்து துணிபவன்; நன்கு சிந்தித்துச் செய்பவன் என்பதாம்.

## நியமம் :

திருமூலர் பதஞ்சலியைத் தாண்டிப் போகிறார். ஒவ்வொன்றின் தத்துவப் பொருளையும் அழகாக விளக்குகிறார். பதஞ்சலியில் இயமம் அகிம்சை, சத்யம், பிரமசரியம், கள்ளாமை, அபரிகரகம் ஆகிய ஐந்துமே. திருமூலர் மேற்கூறிய பத்து அனுட்டானங்களைச் சொல்லுகிறார்; பிறர் பொருளை ஏலாதிருப்பது மட்டும் போதாது. தனக்குற்ற பொருளையும் பங்குவைத்துப் பொதுவில் அனுபவிக்க வேண்டும், என்ற சமதர்மத்தையும் வற்புறுத்துகிறார். பதஞ்சலியின் நியமம், தூய்மை, மகிழ்ச்சி, தவம், கல்வி, கடவுள்வணக்கம் ஆகிய ஐந்துமே. திருமூலர் வேதப் பொருளை பரஞ்சோதியை, மகாகுண்டலிக்கனல் வடிவான அருட்சோதியை, பராசக்திபாகனை நீதியாய் உணர்வதே நியமம் என்கிறார். இந்த நியமத்திற்குச் சாதனமாகப் பத்து அனுஷ்டானங்களைச் சொல்லுகிறார். மனமொழி மெய்த் தூய்மை, அருள், எளியதாய சுருக்கமான உணவு, பொறுமை, செம்மை, வாய்மை, மன நிலைப்பு, பேச்சு நடமாட்டங்களை அளவு படுத்தல் (வரைத்தல்), காமம், களவு இரண்டையும் கொலைபோலக் கண்டு அஞ்சும் குணம் அனைவரிடமும் அன்புள்ள நேயம் ஆகிய பத்து ஒழுக்கங்களும் நியமம் ஆகும்.

தூய்மை, அருள், ஊண்சுருக்கம், பொறை, செம்மை
வாய்மை, நிலைமை, வரைத்தல், மறறிவை,
காமங் களவு கொலை எனக் காண்பவை,
நேயம் ஈரைந்தும் நியமத்த னாமே

இவற்றிற்குச் சாதகமாக தவம், செபம், சந்தோடம், ஆத்திகபுத்தி, தானம், சிவவிரதம், சித்தாந்தம் கேட்டல், தியாகவேள்வி, சிவ பூசை, ஒள்ளிய மதியை வளர்த்தல் ஆகிய பத்தும் செய்பவன் நியமத்தன் ஆவான்.

தவம் செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்றன் விரதமே, சித்தாந்தக் கேள்வி
மகம், சிவபூசை ஒண்மதி சொல் ஈர் ஐந்து
நியமம்பல செய்யின் நியமத்த னாமே

இந்த நியமத்தைக் காத்த அன்பருக்கு அருட்குரு வந்து சிவசேதனத்தைத் துலக்கிச் சிவன் அருள் பெற வழிகாட்டுவான், இயம நியமங்களால் அந்தரங்க சுத்தியும், அமைதியும், ஒருமையும் வீறும் சக்தியும் உண்டாகும்.

—தொடரும்

# சிவதந்திரங்கள்

திரு. மு. அருணாசலம்

தந்திரம் ஆகமம் என்ற பெயர்களைப் பற்றி வேறிடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். வேதத்தையொத்த அதிகாரமுடைய மற்றொரு தொகுப்பான வடமொழி நூல்கள் ஆகமம் எனப்பெயர் பெறும். சைவநூல்கள் ஆகமங்கள், சாக்த நூல்கள் தந்திரங்கள். வைணவ நூல்கள் சம்மிதைகள் இவை பொதுப் பெயர்கள். இருப்பினும் ஒரு பிரிவைச் சேர்ந்த நூல்கள் மற்றொரு பிரிவின் பெயரால் அபூர்வமாய் வழங்குவதும் உண்டு. சிவகாமநெறி முழுமையாய்த் தமிழ்நாட்டில் தான் வழங்குகிறது; நேபாளத்திலும் உண்டு. ஆகமமுறைக் கோயில்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. ஆகமப் பிரதிஷ்டையும் பூசையும் வழிபாடும் சிற்பங்களும் கோயில் அமைப்பும் தமிழ்நாட்டில்தான் உண்டு. ஆகவே ஆகமங்கள் தமிழ்நாட்டில் செய்யப்பபெற்றன என்றால் அது முழுமையும் உண்மை.

ஆயினும் வடநாட்டில் ஆகமங்கள் இருந்தன என்ற ஒரு வரலாறும் உண்டு. நேபாளத்தில் ஆகமச் சைவம் இன்றும் நிலவி வருகிறது. காசுமீரத்தில் சைவம் நிலவி வருகிறது. அது நம்முடைய சித்தாந்த சைவம் அல்லாவிட்டாலும், அதுவும் சைவமே; அது மற்றொரு வகை ஆகமச் சைவம். ஆகவே வடநாட்டிலும் ஆகமங்கள் நிலவின, இன்றும் உள்ளன என்பது ஒப்புக் கொள்ளவேண்டிய உண்மையே. அவை தந்திரங்கள், சிவதந்திரங்கள் எனப் பெயர் பெறும்.

வடநாட்டில் பரவியிருந்த சைவம் பண்டைக்காலத்தில், பாசுபத சைவமே. இதையே அங்கு ஆகமாந்த சைவம் என்பார்கள். இந்தச் சைவமும் பாஞ்சராத்திரமும் மகாபாரதத்தில் சிறப்பாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் வடநாட்டில் பாஞ்சராத்திரம் வளர்ச்சி பெறவில்லை. அதன் ஆதார நூல்களும் கிடைக்கவில்லை. பாசுபத நூல்கள் கிடைக்கின்றன. அவையாவுமே தந்திரம் என்று சொல்லப்பெற்றன. இவற்றுள் ஒன்று சாத்துவத சம்மிதை என்ற பெயருடையது. இந்தச் சமயத்தின் சாதனைமுறை அங்கு 'ரகஸ்யஆம்நாயம்' என்று சொல்லப்பெறுகிறது. இந்தப் பழைய நூலில் அட்டாங்கயோகம் சிறப்பாய்ச் சொல்லப்பெறுகிறது. இந்த யோகநெறி நின்ற பிராமணர், பலவகை வழிபாட்டையும் துறந்து, இதயத்தைக் கோயில் கொண்ட ஒரு தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுகிறார்கள். பிறமூன்று வருணத்தாரும், அவ்வொரு தெய்வத்திடம் சரணம் புகுந்தவர்களானால், மந்திர பூர்வமான வழிபாட்டுக்குத் தகுதி யுடையவர்களே. இங்குமந்திர அட்சரங்கள், அவற்றின் வெவ்வேறு நிலையில் விளைகின்ற அனுபவப்பொருள் முதலியனவெல்லாம் சொல்லப்பெறுகின்றன.

பாசுபத சமய தத்துவத்தை முதன் முதல் உபதேசித்தவர் ஸ்ரீகண்டர். (இவர் மனித உருவம் தாங்கிய குரு என்றும் கருதுவர்). கி.பி. 1174 தேதியிட்ட ஒரு நேபாள ஏடு இவரைக் குறிப்பிடுகிறது. வகுளீசர் இவருடைய மாணாக்கர் போலும். இவரும் இவருடைய மாணாக்கரும் இரண்டாம் சந்திரகுப்த மன்னனுக்குப் பத்துத் தலைமுறை முன் இருந்தவர்கள். (அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டு). இதுவே மகாபாஷ்யம் செய்த பதஞ்சலியின் காலம் என்பர்.

ஆகமங்களின் காலத்தை நிர்ணயிப்பதற்கு இந்தச் செய்திகள் முக்கியமானவை. குப்தர் காலத்தில் ஆகமங்கள் ஆட்சியில் இருந்தன. இவை வடஇந்திய லிபியில் கி.பி. 8-9 நூற்றாண்டுகளில் எழுதப்பட்டனவாகக் கிடைக்கின்றனவாம். இந்தத் தந்திரங்கள் அல்லது ஆகமங்கள் 18 என்று சொல்கிறார்கள். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளன. விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், வாதுளம், வீரபத்திரம், ரௌரவம், மகுடம் வீரேசம், சந்திரகாசம், ஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், கரிவோத்கீதம் ,கிரணம், பாரமேசுவரம் என்பன. இவை சைவாகமங்களில் ருத்ரபேத ஆகமங்களான 18 என்பது நன்கு புலப்படுகிறது. சில பெயர்கள் மட்டும் சற்று வேறுபட்டுள்ளன. ருத்ரபேதத்தில் காணப்படும் அனலம்,வீரம், விமலம், சந்திரஞானம் என்பவை இங்கு வீரபத்திரம், வீரேசம், சந்திரகாசம், ஞானம் என்று சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள் சில தந்திரஏடுகள் பழமையான நேபாள ஏடுகளில் இன்றும் உள்ளன. பாரமேசுவரம் கி. பி. 859க் குரிய ஒரு கேம்பிரிட்ஜ் ஏட்டில் உள்ளதாம்.

மேலும் தமிழ்நாட்டுப் பிரதான ஆகம ஏடுகளில் தொடக்க அத்தியாயத்தில் 28 ஆக

மங்களின் வரலாறு சொல்லியிருப்பதுபோல, மேற்சொன்ன வடநாட்டு நிச்சுவாச தந்திரத்தில் ருத்திரர் இந்தச் சில சாஸ்திரங்களை உபதேசம் செய்தார் என்று, இவை 18ஐயும் சொல்லி, சதாசிவர் உபதேசித்தார் என்று பத்துச் சிவ தந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை காமிகம், யோகஜம், திவ்யம், காரணம், அஜிதம், தீப்தம், சூட்சுமம், சஹஸ்ரம், அஷ்டம், அம்சுபேதம் என்பன. இங்கு திவ்வியம் அஷ்டம் அம்சுபேதம் என்பன சிந்தியம் சுப்பிரபேதம், அம்சுமத் என்பன என்பது வெளிப்படை. ஆக இங்கு சிவபேதம் 10, ருத்ர பேதம் 18 ஆக 28 ஆகமங்களும் சொல்லப்பட்டிருக்கக் காண்கிறோம்.

இந்தச் சிவதந்திரங்களில் பெரும்பான்மை கிரியா மார்க்கமே சொல்லப்பட்டுள்ளது. ஹோமம், அபிடேகம், தீட்சை, கோயில்நிர்மாணம், சிவபூசை, யோகம், முத்திகலை ஆகியன இங்குச் சொல்லப்பட்ட பொருள்கள். சிவபூசைக்கு உரியவர் (பரார்த்த பூசை) சிவப்பிராம்மணர் என்றே சொல்லப்பட்டுள்ளது. வேதாந்த நிலையினும், சாங்கியத்திலும் சொல்லப்பட்ட பரஞானத்தேட்டத்தின் முடிவு நிலையை அதாவது வெற்றி என்றபிராப்தியாய் இவை உரைப்பதாகச் சொல்லுகின்றன. இச்சிவாகமங்களின் (சிவதந்திரங்களின்) வரலாற்று முறை திட்டமாக வரையறுக்க முடியாதபோதிலுங்கூட, இவை யாவும் ஒரு தொகுப்பாகக் கிறித்து அப்தத்தின் தொடக்க ஆண்டுகளுக்கு உரியன என்பதில் ஐயமில்லை.

இவற்றுக்குப் பிறகு காலமுறைப்படி தோன்றியனவே யாமளதந்திரம் என்று கூறத்தக்க சாக்த தந்திரங்கள். யாமளம் கருநிறம், பச்சை; சியாமளம் என்பதும் இதுவே. யாமள தந்திரம் பிரதானமாக எட்டு என்பர். இவை தெய்வங்களின் பெயராலேயே வழங்கும். ருத்ர யாமளம், ஸ்கந்தயாமளம், பிரும்மயாமளம், விஷ்ணுயாமளம், யமயாமளம், வாயுயாமளம், குபேரயாமளம், இந்திரயாமளம் என. இவை சாவச்சந்தர், குரோதர், உன்மத்தர், உக்கிரர், கபாலி, ஜங்கரர் சேகரர் விஜயர் ஆகிய எட்டு பைரவர்க்கு உபதேசிக்கப்பட்டமையால் பைரவ யாமளம் என்றும் வழங்கப்படும். பிங்களயாமளம், ஜயத்திரதயாமளம் என்பன வேறிரண்டு சிறப்பான யாமள நூல்கள். யாமளம் என்று திருமூலர் ஆகமம் குறிப்பிடுமிடத்துக்கூறுகிறார். இவை நமது ஆய்வுக்கு அப்பாற்பட்டவை.

**தந்திரம் மந்திரம் என்ற சொற்கள் :**

தந்திரம் மந்திரம் என்ற சொற்கள் ஆகம வழிபாட்டு நெறியில் அதிகம் பயன்படுகின்றன. இச் சொற்கள் பொருள் பொதிந்தவை.

தநோதி விழவாந் அர்த்தாந்
தந்த்ர மந்த்ர சமந் விதாந்
த்ராணம்ச குருதே பும்ஸான்
தேக தந்த்ரம் இதி ஸ்ம் ருதம்

தந்திரம் மந்திரம் என்று சேரும்போது பொருள் அதிகம் பொருந்துகிறது. மனிதனுக்குப் பாதுகாப்பு அளிப்பதால் தந்திரம் என்று பெயர் பெறுகிறது. (தந்-பரவுதல், த்ரா-காத்தல்.) உலகில் ஒரு தெய்விக வாழ்வு வாழ்வதற்கான நெறியைக் காட்டி, பிறப்பு, இறப்பு என்று ஊசலாடும் ஆன்மாவுக்கு அவ் ஊசலாட்டத்தினின்றும் பாதுகாப்பு அளிப்பதால் ஆகமங்களுக்குத் தந்திரம் என்ற பெயர் வந்தது. இது போலவே மந்திரம் என்ற சொல்லும்.

மனனம் சர்வ பவதித்வம்
த்ராணம் சம்ஸார சாகராத்
மாவை த்ராண தர்மித்வாத்
மந்த்ரம் இதி அபிதீய தே

மனனம் ஞானத்தை அளிக்கிறது; சம்சார சாகரத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதால் (த்ராணம்) மந்திரம். (மந்-சிந்தித்தல்; த்ரா-பாதுகாத்தல். மந்த்ரம்-சொல்பவனைப் பாதுகாப்பது).

அப்பர் சுவாமிகள் சிவபெருமானை வைத்தியநாதன் என்ற பெயர் சொல்லித் துதிப்பது கருதத்தக்கது. புள்ளிருக்குவேளூர்த் திருத்தாண்டகத்தில் சிவபிரான், மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான் என்று துதிக்கிறார். (சித்தாந்த சாத்திரமாகிய சிவஞானசித்தியாரும், ''மருளலாம் மலங்கள் தீர்க்கும் மருந்திவை வைத்தியநாதன்'' (123 வசுபக்கம்) என்று கூறும். அப்பர், மந்திரம் தந்திரம் இரண்டும் அவனே என்று இரண்டையும் சேர்த்துக் கூறுவதும் உணரத்தக்கது.

மற்றொருவிதமாகவும் சொல்வதுண்டு. தமிழ்ச்சொல் தந்து என்றால் நூல். நூல் என்றால் பஞ்சுநூலும் புத்தகமும் இரண்டுமாகும். தமிழ் இலக்கணநூலான நன்னூல் இதை நன்கு விரித்துச் சொல்லும்.

பஞ்சி தன் சொல்லாப்
பனுவல் இழையாசச்
செஞ்சொற் புலவனே
சேயிழையா-எஞ்சாத
கையே வாய் ஆக,
கதிரே மதியாக
மையிலா நூல் முடியு
மாறு

—நன்னூல்

என இவ்விருவகையாலும் தந்திரம் என்றசொல்லின் பொருள் நன்கு உணரத்தக்கது.

இவ்வாறாக, பரம்பொருளை விரித்துரைத்து உணர்த்துவதாலும், மந்திரங்களை விளக்கியுரைப்பதாலும், இவற்றால் மனித குலம் கதியடைய வழிகாட்டுவதாலும், தந்திரம் என்ற பெயரின் பொருத்தம் அறியத்தக்கது.

## ஆகமங்களின் தோற்றம் : (சைவாகமங்கள்)

உத்தம ஞானிகளுக்குச் சிவபெருமானே வேதங்களையும் ஆகமங்களையும் உபதேசித்ததாக ஆன்றோர் சொல்வர். ஸ்காந்தபுராணத்தின் சனற்குமார சம்மிதை கூறுகின்ற கருத்து இங்கு அறியத்தக்கது:

ஆஸ்ய மத்யே ஸ்திதா வேதா:
தேவ தேவஸ்ய பூசுரா:
அட்சராணி து தந்தேஷு
ஜிஹ்வாயம் து சிவாகமா:

''வேதங்கள் சிவபெருமானின் திருவாயில் உள்ளன; அட்சரங்கள் (எழுத்துக்கள்) பற்களில் ஆகமங்கள் நாவில்'' என்பது இதன் பொருள்.

விகவநாதபிள்ளை என்பவர் பதிப்பித்த திருமந்திரம் பதிப்புக்கு (1911) தாம் எழுதிய முன்னுரையில், பெரும் பண்டிதரான திரு. ரமணசாஸ்திரி என்பவர் ஆகமம் பற்றியும் ஆகமாந்தம் பற்றியும் கூறும் சில கருத்துக்கள் கவனிக்கத்தக்கன.

ஆகமாந்தச் சம்பிரதாயத்துக்குத் தாயகம் காசுமீரநாடு. பிரத்தியபிக்ஞை என்ற சைவ தத்துவப் பிரிவு இங்குத்தான் உதயமாயிற்று. சைவசித்தாந்த தத்துவம் 8 ஆகமங்களின் சாரமாகும். ஆகமங்கள் வடக்கிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தபோது, அவை மேற்கிந்தியாவில் (கருநாடகம்) மாகேசுவர சம்பிரதாயமாகவும், தமிழ்நாட்டில் சைவதரிசனமாகவும் உருக்கொண்டன. இது நமது, சைவசமயாசாரியர் நால்வரும் அவதாரம் செய்வதற்கும் சில நூற்றாண்டுகள் முன்னர் நடைபெற்றதாகும். ஆகமங்களின் தொடர்பினால் வெளிப்படையாகத் தெரிகின்ற பலன் கோயில் வழிபாட்டுச் சடங்குகளாகும். திருமூலர் தமது திருமந்திரம் ஒன்பது பகுதிகளில் (ஒன்பது தந்திரங்களில்) ஒன்பது ஆகமங்களின் சாரத்தைக் கூறுவதாகச் சொல்கிறார். அவ் ஒன்பது ஆகமங்களையும் அவரே குறிப்பிட்டிருக்கிறார். அவ் ஒன்பதில் எட்டு ஆகமங்களே மூலாகமங்கள், ஒன்பதாவது யாமளம் என்பது சைவ ஆகமம் அன்று, சாக்த தந்திரம் என்றுதெரிகிறது. இதனால் பிற்காலத்தில் திருமந்திர மூலத்தைத் திருத்தி, ஓர் ஆகமப் பெயரை நீக்கிச்சாக்த யாமளத்தைச் செருகியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. வீராகமமும் வாதுளாகமமும் வீரமாகேசுவர சம்பிரதாயத்துக்கு உரிய மூல சாத்திரங்களாகும்.''

பெரும் பண்டிதரான ரமண சாஸ்திரியார் இவ்வாறு எழுதியிருப்பது வரலாற்றுக் கண்ணோடு பார்த்தால் திருத்தமுடையதன்று. ஆகமங்கள் வடக்கிலிருந்து வந்தன என்பது முழுமையும் தவறு. வீரமாகேசுவர சம்பிரதாயம் என்று இவர் சொல்வது, வீரசைவ சம்பிரதாயம். இதைக் கருநாடக நாட்டில் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அங்கு மந்திரி பதவியிலிருந்த பிராமணரான பசவேசர் (1125-1165) தோற்றுவித்தார். இது தமிழ்நாட்டில் 17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சாந்தலிங்கர், சிவப்பிரகாசர், குமாரதேவர், சிதம்பரசுவாமிகள் போன்ற ஞானியர் வாழ்ந்த காலத்தில், அவர்களுடைய நூல்களில்தான் கால்கொண்டது. இதற்கும் திருமூலருக்கும் எவ்விதச் சம்பந்தமும் இருக்கவியலாது. ஆகமங்கள் சைவசமயாச்சாரியர்களுக்குச் சில ஆயிரம் ஆண்டுகள் முற்பட்டன என்பது சரியல்ல. சமயாசாரியர் காலம் 7-9 நூற்றாண்டுகள். மூலாகமங்களிற் சில புத்தர் காலத்துக்கு முன் (கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்) தோன்றியிருக்கலாம். அதாவது ஓராயிரம் ஆண்டுகள்; சில ஆயிரம் ஆண்டுகள் அல்ல. திருமூலர் வாழ்ந்தது 5ஆம் நூற்றாண்டு. (கி.பி.).

பின்னும் சில கருத்துக்களை இதுபற்றி இங்குச் சொல்லத்தகும். ரமணர் ஆகமாந்தம் என்கிறார். வேதஅந்தங்கள் தாம் வேதாந்தம் என்பதுபோல, ஆகமத்தின் சாரம் ஆகமாந்தம் (சித்தாந்தம்) என்பது பொருந்தும். பிரத்தியபிஜ்ஞை என்பது இழந்துபோன தனதுநிலையை மீண்டும் பெறுதல், நினைவுகூர்தல், தன்நிலைக்குத் தானே வருதல் என்று பொருளாகும்.

இவர் வீரசைவம் பற்றிச் சொல்லியது குறித்து ஒரு கருத்து. 14ஆம் நூற்றாண்டில் சர்வதரிசன சங்கிரகம் எழுதிய மாதவர், பாசுபதரையும் ஆகமசைவரையும் பற்றிப் பேசுகிறார். ஆனால் அவருக்கு அக்காலத்தில் வீரசைவம் பற்றி எதுவும் தெரியவில்லை. ஆதலால் அக்காலம் வீரசைவம் இல்லை என்பது இந்திய தேசத்து சாஸ்திர வரலாறு எழுதிய சுரேந்திரநாத தாஸ்குப்தாவின் கருத்து (ஐந்தாம் புத்தகம், 1955, பக்கம் 42)

மொகஞ்சதாரோ ஹாரப்பா அகழ்வாராய்ச்சிகளால் கண்டெடுத்த ஒரு நடனமாதின் சிலைவடிவமும், அக்காலம் சிவலிங்க வழிபாடு இருந்த அடையாளங்களும், அன்று ஒரு பூர்வ திராவிட நாகரிகம் வழங்கியிருந்தமையும் உணரப்படும். இவற்றால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியத் துணைக்கண்டம் முழுமையிலும் சைவம் பரவியிருந்தது என்பதையும்நன்குணர்த்தும். ஆகவே சைவம் காசுமீரத்திலிருந்து தென்னாட்டுக்குப் பரவிற்று என்ற கூற்று உண்மையற்று என்பதை யும் உணர்த்தும்.

வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பைத் தெளிவு படுத்தும் ஒரு பழையதமிழ் வெண்பாச் செய்யுளையும் இந்த இடத்தில் நினைவுகூரலாம்.

வேதம் பசு; அதன் பால்
மெய்யா கமம்; நால்வர்
ஓதும் தமிழ்அதனின்
உள்ளூறு நெய்; போதமிகு
நெய்யின் உறுசுவையாம்
நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின்
திறம்.

நால்வர்: அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர். அவர்கள் ஓதும் தமிழ், தேவார திருவாசகங்கள். மெய்கண்டார் செய்த தமிழாவது சிவஞானபோதம்.

உமாபதிசிவம் (கி.பி. 1300-1330) செய்ததாகச் சொல்லப்படும் ஒருநூல் குஞ்சிதாங்கஸ்தவம் என்ற வடமொழித் தோத்திர நூல். இதன் நான்காம் பாடலில்''காமிகம் முதலான 28 ஆகமங்களும் பரமேசுவரனுடைய திருமுகங்களிலிருந்து வெளிவந்தன. இவை கனகசபையில் 28 தூண்களாக நின்றுகொண்டு நடராஜப்பெருமானைத் துதித்து வருகின்றன''. கனகசபையைத் தாங்குபவை 28 தூண்கள். இவை 28 ஆகமங்களாகக் கருதப் பெறுகின்றன என்பதைச் சைவர் நன்கறிவர்.

# சிவபிரானும், திருமாலும்

திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,

முன்னாள் மாவட்ட நீதிபதி, மதுரை.

ஆடி மாதத்துக் கடைசி நாள்கள். அருமை நண்பர் ஒருவரின் அழைப்பின்பேரில் நாகப்பட்டினம் சென்றிருந்தேன். புதுவை போகலாம் என்றும், வழியில் ''நள்ளாறப் பனை''க் கண்டு தரிசிக்கலாம் என்றும் நண்பர் சொன்னார். இருவரும் திருநள்ளாறு சென்று நள்ளாறனைக் கண்டு வணங்கிவிட்டுப் புதுவை நோக்கிப் போனோம். வளைந்து வளைந்து செல்லும் தஞ்சை மாவட்டச்சாலையில், நண்பர் லாவகமாகக் கார் ஓட்டி வந்தார். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியைக் குடகு நாட்டார் முடக்கிவிட்ட காரணத்தால் பசுமை பூக்க வேண்டிய வயல்கள் வறண்டு கிடந்த காட்சி வேதனையைத் தந்தது. வழியில் ஏதோ ஒரு சிற்றூரை நாங்கள் நெருங்கிய போது,

''தில்லையம்பலத்தே நடனம் செய்யும் அமரர்பிரான், அவன் செல்வத் திருமகனைக் கலந்து மகிழ்ந்து குலாவென்று சொல்ல வல்லாயோ, கிளியே சொல்ல நீ வல்லாயோ'' என்று, யாரோ ஒரு சிறு பெண் பாடியது காற்றில் தவழ்ந்து வந்தது. ''தில்லையம்பலத்தே நடனம் செய்யும் அமரர் பிரான்'' என்றவுடன், புதுவைக்குப் போகும் வழியில் தில்லையம்பலத்தையும் கண்டு சேவித்துவிட்டுப் போகலாமே'' என்று எண்ணம் வந்தது. அன்று ஆடி மாதக் கடைசி வெள்ளிக் கிழமை, அருமை நண்பருக்கும் அது அருமருந்தாகப் பட்டது. தில்லைத் திருக்கோயிலை நோக்கிச் சென்றது எங்கள் வாகனம்.

நாங்கள் கோயிலுக்குள் நுழைந்தபோது ''அந்திமாலை'' வழிபாடு தொடங்கியது. முழு நீறு பூசிய அடியார் திருக்கூட்டம், ''அரகரநமப் பார்வதி பதயே'' என்றும், ''தென்னாடுடைய சிவனே'' என்றும், ''எந்நாட்டவர்க்கும் இறைவா'' என்றும் ஆர்ப்பரித்தது. ''பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே'' என்றும், ''நானேயோ தவம் செய்தேன். சிவாய நம எனப்பெற்றேன்'' என்றும், ஓதுவாமூர்த்தி மனமுருகப் பாடினார். கற்பூர சோதியில் தூக்கிய திருவடியைத் தொழுது மகிழ்ந்தோம்.

''வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத் தன் 'அடியார் கூட்டமும் வைத்த'' தில்லைப் பதியுடையானின் பெருங்கருணையை முழுதும் அனுபவித்து விட்டுப் பயணத்தை மேலே தொடர்ந்தோம். புதுவையை நெருங்கியபோது, ஏதோ ஒரு சிற்றூருக்கு அருகில் பெருங்கூட்டம். வண்டியின் வேகத்தைக் குறைத்தோம். நடத்துவதே சிரமமாக இருந்தது. என்னவென்று விசாரித்தபோது ''கிராம தேவதை ஐயனாருக்குத் திருவிழா'' என்று சொன்னார்கள். திருவிழாக் காணவந்தோரின் ஒலியும், பொங்கலிடுவோரின்ஒலியும், பொங்கலிடும் புகையும், எங்கும் நிறைந்திருந்தன. பெருத்த மீசையும், கனத்த திருமேனியும் கொண்டு, பாதைக்குச் சற்றுத் தொலைவில் ஐயனார் கம்பீரமாக வீற்றிருந்தார். அந்த ஐயனாரையும், அவரை வழிபட வந்திருந்த கூட்டத்தினரையும், சற்று முன்னே பொன்னம்பலத்தில் நாங்கள் கண்ட ஆடல் வல்லானையும், அங்கு இணங்கியிருந்த அடியார் திருக்கூட்டத்தையும் ஒப்பிட்டு, என் மனம் எடை போடலாயிற்று.

''சமய சிந்தனை'' என்ற ஒன்று ஏற்பட்ட நாளிலிருந்தே, இறைவனைப் பற்றியும், அவனின் திருக்கோலம் பற்றியும், மக்கள் மனதில் அவரவர் மனப் பக்குவத்தைப்பொறுத்து, வெவ்வேறு கருத்துக்கள் நிலவி வந்திருக்கின்றன. இறைவனுக்கு உருவம் உண்டென்றும், இல்லை அவன் 'அரூபி' என்றும், இல்லையில்லை அவன் அருஉருவன் என்றும் சொல்லி வந்திருக்கின்றனர். ஐயனார் முதல் ஆடல்வல்லான் வரை உள்ள உருவங்களும், உருவமற்ற விண்வெளியும், அண்டகோளங்களும், மற்றும் உருவத்தையும் அருவத்தையும் காட்டும் அருஉருவத்திருமேனி (இலிங்கம்) யும், இறைவனையே காட்டுகின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அவரவர் மனப்பக்குவத்துக்கேற்ப வழிபாட்டுருவங்கள் அமைகின்றன.

ஆழ்ந்த சிந்தனையில்லோருக்குக் காடனும், மாடனும், ஐயனாரும் கண்கண்ட தெய்வங்களாக விளங்குகின்றனர். இவர்களை வழிபடுபவர்களின் அறிவினிற் குறை கண்டாலும், அன்பினில் (பக்தியில்) குறை காண இயலாது.

''சைவத்தின் மேற் சமயமில்லை'' என்றெண்ணும் சைவப்பெருமக்களுக்கு, முக்கண்ணுடைய சிவனும், அவனின் மற்ற திருக்கோலங்களான சந்திரசேகரரும், நடராசரும், முருகனும், விநாயகரும் வழிபாட்டுத் திருமேனிகளாக அமைந்திருக்கின்றனர். இவர்கள் ''அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்று திருமாலைச் சிவனின் இடது கூறாகவே கொள்ளுகின்றனர். திருமாலே முழுமுதற் பொருள் எனறு சொல்லும் வைணவர்கூட, இக்கொள்கையை மறுப்பதாகத் தெரியவில்லை. ''பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து'' என்று ஆழ்வார் திருமாலை வர்ணிக்கிறார். இதுபடி திருமாலின் வலப்பகுதி சிவன் என்றாகிறது. திருமாலின் வலப்பகுதி சிவன் ஆகில், சிவனின் இடப்பகுதி திருமால்தானே! இதுவே தான் சங்கரநாராயணனாகிறது.

•

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும்
சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்-
சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவு மொன்றாய் இசைந்து''

என்று ஆழ்வார் அனுபவிக்கிறார்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களை ஆழ்ந்து பார்த்தால், சைவ-வைணவச் சண்டையே பொருளற்றதாகிவிடுகிறது. அரியும் அரனும் ஒன்றென்பதை அவர்களே அழுத்திச் சொல்லுகிறார்கள்.

அரன் நாரணன் நாமம், ஆன்விடை புள்ஊர்தி
உரை நூல் மறை, உறையும் கோயில்-வரை
நீர்,
கருமம் அழிப்பு அளிப்பு, கையது வேல் நேமி
உருவமெரி கார்மேனி ஒன்று.

என்று, சிவனுக்கும் திருமாலுக்கும் உள்ள பெயர், வாகனம், நூல், இருக்கை, தொழில், ஆயுதம், திருமேனி, நிறம் ஆகியவைகளைத் தொகுத்துச் சொல்லுகிறார் பொய்கையாழ்வார்.

''மாமதில் மூன்றெய்த இறையான் நின் ஆகத்திறை'' என்று திருமால் மார்பில் முப்புரமெரித்த சிவனே இருப்பதாகவும் அவர் பாடுகின்றார். இன்னும் விவரமாக,

''ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான்
மார்விடந்தான்,
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்-கூற்
றொருபால்
மங்கையான், பூமகளான், வார்சடையான்,
நீண்முடியான்
கங்கையான் நீள் கழலான் காப்பு''

என்று அரியும் அரனும் ஒரு திருமேனியாக விவரித்து அருளிச் செய்கின்றார்.

''முனியே! நான் முகனே! முக்கண்ணப்பா,
என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கருமாணிக்கமே!
'என் கள்வா..;'

என்பதும்,

''நீராய் நிலனாய்த் தீயாய் நெடுவானாய்
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய்
அயனாய்''

என்பதும் திருவாய்மொழி.

இவைகளைத் தொகுத்துப் பார்க்கையில், ''தேருங்கால் தேவன் ஒருவனே'' என்ற திருமங்கை மன்னன் வாக்கும், ''ஒருவனே தேவனும்'' என்ற திருமூலர் வாக்கும் நினைவுக்கு வருகின்றன.

''மூவர் நீ, முதல்வன்நீ, முற்றும்நீ மற்றும் நீ
பாவம் நீ தருமம் நீ பகையும்நீ உறவும் நீ''

''மூன்று அவன் குணங்கள்; செய்கை மூன்று;
அவன் உருவம் மூன்று;
மூன்று கண்; சுடர்கொள் சோதி மூன்று;
அவன் உலகம் மூன்று;
தோன்றலும் இடையும் ஈறும் தொடங்கிய
பொருள் கட்கு எல்லாம்
சான்று அவன்; இதுவே வேதமுடிவு...''

என்பது கம்பர் காட்டும் கோலம்.

இறைவன் உருவமற்ற பெருமைசேர் பிறங்கொளியாய், பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்து, எல்லாமாய், அல்லதுமாய், நாம் காணும் பொருள்களுமாய், அப்பொருள்களுக்கு உள்ளும் புறமுமாய், ஒன்றாகவும், பலவாகவும், எப்பொழுதும் அழியாதவனாகவும் இறைவன் இருக்கிறான் என்பதும், நம் முன்னோர் கண்ட உண்மை.

''ஒன்று ஆகி, மூலத்து உருவம் பல ஆகி
உணர்வும் உயிரும் பிறிது ஆகி, ஊழி
சென்று ஆசறுங்காலத்து அந்நிலையது ஆகி,
திறத்து உலகம் தான் ஆகி, செஞ்செவே
நின்ற
நன்றாய ஞானத் தனிக் கொழுந்தே...''

''வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்
தன நின்
பாதங்கள் இவை என்னின் படிவங்கள் எப்
படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி ஒன்றினொடு
ஒன்று ஒவ்வாய்
பூதங்கள் தொறும் உறைந்தால், அவை உன்
னைப் பொறுக்குமோ'

''காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண்
ஆகிப்
பூண்பாய்போல் நிற்றியால், யாது ஒன்றும்
பூணாதாய்,
மாண்பால் உலகை வயிற்று ஒளித்து வாங்குதி
யால்,
ஆண்பாலோ, பெண்பாலோ, அப்பாலோ,
எப்பாலோ''

''ஆதிப் பிரமனும் நீஆதிப் பரமனும் நீ
ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டா
கிலும் நீ
சோதி நீ; சோதிச் சுடர்ப்பிழம்பும் நீ...''

—கம்பர்.

''சோதியே, சுடரே, சூழொளி விளக்கே...''
''ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே''
''விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே.

இன்பப் பெருமானே அஞ்ஞானம் தன்னை
அகல்விக்கும்,
நல்லறிவே, ஆக்கம் அளவிறுதி யில்லாய்,
அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தரு
வாய்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதாருள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளனே

—சைவசமய குரவர்கள்

ஒவ்வொரு பொருளிலும் (அது மிகப் பெரியதா னாலும் மிகச் சிறியதானாலும்) இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பழமைக்கும பழமையானவன், புதுமைக்கும் புதுமையானவன் என்னும் கண்டிருக்கின்றனர்.

பரந்ததண் பரவையுள் நீர்தொறும்
பாந்துளன்,
பரந்த அண்டமிதென நில விசும்
பொழிவறக்,
கரந்த சில்லிடந்தொறும் இடந்திகழ் பொரு
டொறும்
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்ட கரனே
—நம்மாழ்வார்

இதற்கெல்லாம் ஒருபடி மேலே போய், அவன், அவள், அது என்ற மூன்றாலான இப் பிரபஞ்சமே கடவுள் என்ற கொள்கையும் இருக்கிறது.

''பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்:
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்''
—திருமந்திரம்

''மாநிலஞ் சேவடி யாகத்தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசை கையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே''

—நற்றிணை

''திடவிசும்பு எரிவெளி நீர் நிலம் இவை மிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை
தொறும்
உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்
துளன்'
—திருவாய்மொழி.

# பெருமாள் திருமொழி

ஊன்ஏறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்,
ஆன்ஏறுஏழ் வென்றான் அடிமைத் திறம்அல்லால்,
கூன்ஏறு சங்கம் இடத்தான்தண் வேங்கடத்துக்
கோன்ஏரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே! (1)

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வான்ஆளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்;
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்,
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே! (2)

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்,
படியாய்க் கிடந்து, உன் பவளவாய் காண்பேனே! (3)

— குலசேகர ஆழ்வார்

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய

# திருமாலை

## மூலமும், உரையும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**தொண்டரடிப் பொடியாழ்வார் வரலாறு:**

சோழ நாட்டில், திருமண்டங்குடி என்னும் தலத்தில், அந்தணர், குலத்தில் தோன்றியருளியவர், தொண்டரடிப் பொடியாழ்வார். இவருக்குப் பெற்றோர்கள் இட்டபெயர், விப்பிர நாராயணர் என்பது. இவர் வேத வேதாந்த நூல்களையெல்லாம் நன்கு பயின்று, ஞானம் பக்தி வைராக்கியம் ஆகியவற்றில் சிறந்து திகழ்ந்திருந்தார். ஆனால் உலகியல் வாழ்க்கையில் உள்ளம் ஈடுபடாமல் உவர்ப்புற்றிருந்தார். ஆதலின் மணவாழ்க்கையை மேற்கொள்ளாமல் பிரமசரிய ஒழுக்கமே கடைப்பிடித்துத் திருவரங்கம் சென்று, அரவணைப் பள்ளிகொண்ட பெருமாளை வழிபட்டுக்கொண்டு, அவருக்கே ஆட்செய்யும் உறுதியுடையவராய், நந்தவனம் ஒன்று அமைத்து, அழகிய பூமாலைகள் பல புனைந்து, நாள்தோறும் அரங்கனுக்கு அணிவித்துத் தொண்டு செய்து வந்தார்.

ஒருநாள் திருவரங்கத்திற்கு வடக்கிலுள்ள உத்தமர்கோயில் என்னும் தலத்தைச் சேர்ந்த தேவதேவி என்னும் தேவதாசியாகிய இளநங்கை ஒருத்தி, தன் தமக்கையுடன் உறையூர் சென்று, சோழ அரசனின் சபையில் நடனம் செய்து திரும்பி வருங்கால், வெயிலின் கொடுமை தாங்க இயலாமல் இளைப்பாறக் கருதி, வழியில் இருந்த விப்பிரநாராயணரின் நந்தவனத்தில் சிறிது தங்கினாள். அப்போது அவள், பூச்செடிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த விப்பிரநாராயணரைக் கண்டாள். இறையுணர்வில் ஒன்றித் திளைத்திருந்த ஆழ்வார், அவளைச் சிறிதும் கண்ணெடுத்துப் பாராது தமது பணியிலேயே கருத்தூன்றியிருந்தார். அது கண்ட தேவதேவி, இவரை எப்படியாவது மயக்கி வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

ஒருநாள் அவள் காவிச்சேலை உடுத்து, சாத்விக வேடம் தரித்து, ஒரு பெரும் வைணவ பக்தை போல நடித்து, விப்பிரநாராயணரை அணுகி, அரங்கனுக்கு நந்தவன கைங்கரியம் செய்யவும், பூமாலைகள் தொடுத்துத் தெய்வப் பணியில் ஈடுபடவும், தன்னை ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் பணிந்து வேண்டிக் கொண்டாள். அவளது வஞ்சக எண்ணத்தை உணராத விப்பிரநாராயணர், அவளைத் தமது இரக்க உணர்வின் மேலீட்டால் ஏற்றுக் கொண்டார். பெரிய பக்தையைப்போல நடித்த அவள், விப்பிரநாராயணரின் கள்ளமறியா உள்ளத்தை மெல்ல மெல்லக் கவர்ந்து கொண்டாள். பிறகு சில நாளில் அவள் அவரைப் பிரிந்து, தன் இல்லம் சென்று விட்டாள். ஆனால் அவளைப் பிரியலாற்றாத விப்பிரநாராயணர், அவளைத் தேடிக் கொண்டு, அவளது இல்லம் சென்றார். பொருளின்றி வெறுங் கையுடன் தேடிக் கொண்டு வந்த அவரை, அவளது தாய் அவமதித்து அனுப்பினாள். அந்நிலையில் அவர் பெரிதும் வருந்தி உள்ளம் கலங்கினார்; அந்நிலையிலேயே ஒரு புறந்திண்ணையில் உறங்கி விட்டார்.

பக்தர்களிடம் அளவற்ற பரிவுகாட்டும் திருமகள் ஆகிய பிராட்டி, விப்பிரநாராயணரின் நிலை குறித்து இரங்கி, அவரை முன்போற் சிறந்த தொண்டராக்கி ஆட்கொண்டருள வேண்டுமென்று, பெருமாளைப் பெரிதும் வேண்டிக் கொண்டாள். பெருமாளும் ஓர் அருள் விளையாடலை நிகழ்த்தினார். தாம் மனித வடிவம் கொண்டார். அம் மனித வடிவில், திருவரங்கம் கோயிற் பொன்வட்டில் ஒன்றை எடுத்துச் சென்று, அதனைத் தேவதேவிக்குக் கொடுக்கும்படி விப்பிரநாராயணர் தம்மை அனுப்பியதாகக்கூறி, அப் பொன்வட்டிலைத் தேவதேவியின் தாயினிடம் கொடுத்துச் சென்றார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், பொன்வட்டில் காணாமற் களவுபோன செய்தி, கோயில் அருச்சகர்களுக்குத்தெரிந்தது. அதனை அவர்கள் ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்தனர். அவர்கள் களவுபோன பொருள் குறித்துப் புலன் ஆராயலாயினர். அப்போது அவர்களுக்குப் பொன்வட்டில் தேவதேவியின் வீட்டில் இருப்பது தெரிந்தது. அங்குச் சென்று உசாவியபோது, விப்பிரநாராயணர் கொடுத்தனுப்பியதனால், தாம் அதனைப் பெற்றதாகத் தேவதேவியும், தாயும் கூறினர். அதனால் அரசன் விப்பிரநாராயணரே களவு செய்ததாகக் கருதி, அவரைச் சிறையிலிட்டு வருத்தினான்.

உடனே, அடியார்களின் இடர் சிறிதும் பெறாத பெருமாள், அரசனின் கனவில்

தோன்றி, விப்பிரநாராயணரைத் தடுத்தாட் கொள்வதற்காகத் தாமே இங்ஙனம் செய்த தாகத் தெரிவித்தருளினார். அதனால் உண்மை அறிந்த அரசன், அடியவரைச் சிறையினின்று விடுவித்து, அன்புடன் அனுப்பி வைத்தான். விப்பிரநாராயணர் சிறையினின்று விடுதலை பெற்று வெளிவந்த பின்னர், தாம் நந்தவனப் பணியை மறந்தொழிந்தமை குறித்தும், செய்யாத குற்றத்திற்குச் சிறையிருக்க நேர்ந் தமை குறித்தும், நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி நைந்து வருந்தினார்.

முன்பு தாம் செய்து வந்த திருத்தொண் டினை விடுத்து, உலகியலில் மயங்கி உழன்று வருந்த நேர்ந்த தீவினையை எண்ணி, அவர் மிகவும் ஆற்றாமை கொண்டார். அத்தீவினைக் குரிய கழுவாய், 'தொண்டர்களுக்கு மீளா அடிமை பூண்டு ஒழுகுவதே யாகும்' என்று தேர்ந்து தெளிந்தார். தொண்டர்களின் திரு வடித் தீர்த்தத்தையும், பாததூளியையும் புனி தப் பொருளாகத் தலைமேற் கொண்டு, போற்றி ஒழுகிவந்தார். அதனால் அவருக்குத் 'தொண்டரடிப் பொடி' என்னும் சிறப்புப் பெயர் அமைந்தது. திருவரங்கத்துப் பள்ளி கொண்டருளும் பெருமானை அல்லாது வேறு ஒன்றும் அறியாதவராய், அப்பெருமானிடமே அளவிலாத பக்தி பூண்டு பூமாலைத் தொண்டு கள் புரிந்து, நூற்றைந்து (105) வயதுவரை வாழ்ந்திருந்து, பின்னர் அவர் பரமபதம் எய்தினார்.

**திருமாலைப் பிரபந்தம்:**

ஸ்ரீவைணவ சமயத்தின் ஆழ்வார்கள் பன் னிருவருள் ஒருவராகிய தொண்டரடிப்பொடி யாழ்வார், அருளிச் செய்த நூல்கள் இரண்டு. ஒன்று திருமாலை. மற்றொன்று திருப்பள்ளி யெழுச்சி. திருப்பள்ளி எழுச்சி, பாம்பணைப் பள்ளிகொள்ளும் பரமனை வைகறையில் துயில் எழுப்பும் நிலையில் அமைந்த, பத்துப்(10) பாசுரங்கள் கொண்டது. திருமாலை என்னும் பிரபந்தம், பக்திச் சுவை ஊற்றெடுத்துப் பெருகி மிளிரும் சிறப்பு மிக்க, எளிய இனிய நாற்பத்தைந்து (45) பாசுரங்கள் கொண்டது. எவருள்ளத்தையும் கொள்ளைகொள்ளத் தக்க இனிமைச் சுவையுடையது ''திருமாலை அறி யாதார் பெருமாளை அறியார்'' என வழங்கி வரும் பழமொழியினால், இப்பிரபந்தத்தின் எல்லையற்ற பெருமையினை யாவரும் உணர லாம். அத்தகு சிறப்புமிக்க திருமாலை என்னும் சிறந்த பிரபந்தத்தின் தெய்விகப் பாடல்களை யும், இயன்ற வரையில் சுருக்கமாக அவற்றின் கருத்துக்களையும், இங்கு நாம் கற்று மகிழ் வோமாக!

காவலிற் புலனை வைத்துக்
கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட்டு உழிதர் கின்றோம்
நமன்மர் தலைகள் மீதே:
மூவுலகு உண்டு உமிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப்பு உடைமை கண்டாய்!
அரங்கமா நகர் உளானே! (1)

(பொழிப்புரை): திருவரங்கம் பெரியகோயி லில் எழுந்தருளியுள்ள பெருமானே! மூன்று உலகங்களையும், ஊழிக்காலத்தில் திருவயிற் றில் வைத்துப் பின்னர் வெளிப்படுத்தியருளிய முதல்வனே! உனதுதிருநாமத்தைக் கற்றதனால் ஏற்பட்ட பெருமித உணர்வினால், ஐம்பொறி களையும் உலகியற் பொருள்களில் மயங்கி ஓடாதபடி அடக்கிக் காவலில் வைத்து, தீவினை கள் ஆகிய பகைக் கூட்டம் விலகி ஓடும்படி எதிர்த்து, வெற்றி முழக்கம் செய்து, எமதூதர் தலைகளின் மேல் கால்களை வைத்து அழுத்தி, நாங்கள் மகிழ்ச்சியுடன் உலவுகின்றோம்.

(குறிப்புரை): முன்னே தம்மைக் காவலில் வைத்த புலன்களைத் தாம் இப்போது காவலில் வைத்து அடக்கினார். புலன்களை அடக்கினால் தீவினைகளை வெல்லலாம் ஆதலின், ''கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து'' என்றார். கலி- தீவினைகளாகிய கூட்டம்; கலியுகத்தின் கொடு மைகள் எனினுமாம். ''நாவல் இடுதல்''- தோற்றவர்கள் முன்னே நாவல் மரத்தின் கிளையை நட்டு, வென்றோர் வெற்றி முழக் கம் செய்தல்; அறைகூவுதல் எனினுமாம். ஆவ லிப்பு-பெருமிதத்தின்மேலீடு. இறைவனின் திரு நாமத்தை ஓதினால் எல்லா நலன்களும் எய்தப் பெறலாம் என்பது கருத்து.

'உழிதருகின்றேன்' என ஒருமையாகக் கூறற்பாலதனை, 'உழிதருகின்றோம்' என்று பன்மையாகக் கூறியது, 'நல்லார் ஒருவர் உள ரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்றபடி, நல்லவர் ஒருவரால், அவர் தொடர்புடைய எல்லோரும் நன்மை அடை வர் என்னும் உண்மையை உணர்த்திற்று. வாலிக்கு அஞ்சிக் கிடந்த சுக்கிரீவன், இராம பிரானின் தொடர்பும் துணையும் கொண்டத னால், வாலியைப் போருக்கு அறைகூவி அழைக் கத் துணிவு பெற்றான். அதுபோல, நமன் தமர்க்கு அஞ்சிக் கிடந்த ஆழ்வார், முதல்வ னின் நாமம் கற்ற ஆவலிப்புடைமையால், தம் மைச் சார்ந்தார் அனைவரோடும், நமன்தமர் தலைகள்மீது நாவலிட்டு உழிதரும் துணிவும், ஆற்றலும் பெற்றார் என்பது கருத்து.(1)

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர, யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகர் உளானே! (2)

(பொழிப்புரை): அரங்க மா நகர் உளானே: பசுமை நிறம் உள்ள பெரிய மலைபோன்ற திருமேனியையும், பவளம்போன்ற சிவந்த திரு வாயையும், சிவந்த தாமரை மலர்போன்ற திருக்கண்களையும் உடைய அச்சுதனே! தேவர் களுக்கெல்லாம் தலைவனே! இடையர் குலத் தில் தோன்றிய இளஞ் சிறுவனே! என்று சொல்லித் துதிக்கின்ற, இந்தச் சுவையை அல் லாமல், யான் இந்திரலோகம் சென்று அதனை ஆளுகின்ற அந்தச் சுவையைப் பெற்றாலும், அதனை யான் விரும்பமாட்டேன்.

(குறிப்புரை); பெருமாளின் பேரழகின் திறத்தைப் ''பச்சை மாமலைபோல் மேனி'' என்றும், ''பவளவாய்'' என்றும், ''கமலச் செங்கண்'' என்றும், தாம் அறிந்து அனுபவித்து அழுந்திய திறம் தோன்றப் புகழ்ந்துரைத்தார். அச்சுதன்-தான் என்றும் நழுவி விடாதவன்; தனது அன்பர்களை என்றும் நழுவவிடாதவன். ''போய்'' என்பதனால் போவதிலுள்ள அருமைப்பாடு சுட்டியவாறு. இந்திரலோகம்-பரமபதம். இந்திரன் - தலைவன். 'இந்திரலோகம் ஆளும் அச்சுவை' இனிதன்று என்னாமல், ''வேண்டேன்'' என்ற நுட்பம் உணர்ந்து மகிழத்தக்கது. வீட்டுலக இன்பத்தை வெறுத்துப் பழிக்க முற்படாமல், இறைவனின் திருநாமம் கூறித் துதித்தலில் தமக்குள்ள ஆர்வத்தை மட்டுமே, புலப்படுத்திய திறம் போற்றற்பாலது(2).

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்,
பாதியும் உறங்கிப் போகும்;
நின்றதிற் பதின் ஐயாண்டு
பேதை பாலகன் அது ஆகும்;
பிணிபசி மூப்புத் துன்பம்;
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகர் உளானே!

(பொழிப்புரை) : அரங்கமா நகர் உளானே! மனிதர்கள் வேதநூல் குறிப்பிட்டபடி, நூறு வயது வரை ஒருகால் வாழ்ந்திருப்பார்கள் ஆயினும், அவ்வயதில் பாதியாகிய ஐம்பது ஆண்டுகள் உறக்கத்தில் கழிந்துவிடும்: எஞ்சி நின்ற ஐம்பது ஆண்டுகள் அறிவில்லாத குழந்தை, பாலுண்ணும் சிறுவன், இளைஞர் என்னும் நிலைகளிலும், நோய்களிலும், ஐம்பொறி நுகர்ச்சிகளிலும், முதுமைத் தளர்ச்சியிலும், மற்றும் பலவகையான துன்பங்களிலும் கழிந்துவிடும். ஆதலால் யான் பிறவி எடுத்தலை வெறுக்கின்றேன். என்பிறவியை நீக்கியருள்க.

(குறிப்புரை): வேதநூல்-வேதமாகிய நூல், வேதங்களும் பிறநூல்களும் எனினுமாம். ''கொம்பில் அரும்பாய்க் குவி மலராய்க்காயாகி வம்பு பழுத்து உடலம் மாண்டுபோதலை'' யாவரும் காண்டலின், ஒரு சிலர் மட்டுமே அரியராக நூறாண்டு வாழப் பெறுவர் என்னும் அருமைப்பாடு தோன்ற ''மனிசர்தாம் புகுவரேனும்'' என்றார். 'உறங்க' என்னும் சொல், 'உறங்கி' என வந்தது. ''பதின் ஐயாண்டு'' (10+5) என்பது, ஐம்பது (50) ஆண்டுகள் என்னும் பொருளில் வந்தது. பேதை-அறிவில்லாத சிறு குழந்தை. பாலகன்-பாலுண்ணும் சிறுவன். கொடிய தீயவனின் பெயரை நாக்கினாற் கூறக் கூசி, ''அந்தப் பயல்'' என்று கூறுமாபோல, காம வயப்பட்டுத் திரியும் காளைப் பருவத்தினை இன்னதெனக் குறிப்பிட்டுக் கூற விரும்பாமல், காளைப் பருவத்தினை ''அதாகும்'' என்ற அழகு அறிந்து மகிழற்பாலது.(3)

மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத்து உடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே
பராங்கதி கண்டு கொண்டான்;
இத்தனை அடியர் ஆனார்க்கு
இரங்கும்நம் அரங்கன் ஆய
பித்தனைப் பெற்றும் அந்தோ;
பிறவியுட் பிணங்கு மாறே!

(பொழிப்புரை): திரண்டு வந்து நெருக்குகின்ற கொடிய தீவினைகளினுள் அகப்பட்டுக் கொண்டும், மூன்றெழுத்துக் கொண்ட திருநாமத்தால், மிகவும் கொடிய பாவியாகிய 'கத்திரபந்து' என்பவனும்கூட அல்லவா, பரமபதமாகிய மேலான வீடுபேற்று நிலையைக் கண்டு அனுபவிக்கப்பெற்றான். வெறுப்பின்மையாகிய ஒரு சிறு பண்புமட்டுமே உடையவர்களுக்கும் இரக்கத்தினால் அருள் புரிகின்ற, நம்முடைய அரங்கனாகிய பித்தனைத் தலைவனாகப் பெற்றிருந்தும், உலக வாழ்க்கையில் மயங்கி, ஐயோ நாம் வருந்துகின்ற தன்மை என்னே!

(குறிப்புரை): தேன்கூட்டை ஈக்களும், நெய்க்குடத்தை எறும்புகளும் சூழ்ந்து கொள்ளுதல் போல, கொடிய பாவங்கள் பற்றிக் கொண்டு வருத்துதலால் ''மொய்த்த வல்வினை'' என்றார். வினைகள் பற்றிக் கொள்ளுதல் திண்ணமாதலால், இறந்த காலத்தில் கூறினார். திருநாமம் இது என்று தெளிவாகச் சொல்லாமல், ''மூன்று எழுத்துடைய பேர்'' என்று குறிப்பாற் கூறினார். அப் பெயரை அறிய ஆர்வம் மேலிட்டு விரும்பிக் கேட்டவழி உணர்த்தலாம் என்னும் கருத்தால்; அஃதாவது ஒற்று நீக்கி எண்ண மூன்றெழுத்தால் வரும் 'கோவிந்தன்' என்பது.

கத்திரபந்து என்பவன், பாவியருட் பாவியாகிய கொடியவன். அத்தகையவனும், ஒருமுறை கோவிந்த நாமம் கூறி, அந் நல்வினைப் பயனால் வீடுபேறு அடைந்தான் என்னும் வரலாற்றை உள்ளிப் ''பராங்கதி கண்டு கொண்டான்'' என்றார். நாமும் அங்ஙனம் இறைவனின் திருநாமம் கூறி, எளிதில் உய்யலாம் என்பது கருத்து. பரகதி, பராங்கதி என வந்தது; மேலான நிலை, பரமபதம்! இறைவன் நம்மை ஆட்கொள்ள எப்போதும் விரும்பி எதிர்நோக்கி இருக்கின்றான். நாம் செயற்பாலது, அவன் செய்யும் அருளைப் பெறுவதில் வெறுப்பின்றி இருத்தலாகிய ஒன்றே யாகும். அஃது ஒன்றே உடையோரையும், இறைவன் காரணம் இன்றியும் வலிந்து வந்து, தன் கருணையினால் ஆட்கொள்ளுதலால்,''இத்தனை அடியரானார்க்கும் இரங்கும்'' என்றார். உம்மை தொக்கு நின்றது.

அரங்கன்பால் தமக்குள்ள அன்பும் பரிவும் உறவும் தோன்ற ''நம் அரங்கன்'' என்று சிறப்பித்தார். அடியவர்கள்பால் கொண்டுள்ள தனது எல்லையற்ற பரிவால், இது செய்யத்தகும், இது செய்யத்தகாது என்று எண்ணாமல், அவர்களை உயர்த்தித் தான் தாழ்ந்து எளிவந்து நிற்பவன் ஆதலின், அரங்கனைப் 'பித்தன்' என்றும், இத்தகைய தலைவன் ஒருவனைப் பெறுதலின் அருமையை நினைந்து வியந்து 'பெற்றும்' என்றும் கூறினார். பெறுவதற்குரியதனைப் பெற்றும் பயன்கொள்ள மாட்டாமல் பிணங்கி வருந்துவதனால், உலக மக்களை நோக்கி இரக்க மிகுதியினால் 'அந்தோ' என்று புலம்பி வருந்துகின்றார் (4)

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்
பெரியதோர் இடும்பை பூண்டு,
உண்டுஇராக் கிடக்கும் போதும்,
உடலுக்கே கரைந்து நைந்து,
தண்துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி ஆடித்
தொண்டுபூண்டு அமுதம் உண்ணாத்
தொழும்பர், சோறு உகக்கு மாறே!

(பொழிப்புரை): மனைவியரால் எல்லா இன்பங்களையும் நுகர்வதாகக் கருதி, உலக மக்கள் மிகப்பெரிய துயரங்களை யெல்லாம், தாமே வலிந்து பற்றித் தம்மேலிட்டுக் கொண்டு வருந்துகின்றனர். உண்ணவும் நேரமின்றி அலைந்துழன்று, இராக்காலத்தில் உண்கின்றனர். பின்னர் உறக்கம் மேலிட்டு வீழ்ந்து கிடக்கின்றனர். எப்போதும் நிலையற்ற இவ் உடலுக்காகவே கவலைப்பட்டு மனம் கலங்கி வருந்தியலைகின்றனர். குளிர்ந்த துளசி மாலையை அணிந்த மார்பை உடைய திருமாலுக்கு அடியவர்களாகி, அவன் குணங்களைப் பாடியும், அதனால் இன்பமேலிட்டு ஆடியும், தொண்டு செய்தலைக் கடைப்பிடித்து, அவனது அருளனுபவ நுகர்ச்சி அமுதத்தை உண்ண முயலாத இவ்வுலகமக்கள், சோற்றை விரும்பி உழல்கின்ற தன்மை என்னே!

(குறிப்புரை): நெருப்பை அணைந்து விடாய் தீர நினைப்பதையும், படமெடுத்தாடும் பாம்பின் நிழல்ல் ஒதுங்கி இன்பமுற நினைப்பதையும் போல, மனைவியரால் சுகங்கள் துய்க்க நினைப்போர், பின்னர்த் துன்பமே அடைந்து வருந்துதலால், ''பெரியதோர் இடும்பை பூண்டு'' என்றார். 'இடும்பை எய்தி' என்னாமல் 'பூண்டு' என்றது, கழுத்தில் இட்டுக் கொண்ட கலவடை பின்னர் எடுக்க இயலாமல் இடர்ப்படுத்துவதுபோல, இன்பம் என்று தாம் ஏறட்டுக் கொண்டவை, பிறகு விலக்க இயலாத துன்பமாய்க் கலக்கம் விளைவித்தலை உணர்த்தும். பெண்டிரால் சுகங்கள் உய்க்க நினைப்போர், அவர்தம் அன்பைப் பெறற்குப், பலவகைகளில் பொருள் தேடுவதற்குரியமுயற்சிகளில் ஈடுபட வேண்டுவது நேர்தலால், உணவு உண்ணுதற்கும் நேரமின்றி, இராக்காலத்திலேயே உண்ண நேர்தலைக் குறித்து 'உண்டு இரா' (இரா, உண்டு) என்றார்.

பகலெல்லாம் அலைந்து திரிந்த களைப்பால், இரவில் உண்ட உடனேயே உறக்கம் மேலிட்டு இருந்த விடத்திற்றானே சாய்ந்து விழுதலால், ''கிடக்கும்போதும்'' என்றார். அப்போதும் எப்போதேனும் உயிரைப் பற்றி நினைக்கும் வாய்ப்பின்றி, மீண்டும் மீண்டும் சூது களவு முதலிய சூழ்ச்சிகளால் பொருள் தேடுவதற்கே முற்பட்டு நிற்றலால், ''உடலுக்கே கரைந்து நைந்து'' என்றார். பாடுதலும் ஆடுதலும் இன்பத்தாலேயே நிகழும். அவ்வின்பம் இறைவான்பால் அடிமைப்பட்டோர்க்கே வாய்க்கும் என்பதை உணர்த்தத் 'தமர்களாய்ப் பாடி ஆடி' என்றும்; அதனை விரும்பி அடைபவர்களைக் கைவிடாது காப்பாற்றும் கருணை மிக்கவன் என்பதை உணர்த்தத் ''தண்டுழாய் மாலை மார்பன்'' என்றும் குறிப்பிட்டார்.

உடலுக்கு அழகுதரும் அணிகலன்போல உயிருக்கு நலம் விளைவிப்பது தொண்டே ஆதலை உணர்த்தத் ''தொண்டு பூண்டு'' என்றார். தொண்டு புரிதலில் தலைப்பட்டோர்க்கு, அத்தொண்டே சுவையும் நலமும் விளைத்து உயிரைக் காத்து இன்புறுத்துதலின், அதனை 'அமுதம்' என்றார். இத்தகைய அமுதமாகிய உயிர்க்குணவு இருத்தலை அறிந்து உண்ண முயலாது, உடலுக்கு உணவாகிய சோற்றை விரும்பி உழலும் அறிவில் மாக்களை 'அமுதம் உண்ணாத்தொழும்பர்' என்று இகழ்ந்தார். தொழும்பர்-நீசர். மண்ணை உண்ணாமல் சோற்றை உண்ண வேண்டுமென்று தெரிந்திருப்பவர்கள், உயிர்க்கு உணவானது இறைவனுக்குப் பணிபுரியும் அடிமைத் திறமே என்று உணர்ந்து கொள்ளாதது என்னே? என்னும் கருத்தில், ''தொழும்பர் சோறு உகக்கு மாறே'' என்கின்றார். (5)

—தொடரும்

## பாஞ்சராத்திரம்

பாஞ்சராத்திரம் என்னும் ஆகமத்தைப் பின்பற்றி ஒழுகும் வைணவப் பெருமக்களுக்குப்பாஞ்சராத்திரிகள் என்பது பெயர். இப்பெயரை அருள்நந்தி சிவாசாரியார், தம்முடைய சிவஞான சித்தியாரின் கண் வழங்கியிருத்தல் காணலாம். பாஞ்சராத்திரம் எனப் பெயர் அமைந்தமைக்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன.

(1) சாங்கியம் யோகம் பௌத்தம் ஆருகதம் காபாலம் என்னும் கொள்கைகளைக் கூறும் ஐந்து நூல்களையும் தன் முன்னே ஒளியிழந்து இருள் அடையுமாறு செய்வது.

(2) ஞாயிற்றின் முன்னிலையில் இரவானது (ராத்திரி) வலிமைக் குறைவு (பஞ்சத்வம்) அடைந்து அழிதல் போல, தன் முன்னிலையில் பிறமதக்கொள்கைகளும் நூல்களும் சிறப்பிழந்து அழியச் செய்வது.

(3) ஐந்து வகையான அறிவு (ராத்ரா) நிலைகளை யுணர்த்துவது.

(4) அஞ்ஞானம் (ராத்ரா) அழிவு (பஞ்சத்வம்) அடையும்படி செய்வது.

(5) பரம் விபவம் வியூகம் அவதாரம் அர்ச்சை என்னும் இறைவனின் நிலைகள் ஐந்தையும் உடன்பட்டு, உணர்த்துவது.

(6) கடவுளை உணர்தலினால் அங்ஙனம் உணர்ந்த மாத்திரத்திலேயே, நாம் நம்முடைய ஐம்பொறிகளினால் நிகழும் அஞ்ஞானங்கள் நீங்கி உய்யப் பெறலாம் என்று உரைப்பது.

(7) இறைவன் ஐந்து இரவுகளில் அனந்தன் கருடன் விஷ்வக்சேனன் பிரமன் உருத்திரன் என்பவர்களுக்கு உணர்த்தியருளியது.

(8) இறைவன் தன்னுடைய பஞ்ச ஆயுதங்களின் அம்சமாகத் திகழும் சாண்டில்யர் ஔபகாயனர் மௌஞ்ச்யாயனர் கௌசிகர் பாரத்துவாஜர் என்னும் ஐந்து பெரு முனிவர்களுக்கு உபதேசித்தது.

—ஆசிரியர்.

# சிவஞானபோதச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

''உளது இலது என்றலின், எனது உடல் என்றலின், ஐம்புலன்-ஒடுக்கம் அறிதலின். கண்படில் உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின், மாயா இயந்திர தனுவினுள். ஆன்மா''

—மூன்றாம் சூத்திரம்
சிவஞானபோதம்.

**முன்னுரை :**

இந்நாளில் அறிவியல் மிக விரைவாகப் பெரிதும் வளர்ந்து வருகின்றது. பெரும்பாலான மக்களிடையே கல்வியறிவும் பரவிப் பெருகி வருகின்றது. இந்நிலையில் மக்கள் தம்அறிவின் துணைகொண்டு எத்தனையோ பலப்பல புதுப் பொருள்களை அறிந்தும், ஆராய்ந்தும், கண்டு பிடித்தும் வருகின்றனர். இவை அனைத்தும் புறமுகமாக ( Objective ) நிகழ்த்தப்படு கின்றனவே யன்றி, அகமுகமாக (Subjective) ஏதும் நிகழவில்லை. அதன் காரணமாக எவ் வெவற்றையோ அறிந்து கொள்ள முயன்று வரும் மனிதன், 'நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை ஆர் அறிவார்?'' என்று தனக்குத் தானே வினவவும், அதற்குரிய விடையினைக் கண்டறிந்து பயன்பெறவும் முயலவில்லை. 'ஒருவன் உலகத்தையெல்லாம் உரிமையாகப் பெற்றாலும், தன் உயிரை இழப் பானேல், அவன் அடையக்கூடிய நன்மையாது?'. ஒன்றும் இல்லை அன்றோ?

மனிதன் தன்னைப் பற்றியும், உயிரைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுவது, மிகவும் இன்றியமையாததாகும். ''உன்னை நீ நன்கு உணர்ந்து கொள்'' என்ற உபதேசம் எக்காலத் துக்கும் எவருக்கும் ஏற்றதொன்றாகும். பிற எல்லாப் பொருள்களையும் அறிந்து கொள்ள முயலும் மனிதன், முதற்கண் தன்னைப்பற்றி ஓரளவாதல் ஆராய்ந்துணர்ந்து கொள்ளுதல், மிகமிக முதன்மையானது. பேரறிஞர் அலெக் ஸிஸ் காரல் (Alexis Carrel) தம்முடைய நூல் ஒன்றில் (Man, the unknown), இக்கருத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார்.(2).

இவ்வாறே சர். ஜான் டேவிஸ் என்னும் பேரறிஞரும், 'நாம் உலகில் எல்லாப் பகுதி களையும் அறிந்து கொள்ளுகின்றோம். வெப்ப மண்டலங்களைக் கடக்கின்றோம். குளிர்ந்த துருவ மண்டலங்களுக்கும் சென்று காண்கின் றோம். ஆனால் நம் வீட்டுக்குள்ளாகத் திரும் பும்பொழுது, நம்மை நாமே அறிந்து கொள் ளாமலும், நம்முடைய ஆன்மாவினையே நாம் அறிமுகம் செய்து கொள்ளப்பெறாதவர்களாக வும், இருக்கின்றோம். இஃது எவ்வளவு இரங் கத் தக்கது?'' என்று வருந்திக் கூறுகின்றார். (3)

நம் நாட்டில் ஏதும் கல்லாத சிறிய குழந் தைகள்கூட, உடல்வேறு-உயிர்வேறு,- உள்ளம் வேறு என்பன போன்ற பல தத்துவ நூலுண்மை களை இயல்பாக உணர்ந்திருக்கின்றன. வழி வழியாக எத்தனையோ பலநூற்றாண்டுகளாக, நம் இந்திய நாட்டுச்சான்றோர்கள் கண்டறிந்து உணர்த்தியருளிய தத்துவ நூலுண்மைகள், நம் நாட்டுச் சிறு குழந்தைகளின் உள்ளத்திலும் கூட, இயல்பாக ஆழ்ந்து படிந்து, அவற்றின் குருதியிலும்கூடக் கலந்து ஒன்றி இயைந்து விட்டிருக்கின்றன. அதனால் நம் நாட்டு இளஞ் சிறுவர்கள்கூட, உடல் - உயிர் - கன்மம் - மறு பிறப்பு-ஊழ்வினை என்பன பற்றி, ஓரளவே னும் தெளிவாக அறிந்துள்ளார்கள்.

ஆனால் இவ்வெளிய உண்மைகள், பிற நாடுகளில் பேரறிஞர்கள் என்று பெயரும் புக ழும் பெற்று விளங்குபவர்களுக்கும்கூட, ஒரு

---

(1) "What is a man profited, if he shall gain the whole world, and lose his own soul"?
—*St. Matthew; 16, 26*

(2) "Man, the Unknown".
—*Dr. Alexis Carrel.*

(3) "We that acquaint ourselves with every zone, and pass both tropics and behold the poles, when we come home we are to ourselves unknown and unacquainted still with our own souls".
—*Sir. John Davies*

சிறிதேனும் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, உலகப் புகழ் பெற்றவர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், ''தாம் இறையிலார்களுள் ஒருவர் அன்றெனினும், தெளிவிலார்களுள் ஒருவரே என்றும், சித்து-சடம் எனப்படும் பொருள்கள் உண்மையிலேயே இருப்பவையாகத் தாம்கருதவில்லை'' என்றும் குறிப்பிடுகின்றார்.(4)

இதனை ஒருசிறிது ஊன்றிக் கருதியுணர்ந்தால், நாம் நம் நாட்டுத் தத்துவ ஞானிகளின் தகுதியும் சிறப்பும் எத்தகையன என்று உணரலாம். பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்றவர்களே ஐயுறவு கொள்ளும் நிலையிலுள்ள உயிரின் இயல்பு (ஆன்ம இலக்கணம்) குறித்து, நம்நாட்டுத் தத்துவ ஞானிகள் பலரும் ஆராய்ந்து கண்ட அரும்பெரும் கொள்கைகளை, இயன்றவரை இங்கு ஒருசிறிது மிகச் சுருக்கமாகக் காண்போம்.

**பல்வேறு கொள்கைகள்:**

பழைய காலத்தில்-முதன் முதலில் -மனிதர்கள் அறிவு பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், நெடுங்காலம் நீளநினைந்து சிந்தித்துப் பற்பல முடிவுகளுக்கு வந்தனர். அவரவர்கள் தத்தம் அறிவாராய்ச்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு கொள்கையினைக் கூறினர். அங்ஙனம் மக்கள் பலரும் சிந்திக்கத் தொடங்கி, ஆராய்ந்து கண்ட அரிய பல வெவ்வேறு கொள்கைகளைப்பற்றிய குறிப்புக்கள், நம் நாட்டுச் சமய தத்துவ நூல்களிற் காணப்படுகின்றன. மனிதசிந்தனையின் வளர்ச்சியும், அறிவாராய்ச்சித் திறனின் செழிப்பும், எங்ஙனம் படிப்படியே ஓங்கியுயர்ந்து பெருகிச் சிறந்திருக்கின்றன என்பதனை, உயிரின் இயல்பு பற்றி விளக்கும் பல்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள், நமக்கு நன்கினது உணர்த்துகின்றன. அவைகளைச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் காண்போம்.

*(1)* ஆன்மா என்பதொரு பொருளில்லை; அது வெறும் சூனியமே என்று கூறுவர், சூனியான்மவாதிகள்.

*(2)* தேகமே ஆன்மா; தேகத்தின் வேறாக ஆன்மா எனபதொன்று காணப்படவில்லை என்பர், தேகான்மவாதிகள்.

*(3)* மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும ஐந்து இந்திரியங்களே ஆன்மாஎன்பர், இந்திரியான்மவாதிகள்.

*(4)* மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களே ஆன்மா என்று சொல்லுவர், அந்தக்கரணான்மவாதிகள்.

*(5)* புரியட்டதேகம் அல்லது நுண்ணுடல் என்னும் சூக்கும தேகமே ஆன்மா என்று சொல்லுவர், சூக்கும தேகான்மவாதிகள்.

*(6)* நம்மால் உள்ளே இழுத்தும், வெளியே விடுத்தும் உயிர்க்கப்பெறும் பிராணவாயுவே ஆன்மா என்று கூறுவர், பிராணான்ம வாதிகள்.

*(7)* எல்லாப் பொருள்களையும் இயக்கி நின்று தொழிற்படுத்தும் கடவுள் ஆகிய பிரமம் தான்,ஆன்மா என்று புகல்வர், பிரமான்மவாதிகள்.

*(8)* அற்றன்று; தேகம், இந்திரியம், அந்தக்கரணம், சூக்குமதேகம், பிராணவாயு என்னும் இவையாவும் கலந்து நின்ற திரட்சியாகிய சமுதாயம்தான், ஆன்மா என உரைப்பர், சமுதாயான்மவாதிகள்.

*(9)* ஆன்மாவானது பிரமப்பொருளின் பரிணாமமாகத் தோன்றி, அறிவு, இச்சை, செயல்களை அடைந்து, தீயும் சூடும் போலப் பேதாபேதம் ஆகிய குணகுணித் தன்மைகளையுற்றுப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்பர், பரிணாமவாதிகள்.

*(10)* ஆன்மாவானது குணகுணித் தன்மை இல்லாமல், முழுவதும் அறிவு மாத்திரையாய் நிற்கும் என்பர், சாங்கிய நூலார்.

*(11)* ஆன்மா என்பது அருவம் அன்று, உருவப்பொருளே என்பர், பௌராணிக மதத்தினர்.

*(12)* ஆன்மா உருவப்பொருள் அன்று; ஒருவாற்றாற் காணப்படுதலும், ஒருவாற்றாற் காணப்படாமையும் உடைய அருவுருவப் பொருள் எனக் கட்டுரைப்பர், கவுளமதத்தினர்.

*(13)* ஆன்மா என்பது ஆகாசம் போல அருவமாய் அவிகாரமாய் இருக்கும் என்று பகர்வர், பாதஞ்சலர்.

*(14)* ஆன்மா என்று சொல்லப்படுவது, சடப்பொருளாய் நின்று, அறியும் தன்மை பெறும் என இயம்புவர், வைசேடிகர்.

*(15)* ஆன்மா சித்துப் பொருள்தான்; சடப்பொருள் அன்று என்று மொழிவர், பட்டாச்சாரியர்.

*(16)* ஆன்மாவானது உடம்பினுள்ள பரமாணு அளவினதாய் இருக்கும் என உரைப்பர், பாஞ்சராத்திரிகள்.

*(17)* உடம்பினுள்ளே, புல் நுனிமிற் பனித் துளிபோல ஏகதேசமாய், இதயத் தானத்தில் நின்று, தன் அறிவு விளக்கொளியைப் போல

(4) "Many Agnostics (including myself) are quite as doubtful of the body as they are of the soul but this is a long story taking into difficult metaphysics. Mind and Matter alike, I should say, are only convenient symbols in discourse not actually existing things".

—What is an Agnostic,
*—Dr.Bertrand Russel.*

எங்கணும் வியாபித்துப் பரவியிருப்பது ஆன்மா என்பர், மிருதிநூலார்.

*(18)* உடம்பு முழுவதும் நிறைந்து, சிறிய உடம்பிற் சிறியதாயும்; பெரிய உடம்பிற் பெரியதாயும், விளங்குவது ஆன்மா என்று விளம்புவர், சமணர்கள்.

*(19)* இறைவனைப் போலவே எங்கணும் வியாபித்துப் பரவி நின்று அறிவது ஆன்மா என அறிவுறுப்பர், ஐக்கியவாதக் கொள்கையினர்.

**சைவசித்தாந்தம் :**

இங்ஙனம் உயிரின் இயல்பு பற்றிப் பலரும் பலவகையிற் கூறும் கொள்கைகளை யெல்லாம் சைவசித்தாந்தம் பொறுமையுடன் கேட்டுக் கொள்கின்றது. அவைகளுக்கு உரிய மதிப்புக் கொடுத்து, நன்கினிது சிந்தித்துப் பார்த்து ஆராய்கின்றது. அவைகள் எங்ஙனம் பொருந்தாதன என்று காரணம் காட்டி விளக்குகின்றது. பின்னர் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, சிறந்த புதிய பொருத்தமான கொள்கையினையும், அறிவு நெறிக்கு இணங்க ஆராய்ந்துகாட்டி நிறுவுகின்றது. இதுதான் மெய்கண்டநூல்கள் கூறும் சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருங் கொள்கையின் சிறப்பியல்பு ஆகும்.

இச் சிறப்பியல்பினையே ''புறச் சமயத்தவர்க்கு இருளாய்-அகச் சமயத்து ஒளியாம் சிறப்பினதாய்-வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்'' எனவும்; ''நிலவு உலகாயதாதி நிகழ்சிவாத்துவிதாந்தத்துக் குலவினர் அளவளாவாக் கொள்கையதாகி, வேதத்தலை தரு பொருளாய்-இன்பாய்த் தாவில் சற்காரியத்தாய்-மலைவறும் உணர்வு'' எனவும்; சான்றோர்கள் வியந்து போற்றியருளினர்.

இத்தகைய சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருந் தத்துவம், 'ஆன்ம இலக்கணம்' பற்றி, மேற்குறித்த கொள்கையாளர்கள் பலரும் கூறும் கருத்துக்களை, எங்ஙனம் ஆராய்ந்து விளக்குகின்றது என்பதனை, ஈண்டுச் சிறிது காண்போம்.

**பற்பல கொள்கைகளைப் பற்றிய ஆராய்ச்சி :**

*(1)* ஆன்மா என்பதொன்று இல்லை எனக் கூறுபவரும், அங்ஙனம் வாளா கூறுதல் அமையாது. உடல் பொறி விடயம் அனைத்தையும் இஃது ஆன்மாவன்று, இஃது ஆன்மாவன்று என ஒரோவொன்றாக ஆராய்ந்து கண்டு கழித்த பின்னரே, ஆன்மா என்பது சூனியம் என்பர். ஆனால் இங்ஙனம் உடல் பொறி விடயம் அனைத்தினையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்து, அன்று, அன்று எனக் கழித்து முடிவு செய்யுங்கால், அங்ஙனம் முடிவு செய்து நிற்பதாகிய அறிவு ஒன்று இருத்தலின், அதுவே ஆன்மா எனக் கொள்ளுதல் சாலும். அவ்வறிவு தானும் சூனியமே எனின், அஃது 'என்னை ஈன்றாள் மலடி'' என்பதோடு ஒக்கும். ஆதலின், சூனியான்ம வாதிகள் கூற்றுப் பொருந்தாது.

*(2)* உலக வழக்கில் யான் வளர்ந்தேன்-யான் மெலிந்தேன்-யான்மனிதன்-யான் மறையவன் என்று உடம்பின் பண்புகளை உபசாரம் பற்றி உயிருக்கு ஏற்றி வழங்கினும், யான் உடம்பு-யான்கை-யான்கால் என்று உடம்பினை அவ்வாறு வழங்குவார் இலர். எனதுடல்-எனதுகை-எனதுகால் என வேற்றுமைப் படவே யாவரும் வழங்கக் காண்கின்றோம். எனவே, உடம்பின் வேறாக உயிர் என்பதொரு பொருள் உண்டு என்பது புலனாகும். ஆதலின் தேகான்மவாதிகள் கூற்றுப் பொருந்தாது.

*(3)* மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளுள், ஒவ்வொரு பொறியும், ஒவ்வொரு புலனையே அறிய வல்லதாக உள்ளது. ஒரு பொறி அறிவதனை மற்றொரு பொறிஅறிய முடிவதில்லை. எனவே ஐம்பொறிகளையும் தனித்தனியே இயக்கி, அவ்ஐம்பொறிகளாலும் ஐம்புலன்களையும் அறிந்து பயன் கொள்வதாகிய ஆன்மா, இவற்றின் வேறாக உண்டு என்று தெளியப்படுதலின், இந்திரியான்மவாதிகள் கருத்தும் ஏற்புடைத்தன்று.

*(4)* ஐம்பொறிகளும் ஒடுங்கின கனவு நிலையில் இயங்கும் சூக்கும தேகமே ஆன்மாவாயின், கனவு கண்ட சூக்கும உடம்பே நனவின்கண் அதனை அறியுங்கால், தான் கண்டவாறே தெள்ளுற அறிதல் வேண்டும். அவ்வாறின்றி மயங்கியறிதலையே காண்கின்றோமாதலின், நனவில் இயங்கும் தூலதேகமும், கனவு காணும் சூக்கும தேகமும் ஆகிய இரண்டிற்கும் வேறுபட்டு, ஆன்மா என்பதொன்றுண்மை தெளியலாம். இவ்வாற்றாற் சூக்குமதேகான்மவாதிகள் சொல்லுவதும் செவ்விதன்று.

*(5)* உறக்கம், விழிப்பு என்னும் இருதிற நிலைகளிலும், பிராணவாயு ஒரு தன்மையாகவே இயங்கிக் கொண்டு நிற்கின்றது; ஆயினும்உடம்புக்கு விழிப்பு நிலையில் மட்டுமே இன்ப துன்ப நுகர்ச்சியுள்ளது. உறக்க நிலையில் அவை இல்லை. ஒரு தன்மையே இயங்கி நிற்கும் பிராணவாயு இவ்வேறுபாட்டுக்குக் காரணமாதல் அமையாது. எனவே பிராணவாயுவின் வேறாக ஆன்மா உண்டு என்பது திண்ணம். இவ்வாற்றாற் பிராணான்மவாதிகள் கூற்றும் பிழைபடுகின்றது.

*(6)* இனி, அறிவுப் பொருள் ஆகிய பிரமம்தான், ஆன்மா ஆகும் எனின், எக்காலத்தும் திரிவின்றி அறிந்தாங்கு அறியவல்ல பேரறிவுப் பொருள் ஆகிய பிரமமும், அறியாமலும், ஒரு சிறிதே அறிந்தும், அறிந்ததனையும் அடிக்கடி மறந்தும், மயங்கி வருந்தும் நிலையினதாகிய ஆன்மாவும், இருளும் ஒளியும்போலத் தம்முள் வேறுபட்டன என்பது வெள்ளிடை விலங்கல். இதனால் பிரமான்மவாதிகள் கருத்தும் பிழையேயாம்.

*(7)* தேகம் இந்திரியம் அந்தக்கரணம் பிராணவாயு என்பன தனித்தனியே வெவ்வேறு பெயர் பெறினும், அவையெல்லாம் சேர்ந்த திரட்சி நிலையே, ஆன்மா எனக் கொள்ளலாம்

எனின், தனித்தனியே வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன பலவும் ஒன்றாகச் சேர்ந்து திரண்ட வழியும், அத்திரட்சிக்கு ஆன்மா என்னும் பெயர் யாண்டும் வழங்கவில்லை. மேலும் அங்ஙனம் திரண்ட பொருள்கள் அனைத்தும் மாயா காரியப் பொருள்கள் ஆகும். நித்தப் பொருள் ஆகிய ஆன்மா, அநித்தப் பொருள்களின் திரட்சியன்று என்பது தேற்றம். எனவே சமுதாய ஆன்மவாதிகள் கொள்கையும் தகுதியுடையதன்று.

*(8)* மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கனுள், ஐம்பொறிகள் அறிந்த புலனைச் சித்தம் சிந்தித்தறியும். மனம்,பற்றிச் சங்கற்பவிகற்பம் செய்யும். ஆங்காரம் ஒருப்பட்டு எழும், புத்தி நிச்சயிக்கும். ஆனால் இவைகள் முறையே யான் சிந்தித்தேன், பற்றினேன், ஒருப்பட்டெழுந்தேன், நிச்சயித்தேன் என்று அறியும் தன்மையுடையன அல்ல. இங்ஙனம் தம்மை நோக்கச் சித்தாகாத அந்தக் கரணங்களின் வேறாய்த், தன்னை நோக்கியும் பிறவற்றை நோக்கியும் சித்துப் பொருள் எனத்திகழும் ஆன்மா என்பதொரு பொருள் உண்டு. அதுவே இவ்வந்தக் கரணங்களுடன் கூடி அவற்றினாலாய பலனை அடைகின்றது என்பது புலனாகும். ஆதலின் அந்தக் கரணான்மவாதிகள் கருத்தும் பொருத்தமன்று.

*(9)* பேரறிவுப் பொருளாகிய பிரமத்திற்கும், கருவிகளின் துணையின்றி ஒன்றனையும் அறியமாட்டாத சிற்றறிவுப் பொருளாகிய சீவான்மாவுக்கும் இடையே பெருவேறுபாடு காணப்படுதலால், பிரமப் பொருளின் பரிணாமமே ஆன்மா என்னும் பரிணாம வாதிகள் கொள்கை பொருந்துவதன்று.

*(10)* உயிரின்பால் அறிவு, இச்சை,செயல் என்னும் மூவகைக் கூறும் நிகழக் காண்டலின், ஆன்மா கேவலம் அறிவு மாத்திரையாய் விளங்குவது என்னும் சாங்கியர் கருத்தும் தகுதியுடையதன்று.

*(11)* காட்சிப் புலனாதலும், பரிணமித்து அழிதலும் இல்லாத உயிரை, உருவப் பொருள் என்று பவுராணிகர்கள் பகர்வது பிழையேயாகும்.

*(12)* அருவம் உருவமாயும், உருவம் அருவமாயும் ஒன்று பிறிதொன்றாக மாறாதாகலானும், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்பால் இயல்பாக உளவாகா ஆகலானும், ஆன்மாவினை அருவுருவப் பொருள் என்று கூறும் கவுளர் கருத்தும் ஏற்புடையதன்று.

*(13)* உயிரானது உடம்பினை யாத்து நின்று ,அதனைப் பலவகைகளில் ஆட்டி இயக்கி நடிக்குமாறு செய்து வருகின்றதாதலின், அதனை ஆகாசம்போல் அருவாய், அவிகாரியாய் நிற்பது எனப் பகரும் பாதஞ்சலர் கொள்கையும் பாங்குடைத்தன்று.

*(14)* சடப்பொருள் சித்தாதலும், சித்துப் பொருள் சடமாதலும் உலகத்து யாண்டும் இன்மையால்,உயிரைச் சடப்பொருள் என்றும், அது பின்னர் மனத்தோடு கூடிச் சித்தாகி அறியும் என்றும் கூறும் வைசேடிகர் கொள்கையும் ஒப்பத்தக்கதாக இல்லை.

*(15)* மாறுபட்ட இரண்டு தன்மைகள், ஒரு பொருளின்கண் ஒருகாலத்து ஒருங்கே இயல்பாக அமைந்திராவாகலின், உயிரைச் சித்து-அசித்து-என இரண்டுமாகக் கருதும் ஒரு சிலர் கருத்தும் பொருத்தம் ஆகாது.

*(16)* அசித்து ஆகிய ஐம்பொறிகள், அந்தக் கரணங்கள் முதலிய கருவிகளின் துணையில்லாமல், உயிரானது எதனையும் அறியமாட்டாமல் இருத்தலின், அதனைச் சித்து என்று பகரும் பட்டாச்சாரியர், மதமும் அடாது.

*(17)* உடலின்கண் உள்ள எத்தனையோ பல துளைகளுள் ஒன்றன் வாயிலாக நில்லாமல் ஓடிப்போம் ஆதலாலும், உடலின்கட் கிடந்து கட்டுண்ணவும், பாரம் தாங்கிச் செல்லவும் உடன்படாது ஆதலாலும், உயிரானது உடலின்கண் பரமாணு அளவிற்றாய் நிற்பது,என்றுரைக்கும் பாஞ்சராத்திரிகள் கூற்றும் அமையாது.

*(18)* உயிரானது உடலின் ஒரு பகுதியில் இருப்பதெனின், உருவப்பொருள் என்றதற்குரிய குற்றம் அனைத்தும் நேருமாதலானும், குணம் குறியளவில் அன்றி அதற்குமேற் செல்ல வல்லது அன்றாகலானும், ஒளியானது விளக்கின் சூக்கும வடிவேயன்றிக் குணம் அன்றாகலான், அஃது ஈண்டைக்கு உவமையாகாமையானும், விளக்கொளிக்கும் உயிரறிவுக்கும் இடையே வேற்றுமை பெரிதுண்டு ஆகலானும்,உயிரானது உடம்பகத்துப் புல் நுனித்துளிபோல ஏகதேசமாய் இதயத்தானத்தின் நின்று, விளக்கொளி போல யாண்டும் தன் அறிவு வியாபிக்கப்பெறுவது என்ற மிருதிநூலார் கூற்றும் ஏற்புடைத்தாகக் கருதப்படுகின்றிலது.

*(19)* உயிரானது உறக்கம் கனவு முதலிய அவத்தைகளை உறுதலாலும், ஐம்பொறிகளிலும் அறிவானது ஒரு காலத்து ஒருங்கே உடன் நிகழாமையாலும், சிறிய உடம்பிற் பேரறிவும், பேருடம்பிற்சிற்றறிவும் நிகழக் காண்டலாலும், உறுப்புக் குறைபட்ட வழி உயிரும் குறைபட்டதாகத் தோன்றாமையாலும், உடம்பளவில் நிறைந்து நின்று உணர்வது உயிர் எனச் சாற்றும் சமணர் கொள்கையும், தகவுடையதாகத் தோன்றவில்லை.

*(20)* உடம்பின்கட் கட்டுண்டு கிடத்தலாலும், தத்துவங்களின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப ஐந்தவத்தைகள் மாறி மாறி வருதலாலும், ஐம்புலன்களையும் ஒருங்கே யுணர வொண்ணாமல் ஒவ்வொன்றாகச் சுட்டியே யுணர்ந்து வருதலாலும், இறைவனைப்போல எங்கணும் வியாபியாய் நின்று அறிவது ஆன்மா என்று கூறும் ஐக்கியவாதிகள் கொள்கையும், அறிவுக்கு இயைந்ததாக இல்லை.

உயிரானது உள்பொருள், சூனியமன்று. உடல் அறிவற்ற சடமாதலின், பருவுடல் உயிரன்று. கனவு நிலையில் இயங்கும் நுண்ணுடலும் உயிரன்று; ஏனெனில், அது நனவு நிலையில் இயங்கக் காண்கிலம். ஐம்பொறிகளும் உயிரன்று. ஏனெனல் அவை ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறிவதில்லை. அந்தக் கரணங்களும் உயிரெனல் அமையாது; எற்றுக்கு எனில், அவை தத்தமக்குரிய தொழிலைச் செய்யுமேயன்றி, 'யான் இதனைச் செய்தேன்' என்று உணர்தற்குரிய தன்மை, அவற்றுள் ஒன்றற்கும் இல்லை. எனவே இவற்றிலெல்லாம் வேறாக, உயிர் (ஆன்மா) என்பதொன்று, தனியே உள்ளது. இதனைப் பசு, ஆன்மா, சீவன் என்று பலவகைகளில் நூல்கள் கூறும். ஒரு சிலர் ஓர் உயிரே உண்டு என்று ஏகான்மவாதம் (Monism) செய்வர். அது பொருந்தாது. ஒருவருக்குற்ற இன்பமோ கவலையோ பிறர்பால் செல்லாமையின், ஒவ்வோர் உடலிலும் தனித்தனியே ஒவ்வோர் உயிர் உள்ளது என்பது புலனாகும். எனவே, உயிர்கள் எண்ணற்றனவாக உள்ளன என்பது தெளிவு.

இத்தகைய உயிர்கள் அருவாய், அறிவாய், நித்தமாய், வியாபகமாய் உள்ளன. அவைகள் ஆணவமலத்தால்பற்றப்பட்டு இருளில் அழுந்திக் கற்போலச் செயலற்றுக் கிடக்கின்றன. இந்நிலை புலம்பு (கேவலம்) எனப்படும். இறைவன் தன் பெருங்கருணையினால் ,இருளில் செல்வோர்க்குத் துணையாகக் கைவிளக்கு அளிப்பது போல, மாயையினின்று உடல் கருவி உலகு நுகர்ச்சி (தனு கரண புவன போகம்) என்பவற்றைப் படைத்து உதவுகின்றான். தம்பால் இயல்பாக அமைந்து கிடந்த மூல கன்மத்திற்கு ஏற்ப, உயிர்கள் உடல் கருவி உலகு நுகர்ச்சி ஆகிய வற்றைப் பெறுகின்றன. உடல் கருவி உலகு நுகர்ச்சியையும், இச்சை ஞானக் கிரியைகளையும் பெற்றுப் புண்ணிய பாவங்களைச் செய்கின்றன. அவற்றிற்கு ஏற்பப் பலவேறு பிறவிகளையும், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்னும் அவத்தைகளையும் அடைகின்றன. இந்நிலை புணர்வு (சகலம்) எனப்படும். இதன் பின்னர் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகியவற்றை அடைந்து, குருவருளினால் சிவஞானம் கைவரப்பெற்று, மும்மலங்கள் நீங்கி, இறைவனின் திருவடிப்பேறு எய்துதல் புரிவு (சுத்தம்) எனப்படும்.

''கேவலம் சகலம் சுத்தம் என்று
மூன்று அவத்தை ஆன்மா
மேவுவன்; கேவலம் தன்னுண்மை;
மெய்பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனாம்;
மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம் உடையன்
உற்பவம் துடைத்தே''

—சிவஞானசித்தியார்.

ஆன்மாக்களுக்குக் காரணசரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், தூலசரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றிற்கு முறையே ஆனந்தமய கோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம் எனவும் பெயர்கள் வழங்கும். சரீரம்-உடல். கோசம்-உறை.

(1) அசுத்த மாயா தத்துவம் ஏனைத்தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும் காரணமாக இருத்தலால், அதனில் உண்டாகிய சரீரம் காரணசரீரம் என்றும், அச் சரீரம் பெற்ற அளவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்ற ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொதுவகையில் விளக்கமுற, அவ்வளவில் அம்மயக்க அறிவால் ஓர் ஆனந்த உணர்ச்சி நிகழ்தலின், அஃது ஆனந்தமயகோசம் என்றும் பெயர்பெறும்.

(2) காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும், ஆன்மாவுக்கு ஐந்து சட்டைகளைப் போன்று இருத்தலால், அவற்றால் உண்டாகிய சரீரம் கஞ்சுக சரீரம் என்றும்; அச் சரீரத்தால் ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல்கள் சிறப்புவகையால் விளக்கமுற்று விடயபோகங்களை அறியும் இயல்பும் ஆற்றலும் பெறுமாதலின், அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம் விஞ்ஞானமய கோசம் என்றும் பெயர் பெறும்.

(3) சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களாகிய சரீரம், குணசரீரம் என்றும், அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக்கரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின், அது மனோமயகோசம் என்றும் வழங்கப் பெறும்.

(4) சூக்கும பூதங்களாகிய தன்மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுவடிவினதாய் இருத்தலின், சூக்கும சரீரம் என்றும்; அச்சூக்கும சரீரம் பிராணன் என்னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்கும் காலத்தும் அப்பிராண வாயுவோடு கூடியே நீங்குதலாலும், பிராணமயகோசம் என்றும் சொல்லப்படும்.

(5) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் தூல பூதங்களால் உண்டாகிய சரீரம் தூல சரீரம் என்றும்; அஃது உணவால் வளர்க்கப்படுதலின், அன்னமயகோசம் என்றும் கூறப்படும். ஆன்மாவானது இந்த ஐந்து கோ கோசங்களில் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவதுவாகவும் நின்று அவற்றைச் செலுத்தும்.

ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராணமய கோசம், அன்னமயகோசம் என்னும் ஐந்தும், மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவனவாகும். ஆனந்தமய, விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவை. ஆதலின், தோற்பாவையைப் போலும். மனோமய, பிராணமய

கோசங்கள், முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையவை. ஆதலின், அவைகள் மரப் பாவையை ஒக்கும். அன்னமயகோசமாகிய தூல சரீரம் மிகவும் பருமை வடிவமுடையதாக லின், ஏனைய நான்கிலும் பருமையும் வலிமை யும் பெற்றிருக்கும். அதற்குத் தேர் உவமை யாகக் கூறப்படும்.*

மருவு ஆனந்தம் விஞ்ஞானம்
மனோ பிராணன் அன்னமயம்
உருவாம் தன்மை உண்டாய் முன்
ஒன்றுக்கொன்று சூக்குமமாய்
வரும்ஆம்; அன்ன மயம்பற்றி
மாயை முதற்காரணம் ஆகும்;
அருவாம் ஆன்மா ஐங்கோசத்து
ஆர்ப்புண்டு. அவற்றின் அகம்புறம் ஆம்!

தோற்பாவைக் கூத்தும், தொல்லை
மரப்பாவை இயக்கமும், சீர்த்
தேர்ப் பாரிற் செலவும், வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்,
பார்ப்பாய வேடம் கட்டி,
ஆடுவோர் பரிசும் போலும்!
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மாநின்று ஆட்டு மாறே

---

*''The human individual is a complex of five elements, anna, prana, manas, vijnana, and ananda. The Highest Spirit which is the ground of all being, with which man's whole being should get united at the end of his journey, does not contribute to his self-sense. Life and matter are organised into the gross physical body, sthula-sarira, mind and life into the subtle body, suksma-sarira, intelligence into the causal body, karana-sarira, and Atman, the Universal Self is the supreme being sustaining the others. The ego is the manifestation of the Universal Self using memory and moral being which are changing formations. Purusa is sometimes used for the atman which is higher than buddhi. Buddhi belongs to the objective hierarchy of being. Purusa is the subjective light of consciousness that is reflected in all beings.''

*— Dr.S.Radhakrishnan*

---

# அறிவிற்குப் பொருந்துவதே

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப்பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணற்ற விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற முதற் பொருள்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள், என்பனவற்றின் இயல்பை எல்லாம் இனிது எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு நமக்குத் திண்ணிதின் உதிக்கும்.

உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியக்கத்தக்கனவாக இருக்கின்றன! சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும், தத்தம் ஒழுங்கு முறைகள் தவறாமல் ஒளி வீசிக் கொண்டு வருகின்றன. பரந்த பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு, பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள் மழை பொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல் ஒரு வரம்பிற்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது, பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார் காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின்பனிக்காலம் எனப் பல்வேறு பருவங்களாகவும்அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற செடி கொடி வகைகளை வளர்த்தும்,நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர் வகைகளை அளித்தும், உதவி புரிந்து வருகின்றன.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியனவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க்கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழிவழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. இங்ஙனமே மரஞ் செடி, கொடி இவைகளில் ஒவ்வொன்றும், தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்கள் ஆக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளராகவும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாகத் திகழ்கின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து உழன்று அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலைநிற்கின்றனர். பிறர் சிலரோ, தீயொழுக்கமே கன்றிப் பெரிதும் திரிதந்து உழன்று அலைகின்றனர்.

இங்ஙனம், இப்பரந்த உலகத்தை இனிது நோக்கி ஊன்றி உணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது, நம்மனோர் அறிவிற்குப் பொருந்துவதேயாகும் என்று 'பஞ்சதிகாரம்' என்னும் நூலில், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் பாடுகின்றார்.

— ஆசிரியர்.

---

# முருகன் திருத்தலங்கள்

'திருக்குறள்மணி'
டாக்டர் திரு. க. த. திருநாவுக்கரசு, M.A.,Ph.D.,
(உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113)

## முன்னுரை

தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்த திரு நாடு. தொன்றுதொட்டு அருளாளர்கள் பலர் தோன்றிப்பக்திநெறியைத் தமிழகத்தில் பரப்பி வந்துள்ளனர். இதனால், இங்கு ''மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகப்'' பணிந்து, இறைவனுடைய பேரருள் திறத்தில் மூழ்கித் திளைக்கும் மரபு நன்குவளர்ந்து சிறந்துள்ளது. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா'' என்பது சான்றோர் வாக்கு. இம் முதுமொழிக்கு இணங்க ஊரெல்லாம், நாடெல்லாம் கோயில்கள் பல, பல்வேறு காலங்களில் அரசர் களாலும், அடியவர்களாலும் எடுக்கப்பட்டுள் ளன. இவ்வாறு கோயில்கள் ஊர்கள் தோறும் அமைக்கப்பட்டிருந்தாலும், சில ஊர்களில் உள்ள கோயில்கள் பெரும் புகழும், சீரும் சிறப்பும், புனிதத் தன்மையோடு தொன்மைச் சிறப்பும் பெற்றனவாக மக்களால் போற்றப் பட்டு வருகின்றன.

இத்தகைய சிறப்பிற்குக் காரணம், அக் கோயில்கள் உள்ள ஊரில் அருளாளர்கள் தோன்றி, அரும்பணியாற்றி இருப்பதாகும். தேவாரம் பாடிய மூவர் முதலிகளைப் போன்றோ, அருணகிரிநாதரைப் போன்றோ, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் பக்திமான்கள் அக்கோயில்களில் எழுந் தருளியுள்ள இறைவனைப் போற்றிப் பாடி இருப்பதுமாகும்; அல்லது அக்கோயில்களின் உள்ளே அல்லது அருகில் சில மகான்களின் சமாதிகள் அமைக்கப்பட்டு இருப்பதுமாகும். காலப்போக்கில், இக்காரணங்களுள் ஒன்றாலோ பலவற்றாலோ அக்கோயில்களும், அவை இடம் பெற்றுள்ள ஊர்களும் புனிதத் தன்மையும் புகழும் வாய்ந்தனவாக மக்களால் மதித்துப் போற்றப்படும் நிலையை அடைந்துள்ளன. இத்தகைய ஊர்களையே திருத்தலங்கள் எனச் சுட்டுவது வழக்கமாகும்.

நாம் வழிபடும் கடவுளரின் சிறப்புமிகு கோயில்களைக் கருத்தில் கொண்டு, அத்தலங் களைச் சிவத்தலங்கள், சக்தித் தலங்கள், திருமால் தலங்கள், முருகன் தலங்கள் எனப் பலவகையாகப் பாகுபடுத்திக் கூறி வருகின் றோம். வழிபடு தெய்வமாகக் குறிப்பிட்ட கடவுளரைப் போற்றும் மக்கள், சிறப்பு நாள் களிலும், திருவிழாக் காலங்களிலும் அவ்வத் தலங்களுக்குச் சென்று, அங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவனை வழி பட்டு அவனுடைய திருவருளைப் பெற்று மகிழ்கின்றனர்.

## முருக வழிபாடு

இவ்வாறு பெருஞ் சிறப்புற்று இலங்கும் தலங்களுள், முருகப் பெருமானுடைய சிறப்பு மிகு திருக்கோயில்களைக் கொண்டவை தமிழ் நாட்டில் நெடுங்காலமாகப் பொன்றாப் புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழ் மக்கள் எண்ணத் தெரிந்து, அறிவை வளர்த்துக் கருத்து வகையால், முன்னேறத் தொடங்கிய காலம் முதற்கொண்டு, முருக வழிபாடு இந்த நாட்டில் முதன்மையான இறைவழிபாடாக இருந்து வருகிறது.

மலையும் மலைசார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி நிலத்தில் தமிழினம் வாழத்தொடங் கிய காலத்திலேயே—இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே—'சேயோன்' எனப்படும் செந்தில் குமரனுடைய வழிபாடு சிறப்புற்று, விளங்கலாயிற்று. அக் காலம் முதற்கொண்டு வேலனை வெற்றிக் கடவுளாகவும், குகனைக் குழந்தைத் தெய்வ மாகவும், கந்தனைக் காதற் கடவுளாகவும், சாமிநாதனைக் குருபரனாகவும், சித்தர்களுக் கெல்லாம் தலைவனாக விளங்கும்பழனியாண்டி யைத் தண்டாயுதபாணியாகவும், தமிழர்க ளாகிய நாம் போற்றி, வழிபட்டு வருகிறோம்.

## முருகனுடைய தலங்கள்

'உருவாய் அருவாய் உளதாய் இலதாயும்' 'ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்குஆயிரம் திருநாமம்' உடையதாயும் பக்தர்களால்

போற்றி வணங்கப்படும் முருகனுடைய தலங்கள் பல, தமிழகத்தில் உள்ளன. அவற்றுள் பதினெட்டுத் தலங்களைப் பற்றிய வரலாற்றை இங்குக் காண்போம்.

முருகப்பெருமான் அடியார்களுக்கு அருள் பாலிக்க எழுந்தருளியுள்ள தலங்கள் பதினெட்டை இருவகையாகப் பாகுபடுத்தலாம். சங்க காலத்தில் கடைப்பகுதியில் நக்கீரரால் இயற்றப்பட்டது திருமுருகாற்றுப்படை. அது தமிழில் தோன்றியுள்ள முதல் தோத்திர நூலாகும். அந்நூலில், 'முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள்' எனப் பிற்காலத்தவரால் போற்றப்படும் புகழ்மிகு ஆறு திருத்தலங்களின் அமைப்பும், அங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆறுமுகனின் அழகும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றை, நாம் 'பழங்காலத் தலங்கள்' எனலாம். மற்றவற்றைப் பிற்காலத் தலங்கள் எனலாம். 'பழங்காலத் தலங்கள்' எனப்படுபவை, கி. பி. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே சிறப்புற்று விளங்கியவை. மற்றவை யாவும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழக வரலாற்றில் இடம் பெற்றவையாகும்.

## பழங்காலத் தலங்கள்

குமரனுடைய ஆறுபடை வீடுகளையும் பழங்காலத் தலங்கள் எனக் கருதலாம். அவை திருப்பரங்குன்றம், திருச்சீர்அலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன. இவற்றைப் 'பத்துப் பாட்டு' எனும் பழந்தமிழ் இலக்கியத்தின் முதற் பாட்டாகிய 'திருமுருகாற்றுப்படை' முதன் முதலாக, முறைப்படுத்திக் கூறுகிறது.

### 1. திருப்பரங்குன்றம்

ஆறுபடை வீடுகளுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது திருப்பரங்குன்றம். 'கூடல்மாநகர்' எனும் பெயரால் சிறப்புற்று விளங்கி, இன்று மதுரை எனும் பெயரால் புகழ்பெற்று விளங்கும் பாண்டிநாட்டின் தலைநகருக்குத் தென்மேற்கில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஊரே திருப்பரங்குன்றமாகும். சங்க காலத்தில்,

*சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்*
*சினமிகு முருகன் தண்பரங்குன்றம் (அகம்-59)*

என மதுரை மருதனிள நாகனாரும்,

*கொடிநுடங்கு மறுகில்கூடல் குடாஅது*
*பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய*
*ஒடியா விழவின் நெடியோன் குன்றம் (அகம்-149)*

என எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரும் திருப்பரங்குன்றினைப் போற்றிப் பாடியுள்ளார்.

'குருபரன்' கோயில் கொண்டுள்ளகுன்றம் எனும் பொருளில் 'பரங்குன்றம்' எனும் வழக்கு உண்டாயிற்று. சங்க காலத்தில் பரங்குன்றின்மீது சோலைகள் மிகுதியாக இருந்தன. மலையினை அருவிகள் அணி செய்தன; சோலைகளாலும், அருவிகளாலும் அக்குன்றம் குளிர்ச்சியாக இருந்தது. இதனால் 'தண்பரங்குன்றம்' எனப் பெயர் பெற்றது. மலைமீது முருகனுடைய கோயில் வீறுடன் விளங்குகிறது. முருகப்பெருமானைப் பாண்டிய அரசன், தன் பட்டத்து அரசியோடும், அமைச்சரோடும் சென்று வழிபட்டான் (பரிபாடல் 19). மக்கள் பல்வேறு வகையான வேண்டுதல்களை முருகனிடம் வேண்டினர்; நேர்த்திக் கடன் செலுத்தினர்; அக்காலத்திலேயே பக்தர்கள் 'காவடி' எடுத்துச் சென்றனர். பரங்குன்றத்தில் அழகிய ஓவிய மண்டபம் ஒன்று அக்காலத்தில் இருந்தது (பரி. 5, 10).

சூரபதுமனைப் போரில் வென்றபின், இந்திரனுடைய மகளான தேவயானையை, இத்தலத்தில்தான் முருகப்பெருமான் திருமணம் புரிந்து கொண்டதாகக் கந்தபுராணம் கூறுகிறது. 'மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்' என்று நக்கீரர், திருப்பரங்குன்றத்து எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைக் குறிப்பிட்டுள்ளார். திருப்பரங்குன்றத்து மலையில் சிறப்புமிகு சுனை ஒன்று நெடுங்காலமாக இருந்து வருகிறது. கோயிலின் குடைவரைப் பகுதியிலும், பின்பக்கத்துப் பாறை ஒன்றிலும், கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் 'தமிழ்' எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கோயிலில் நக்கீரரின் வடிவச்சிலை ஒன்று இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

### 2. திருச்சீர் அலைவாய்

இத்தலம் கடல்அலைகள் மோதும் கரையோரத்தில் உள்ளது. அலைமோதும் கடற்கரையில் அமைந்துள்ள கோயிலாதலின், 'அலைவாய்' எனப் பெயர் பெற்றது. பின்னர், இப்பெயர் அக்கோயில் உள்ள ஊருக்குப் பெயராயிருத்தல் கூடும். இது 'செந்தில்' எனும் பெயரும் உடையதாகும். இக்காலத்தில் 'திருச்செந்தூர்' என்று வழங்கப்படுகிறது. இது, திருநெல்வேலி மாவட்டத்தில், கடற்கரையில் காயல்பட்டினத்துக்குத் தெற்கில் இருக்கிறது. இதனைத் திருச்செந்தில், செந்தில், ஜெயந்தி, ஜெயந்திபுரம் எனப் பலவாறாக வழங்குவர். இதனைப் பழைய உரையாசிரியரான நச்சினார்க்கினியர், 'நாமனூர் அலைவாய்' எனும் திருப்பதி என்பர்.

*திருமணி விளக்கின் அலைவாய்ச்*
*செருமிகு சேஎய் (அகம்-261)*

*வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்*
*நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை(புறம்-55*

*சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்*
*ஏரகமும் நீங்கா இறைவன் (சிலப். குன்றக். 8)*

*வரைஎயிறு கிழித்த நிழல்திகழ் நெடுவேல்*
*திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்*
*(தொல். களவு. 23 உரை மேற்கோள்).*

எனும் பழம்பாடற் பகுதிகளால், இத்தலத்தின் சிறப்பை அறியலாம்.

முருகப்பெருமான் சூரபதுமனுடன் நடத்தியபோர், இங்குத்தான் தொடங்கப்பெற்றது. கோயிலுக்குத் தெற்கே கடல் ஓரத்தில் 'நாழிக் கிணறு' எனப் போற்றப்படும் புண்ணிய தீர்த்தம் ஒன்று உள்ளது. இத்தீர்த்தத்தில் மூழ்கிய ஆதிசங்கரர், தம் நோய் நீங்கப் பெற்றார் என்பர். உடனே 33 பாடல்களைக் கொண்ட 'ஸ்ரீசுப்ரமண்ய புஜங்கம்' எனும் பாமாலையைப் பாடி, அவர் செந்தில்நாதனை வழிபட்டதாகத் தெரிகிறது.

முந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த குமரகுருபரர், தான் பேசும் ஆற்றல் பெற்றவுடன் 'கந்தர் கலிவெண்பாவை' இப்பெருமான் முன்னிலையில் பாடியருளினார். வைணவ சமயச் சான்றோரான பகழிக் கூத்தர் இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது 'பிள்ளைத் தமிழ்' இலக்கியத்தைப் பக்தியுணர்வு பெருக்கெடுத்து ஓடுமாறு பாடியுள்ளார்.

இங்கு முருகப்பெருமான் ஆறுமுகனாக, வள்ளி தெய்வயானைக் கோலத்தோடு காட்சி தருகிறார். இக்காட்சியை நக்கீரர், திருமுகங்கள் ஓராறும்கொண்ட கொள்கையையும், பன்னிரு கையும் பரிவுடன் புரிந்த செயல்களை வியந்து போற்றும் முறையில் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். இத்தலத்தினை 'உலகம் புகழ்ந்து ஓங்குயர்விழுச்சீர் அலைவாய்' (திருமுருகா. 124-125) என்று அவர் போற்றிப் பாடியுள்ளார்.

### 3. திருஆவினன்குடி

இக்காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கும் பழனிமலையில் அடிவாரத்தில் உள்ள தலமே 'திருவாவினன்குடி' யாகும். பண்டைக் காலத்தில்,

முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட் டியானைப் பொதினி (அகம்.1)

என்றும்,

முழவுறழ் திண்தோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (அகம். 62)

என்றும் போற்றப்பட்ட தலமாகும். இப்பொதினியே, பிற்காலத்தில், 'பழனி' எனத் திரிந்து வழங்கலாயிற்று என்பது ஆராய்ச்சியாளரின் துணிபாகும்.

சங்ககாலத்தில் இப்பகுதியை வேளிர் மரபைச் சேர்ந்த ஆவிக்குடியினர் ஆண்டு வந்தனர். அவர்களுள் வேளாவிக்கோப் பெரும்பேகன் எனும் வள்ளல் தலைசிறந்தவனாவான். இத்தகைய ஆவிக்குடியினர் வாழ்ந்த ஊர், 'ஆவி நன்குடி' எனப்பட்டது போலும். இங்குப் பண்டைக் காலத்தில் முருகன் கோயில் மலையடிவாரத்தில் இருந்தது. இன்றும் அவ்வாறே ஒரு கோயில் இருக்கிறது. இதனையே ஆவினன்குடி என்பர்.

இன்றுள்ள பழனி என்னும் தலத்தில் மலைமீதுள்ள கோயில் நக்கீரர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. இது பிற்காலத்தில் தோன்றியது என்பர். (காண்க: பழனித் தல வரலாறு, தேவஸ்தான வெளியீடு, பக். 14). கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு அளவில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர், தம் காலத்தில் 'சித்தன் வாழ்வு' என்று சிறப்புற்று விளங்கிய பழனி தண்டாயுதபாணிக் கோயிலும், திருவாவினன்குடி முருகன் கோயிலும் ஒன்றெனவே மயங்கியுள்ளார். (திருமுரு. 175-76 உரை). ஆனால், உண்மையில் இரண்டும் வெவ்வேறானவை. சித்தர்கள், பலர் தங்கி வாழ்ந்த மலைப்பகுதியில்; யாரோ ஒரு சித்தரின் சமாதியில் நவபாஷாணத்தால் ஆன, தண்டு கையில்கொண்டுள்ள சித்தர் சிலை அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. நாளடைவில் முருகனே துறவியாக-ஆண்டியாக-சித்தநாதனாக அங்கு எழுந்தருளியிருப்பதாக ஒரு மரபு உண்டாயிற்று. அதன் விளைவாக, ஆவினன்குடி சிறப்பை இழக்க, பழனி பெருமையுற்றது. பழனிமலையில், பழனியாண்டவர் கோயிலுக்கு அருகில் ஒரு சமாதி இருக்கிறது. அதனைப் 'போகர்' எனும் சித்தருடைய சமாதியாக இன்றும் மக்கள் போற்றி வருகின்றனர். இதனாலும் பழனி மலையே 'சித்தன் வாழ்வு' எனும் பெயரோடு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சிறப்புற்று விளங்கியதன் பொருத்தம் புலனாகும்.

சிறப்புமிகு முருகன் அடியாரான அருணகிரிநாதர், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். திருவாவினன்குடி முருகப் பெருமானைத் தம்முடைய திருப்புகழில் அவர் போற்றிப் பாடியுள்ளமையும், பழனியாண்டவர்கோயில் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குச் சிறப்புமிகு சான்றாகும்.

இத்தலம், திண்டுக்கல்லிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் வழியில், 40 கி. மீ. தொலைவில் இருக்கிறது. ஆவினன்குடி முருகனை முனிவரும் கந்தருவரும் வழிபட்டதாக நக்கீரர் கூறுவர். மும்மூர்த்திகளும் இந்திரனும் வந்து காணுமாறு முருகன் அங்கு வீற்றிருந்ததாகத் திருமுருகாற்றுப்படை தெரிவிக்கிறது. இங்குள்ள முருகனை, இலக்குமி, சூரியன் காமதேனு ஆகியோர் வழிபட்டு வீடுபேறுஅடைந்ததாகத் தலபுராணம் அறிவிக்கிறது.

### 4. திருஏரகம்

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், ஏரகம் என்று சுட்டிய தலத்தைப்பற்றிக் கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. திருமுருகாற்றுப்படையின் உரையாசிரியரான நச்சினார்க்கினியர், 'மலைநாட்டு அகத்ததொரு திருப்பதி' (திருமுரு. 189 உரை) என்று இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம் குன்றக்குரவையுள்,

''சீர்கெழு செந்திலும். செங்கோடும்வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்'' (தெய்வம் பரா அ 1-2)

எனும் வரிகளுக்கு உரையெழுதிய அரும்பத வுரைகாரர் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) 'வெண் குன்றினைச் சுவாமிமலை' என்று சுட்டுகின்றார். இதிலிருந்து ஏரகம் வேறு: சுவாமிமலை வேறு என்பது பெறப்படுகிறது.

'ஏரகம்' என்பது 'எழில்மிக்க மலைப் பகுதியில் உள்ள ஊர்' எனப் பொருள்படும். இது மைசூர் மாநிலத்தில் தென்கேனரா வட்டத்தில் உள்ள 'சுப்பிரமணியத் தலம்' (குமாரர்சத்திரம்) எனும் ஊரும், இன்றும், அங்கு சுப்பிரமணியர் கோயில் ஒன்று பெருஞ் சிறப்புடன் விளங்கி வருகிறது. இதையே நக்கீரர் சுட்டியுள்ளதாகக் கொள்ளுவதற்கு இடமுண்டு. சங்க காலத் தமிழகத்தில் அப் பகுதி 'துளுநாடு' எனும் பெயருடையதாகவும், தமிழகத்தின் ஒரு பகுதியாகவும் விளங்கியதைப் பதிற்றுப்பத்தும், அகநானூற்றுப் பாடல்களும் தெரிவிக்கின்றன. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டினரான அருணகிரியார்,

காவிரி யாற்றுக்கு ளேவரு
வளமை சோழநன் னாட்டுக்குள் ஏரக
நகரிற் சீர்பெறு மோட்சத்தை யேதரு-பெருமாளே
(திருப்புகழ்—17)

யாவும் அலை கொண்டு கைத்த காவிரி புறம்பு
சுற்றும்
ஏரகம் அமர்ந்த பச்சை-மயில் வீரா (திருப்புகழ்-14)

என்று சோழநாட்டில், காவிரியாற்றங்கரையில் உள்ள ஊரே 'ஏரகம்' என்று பாடியுள்ளார். இதனைக் கும்பகோணத்திற்கு மேற்கே ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள 'சுவாமிமலை' என்பர். இம்மலை செயற்கையாக அமைக்கப் பட்ட குன்றாகும். இங்கு முருகன் தந்தைக்குப் பிரணவப் பொருளை உபதேசம் செய்ததாகக் கூறுவர். இதை மெய்ப்பிக்கும் வகையில், இக் கோயிலின் இரண்டாம் சுற்றாலையில் சிவ பெருமான் மடியில் முருகன் அமர்ந்து காதருகில் உபதேசம் செய்யும் சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இக் கோயிலின் மூலத்தானத்தில் உள்ள இறைவன், யோக குருவாகப் பெருமிதத் தோற்றத்துடன் காட்சி தருவது, கண்டவர் உள்ளத்தை விட்டு அகலாத் திருக்காட்சியாகும்.

### 5. குன்றுதோறாடல்

கந்தனைக் குறிஞ்சி நிலக் கடவுளாகவே மலையில் வாழும் தெய்வமாகப் பண்டைத் தமிழர்கள் வழிபட்டனர். எனவே, அவன் தமிழகத்தின் குன்றுகள்தோறும் ஆடல்புரிவ தாக நம்பினர். இந்நம்பிக்கையையே, 'குன்று தோறாடல்' எனும் தொடரால், நக்கீரர் புலப் படுத்தியுள்ளார். பொதுவாக எல்லா மலை களிலும் குன்றுகளிலும் அவன் குடிகொண்டுள் ளான் எனும் கருத்தையே இத்தொடர் அறி விக்கிறது. மலைகள்தோறும் சென்று விளை யாட்டு அயர்தலும் பெருமானது பண்பு என்று இதற்கு நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தந்துள்ளார். இவற்றைக் கருத்தில் கொண்டு, முருகன் எழுந்தருளியுள்ள 'திருத்தணி, வள்ளி மலை, திருச்செங்கோடு, மருதமலை, சென்னி மலை, மயிலம், விராலிமலை, குன்றக்குடி, குமரமலை, கழுகுமலை, சுருளிமலை, போன்ற பல மலைத் தலங்களை இதனுள் அடக்கிக் காட்டலாம்.

### 6. பழமுதிர் சோலைமலை

இத்தொடருக்குப் 'பழங்கள் முற்றின சோலைகளையுடைய மலை' என்று உரையா சிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர். ஆனால், குறிப்பிட்ட ஒரு மலையைச் சுட்டி இதுதான் பழமுதிர் சோலைமலை என்று, அவர் எதையும் குறிப்பிடவில்லை. எனவே மதுரைக்கு வடகிழக்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள 'அழகர்கோவில்' எனும் 'திருமாலிருஞ் சோலையே', பழமுதிர்சோலை எனக் கருதிப் போற்றப்பட்டு வருகின்றது.

## இக்காலத் தலங்கள்

முருகக் கடவுளின் வழிபாடு நெடுங்கால மாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவ்வக்காலத்திய மக்கள், தங்கள் மனப்போக் கிற்கும் தேவைக்கும் ஏற்ப, பலவேறு மலை களிலும், நகரங்களிலும் மயில்வாகனனுக்குத் தனிக்கோயில்கள் அமைத்து வழிபடலாயினர். அக்கோயில்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடையன. ஆயினும், இன்று வரை புனிதமிகு வழிபடு தலங்களாக அவை இருந்து வருகின்றன. அவற்றுள் சிறப்புமிகு சிலவற்றைக் காண்போம்.

### 1. வேழி (வேள்) மலை

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர் கோயிலுக்கு அருகிலுள்ள தலம். இதனை 'ஏரகம்' என்பாரும் உளர். முருகப் பெரு மானுடைய தோற்றம் பெருமிதம்வாய்ந்தது.

### 2. குன்றக்குடி

காரைக்குடிக்குத் தென்மேற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது, குன்றக்குடி எனும் தல மாகும். இங்கு எழுந்தருளியுள்ள சுப்பிரமணியக் கடவுள் வள்ளி தெய்வ யானையரோடு அருள் பாலிக்கின்றார். திருவண்ணாமலை ஆதீனத் தலைவரான தவத்திரு தெய்வசிகாமணி பரமா சாரிய சுவாமிகளின் (குன்றக்குடி அடிகளாரின்) அருளாட்சியால் இத்தலம், சிறப்புற்று விளங்கு கிறது.

### 3. குமரமலை

புதுக்கோட்டை நகருக்குத் தென்மேற்கில் 12 கி.மீ. தொலைவில் ஒரு காட்டுப்பகுதியில் இம்மலை அமைந்துள்ளது. அழகிய இயற்கை வளம் பொருந்திய சூழலில், புல்வயல் எனும் ஊருக்கு அருகில் குன்றின்மீது முருகப்பெரு மானின் கோயில் காணப்படுகிறது அங்கு வேலன், குமரேசனாகக் காட்சி தருகிறான்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், 'திருப் புல்வயல்' எனும் அவ்வூரில் குருபாததாசர் எனும் அடியவர் வாழ்ந்தார். அவர் குமரமலை முருகப்பெருமான் மீது 'சதகம்' எனும் சிற்றி

லக்கியம் ஒன்றினை இயற்றியுள்ளார். அதனைக் 'குமரேச சதகம்' என நாம் போற்றி வருகின்றோம்.

4. சிக்கில்

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்குப் போகும் வழியில் உள்ளது 'சிக்கல்' எனும் சிறப்புமிகு ஊராகும். அங்கு எழுந்தருளியுள்ள முருகன், சிங்கார வேலனாக—காதல் தெய்வமாக-கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகனாகப் பேரருள் புரிகின்றான்.

5. மயிலம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திலிருந்து ஆறு கி.மீ. தொலைவில் ஒரு குன்றம் இருக்கிறது. அக்குன்றின் மீது ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானையோடு அருள்பாலிக்கின்றான். பொம்மபாளையம் வீரசைவ மடம் இத்தலத்தினை நிருவகித்து வருகிறது.

6. குமரகோட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் புகழ்மிகு காஞ்சிமா நகரில் சிறப்புற்று விளங்கும் திருக்கோயில் குமரகோட்டமாகும். தேவி தழுவக் குழைந்த எம்பெருமானின் திருக்கோயிலான ஏகாம்பரநாதர் கோயிலுக்கும், காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயிலுக்கும் இடையே குமரவேளின் கோட்டம் அமைந்துள்ளது. இக்கோயிலிலேயே கச்சியப்பரின் 'கந்தபுராணம்' கி.பி. பதினாலாம் நூற்றாண்டில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

7. திருப்போரூர்

செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னைக்குத் தெற்கே 28 கி.மீ. தொலைவில் உள்ள முருகனின் தலம் திருப்போரூராகும். அங்கு ஒரு சிறு குன்று உள்ளது. அதன் சாரலில், ஊருக்கு நடுவே 'கந்தசாமி' எனப் போற்றப்படும் திருப்போரூர் முருகன் கோயில் வானுற ஓங்கி அமைந்துள்ளது. நானூறு ஆண்டுகளுக்கு முன்னர், அருள்மிகு சிதம்பர சுவாமிகள் இக்கோயிலை எடுப்பித்தார். இம்முருகப்பெருமான்மீது, அவர் பாடியுள்ள 'திருப்போரூர்ச் சந்நிதிமுறை' எனும் சிற்றிலக்கியத் தொகுதி, பக்திப் பெருக்கும் இலக்கியச் சிறப்பும் வாய்ந்தது.

8. வடதிருச்சிற்றம்பலம்

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தின் தலைநகராக விளங்குவது மதுராந்தகம் எனும் நகராட்சி, நகரமாகும். அவ்வூரில் வடகிழக்குப் பகுதியில், பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு வயல்வெளியை அகழ்ந்துஎடுத்தனர். அங்கே, முருகன் கோயில் ஒன்றன் இடிபாட்டையும், ஆறுமுகசாமி, வள்ளிநாச்சியார், தெய்வயானை ஆகிய தெய்வத் திருமேனிகளையும் கண்டெடுத்தனர். அச்சிலைகளைக் கொண்டு முருகன்கோயில் ஒன்றினை அங்குள்ள மக்கள் எடுப்பித்துள்ளனர். அங்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளால், நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை 'வடதிருச்சிற்றம்பலம்' எனும் முருகன் கோயில் அங்குச் சிறப்புற்று விளங்கியதாகத் தெரிகிறது. அக்கோயிலை அருணகிரிநாதர்,

மகவெனப் பத்மம் தனிற் பிறந்து
மதுராந்தகத்து வடதிருச்சிற்றம்பலத்து
அமர்ந்த பெருமாளே (திருப்புகழ் 728)

எனவும்,

மயில்தாண்ட விங்கு முதுகுலப்
பொற் குன்றிடித்த சங்கர
மதுராந்தகத்து வடதிருச்சிற்றம்பலத்து
அமர்ந்த பெருமாளே (திருப்புகழ் 729)

எனவும் பாடியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

9. கந்தகோட்டம்

தமிழகத்தின் தலைநகரமான சென்னைப் பட்டினத்தின் நடுவில், அமைந்துள்ள முருகன் கோயிலுக்குக் கந்தகோட்டம் என்பது பெயர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி தொடங்கப்பெறுவதற்கு (நானூறு ஆண்டுகளுக்கு) முன்பே, இக்கோயில் சென்னையில் இருந்ததாகச் செப்பேடு ஒன்றால் தெரியவருகிறது.

சென்ற நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய இராமலிங்க அடிகள், இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைத் 'தருமமிகு சென்னையில் உயர்கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கும் கந்தவேளே' (தெய்வமணி) என்று போற்றிப் பாடியுள்ளார். இன்றும் சிறப்புமிகு முருகன் தலமாகக் கந்தகோட்டம் விளங்குகிறது.

10. திருத்தணிகை:

இது சென்னை-பெங்களூர் இருப்புப் பாதை வழியில் அரக்கோணத்திற்குவடமேற்கே பத்து கி.மீ. தொலைவில் உள்ள திருத்தலமாகும். பல்லவர் காலத்தில் எடுக்கப்பட்ட, சிற்ப வேலைப்பாடு உடைய வீரட்டானேசுவரர் கோயில் இவ்வூரின் கிழக்குப் பகுதியில் சிறப்புற்று விளங்குகிறது. ஊரின் மேற்குப் பகுதியில் சிறுகுன்றம் ஒன்று இருக்கிறது. அதன் மீது, முருகன் இரு மனைவியரோடு அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றான்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர்இத்தலத்தில் கச்சியப்ப முனிவர் பிறந்தார். அவர் திருத்தணிகைப்புராணம், திருத்தணிகையாற்றுப்படை போன்ற பல சிறு பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இந்நூல்கள் திருத்தணியின் அருமைபெருமைகளையும் முருகப்பெருமானின் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றன.

### 11. வள்ளிமலை

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கு வடமேற்கே சிறப்புற்றிலங்கும் மலை வள்ளி மலை எனும் திருத்தலமாகும். இம்மலைப் பகுதியினை ஆண்ட குறவர் குலக் குரிசிலின் திருமகளே வள்ளிநாச்சியார் என்பர். முருகப் பெருமான் வள்ளியை மணம்புரிந்த வரலாற்று நிகழ்ச்சிகள் எல்லாம், இம்மலைப் பகுதியில் நடைபெற்றதாகக் கூறுவர். இங்குக் கந்தன், காதல் தெய்வமாகக் காட்சி தருகிறான். பல யோகிகளும் ஞானிகளும் வாழ்ந்து வீடுபேற்றைப் பெற்ற தலம் வள்ளிமலையாகும்.

### 12. இரத்தினகிரி

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்னை-வேலூர்ப் பெருந்து வழியில் வேலூருக்கு நான்கு கி.மீ. அருகில் 'கீழ்மின்னல்' எனும் ஊர் ஒன்று இருக்கிறது. அங்கு வடகிழக்குப் பகுதியில் இரத்தினகிரி எனும் குன்று உள்ளது. அதன் மீது அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. அண்மைக்காலத்தில் தவத்திரு பால முருகன் அடிமை எனும் அடிகளின் அருந்தொண்டினால், இத்தலம் சிறப்புமிகு முருகன் திருத்தலமாகப் பெருவாழ்வு பெற்றுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள முருகன், வள்ளி தெய்வயானையரோடு கூடிய கோலத்தில் காட்சி தருகிறான்.

மற்றும் கோவை மாவட்டத்தில், கோயம்புத்தூர் நகருக்கு மேற்கில் உள்ள மருதமலை. இம்மலையின்மீது முருகப்பெருமான் மருதவாணனாக மாண்புற்று விளங்குகிறான்.

இவற்றைப் போன்ற முருகனுடைய திருத்தலங்கள் தமிழகத்தில் மிகப் பல உள்ளன. முருகவழிபாடு எத்துணைத் தொன்மைச்சிறப்பு வாய்ந்ததோ, அத்துணைச் சிறப்பு வாய்ந்த தலங்கள் பல தமிழகத்தில் உள்ளன. குறிஞ்சிக் கிழவனாகிய முருகனின் சிறப்புமிகு தலங்கள் பல இன்றும் மலைப்பகுதிகளாகவே உள்ளன. குன்றுதோறும் ஆடும் குமரனின் திருக்கோயில்கள் அங்கெல்லாம், வீறுடன் விளங்குகின்றன. நகர நாகரிகம் சிறப்புறத் தொடங்கிய பின்னர், பெரிய பட்டணங்களில் எல்லாம் முருகனுடைய திருக்கோயில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் பல பெரும் பெயர் முருகனுடைய பெருமைகளை உலகிற்கு இன்றும் உணர்த்தி வருகின்றன.

''குகனுண்டு குறையில்லை மனமே''

---

# பக்தி நெறி வகைகள்

எல்லாம் வல்ல இறைவன்பால், அவனது மெய்யடியார்கள் செய்தொழுகும் அன்பாகிய பக்தியானது, பலவகை நெறிகள் அல்லது உணர்வுகளில் இயங்கும். அவற்றைத் தாஸ்யபாவம், சக்யபாவம், வாத்சல்யபாவம், சாந்தபாவம், காந்தாபாவம், மதுரபாவம் என ஆறு வகைகளாகப் பெரியோர்கள் கூறுவதுண்டு.

*(1) தாஸ்யம்:* அடியவன் தலைவன்பாற் செலுத்தும் அன்பு; இராமனிடத்தில் ஆஞ்சநேயன் செலுத்திய அன்பு.

*(2) சக்யம்:* நண்பன் நண்பன்பாற் செலுத்தும்அன்பு; குசேலமுனிவரும்கண்ணபிரானும் தம்முள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு.

*(3) வாத்சல்யம்:* குழந்தையின்மேல் தாய்க்குள்ள பரிவு; கண்ணபிரானிடம் யசோதைப் பிராட்டியார் செலுத்திய பரிவு.

*(4) சாந்தம்;* குழந்தைக்குத் தாயின் மேலுள்ள பாசம்; துருவனும் பிரகலாதனும் இறைவன்பாற் கொண்டிருந்த அன்பு.

*(5) காந்தம்;* மனைவி கணவன் மேலும், கணவன் மனைவிமேலும் வைக்கும் நேசம்; சீதைக்கும் இராமபிரானுக்கும், கண்ணனுக்கும் உருக்குமிணிக்கும் இடையே நிலவிய நேசம்.

*(6) மதுரம்:* காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள காதல் உணர்வு, இராதைக்கும் கண்ணனுக்கும் இடையே நிலவிய காதலன்பின் நிலை.

*(7)* இந்த ஆறுவகை உணர்வுகளின் நெறியினைத் தமிழில், முறையே அடிமைநெறி, நட்புநெறி, அன்பு நெறி, குழந்தைமைநெறி, கணவன்மனைவி நெறி, காதலன் காதலி நெறி எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.

— ஆசிரியர்

---

# நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை:**

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவராகத் திகழ்பவர், நம்மாழ்வார்! அவர் அருளிச்செய்த பிரபந்தங்கள் நான்கு. அவைகள் முறையே, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாகும். இந்நான்கு பிரபந்தங்களும் முறையே, இருக்கு எசுர் அதர்வணம் சாமம் என்னும் நான்கு வேதங்களின் சாரமாகக் கருதிப் போற்றப் பெறுகின்றன.

**பெயர்க்காரணம்:**

(1) 'திருவிருத்தம்' என்னும் இப் பிரபந்தத்தின் பெயர்க்குரிய காரணமாகப் பெரியோர்கள் பலவகை விளக்கங்களைக் கூறுவர். 'விருத்தம்' என்னும் சொல், தமிழில் 'கட்டளைக் கலித்துறை' என்னும் ஒருவகைச் செய்யுளைக் குறிக்கும். 'குறள்' என்னும் செய்யுள் வகையினால் அமைந்த நூல், 'திருக்குறள்' எனப் பெயர் பெற்றாற்போல, விருத்தம் என்னும் செய்யுள் வகையினால் இயன்ற இந்நூலும், திருவிருத்தம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

(2) இனி, வடமொழியில் விருத்தம் என்னும் சொல் 'செய்தி' எனப் பொருள்தரும். ''இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை அடியேன் செய்யும் விண்ணப்பம் மெய்ந்நின்று கேட்டருளாய்'' என்று, ஆழ்வார் எம்பெருமான்பால் இவ்வுலக வாழ்வில் தமக்குள்ள வெறுப்பை விரித்துரைத்து, எம்பெருமானைக் கலந்து அனுபவித்தலிலேயே, தமக்குக் காதல் பெருகிக் கிளர்ந்தோங்கும் செய்திகளை வெளியிட்டு, விண்ணப்பித்துக் கொள்கின்ற விதத்தில் அமைந்திருக்கும் காரணம்பற்றி, இதனைப் பெரியோர்கள், 'திருவிருத்தம்' எனப் பெயரிட்டுச் சிறப்பித்து வழங்குவாராயினர்.

(3) இனி, வேறொரு வகையாகவும், பெரியோர்கள் இதற்கு விளக்கம் கூறுவது உண்டு. இந்நூலின்கண் நம்மாழ்வார் ''ஞானத்தில் தம் பேச்சு; பிரேமத்திற் பெண் பேச்சு'' எனப்படும் முறையில், பெரும்பாலும் தம்மைப் பிராட்டியாகவே வைத்துத் தமது உள்ளத்திற் பொங்கிப் பெருகி எழும் காதற் கனிவுணர்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றார். ஆதலின், திருவிருத்தம் என்பதற்குத் திருமாலின் செய்திகளைக் கூறும் நூல் (திரு-திருமகள்; விருத்தம்-செய்தி, காதற் செய்தி) என்றும் சிலர் பொருள் கூறுவர்.

**நூலின் சிறப்பு:**

திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பு எல்லையற்றது. தமிழுக்குப் பெரிதும் சிறப்பாக உரிய அகப்பொருள் இலக்கணத்தினைத் தழுவி, அதன் துறைவகைகள் பல அமையப் பெற்றிருப்பது; சொற்றிட்பம், பொருள் நுட்பம், ஆழ்ந்துசெல்லும் கருத்தமைந்த குறிப்புப் பொருள் நுணுக்கங்கள், கற்பனை நலங்கள் முதலிய கவிதைத் திறங்கள், பலவற்றாலும் ஒப்புயர்வற்றுச் சிறந்து திகழ்வது, இந்நூல்.

கசப்பு மருந்தை உண்ண மறுப்பவர்க்கு, அவர் உவக்குமாறு அதன்மேலே இன்சுவை திற்றிவைத்து உண்பிக்குமாறு போல, பாமர மக்கள் எளிதில் உணர்ந்து நுகர முற்படாத பக்திச்சுவையினை, அவர்கள் உவந்து நுகரும் வண்ணம், பண்புயர்ந்த காதற்சுவையாகப் பாங்குற அமைத்து, எளிய சிற்றின்பம் பற்றிக் கூறுவது போலக் காட்டி, அரிய இனிய பேரின்பம் பற்றி அழகுற விளக்குவது, திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பியல்பாகும்.

மேலோடு காண்பவர் அறியும் வெளிப்படைப் பொருள் (அந்நியாபதேசம்); ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்து கற்பவர் உணரும் உள்ளுறை பொருள் (சுவாபதேசம்) என்னும் இருவகைப் பொருள்களும் எழிலுறக்கொண்டு இந்நூல் இலங்குகின்றது.

**பக்தியுணர்வு:**

இறைவனிடத்து அன்பு செலுத்தி வழிபடும் அடியார்களின் பக்தியுணர்வு, பலவகைகளில் வெளிப்பட்டுச் செயற்படுவது உண்டு. இறைவனின் திருப்பெயர்களை இடைவிடாது சொல்லி மகிழ்தல், அவனது திருமேனியழகை விரித்துரைத்துப் புகழ்தல், அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் திவ்விய தேசங்களின் பெருமை

களைக் கூறி இன்புறுதல், அங்கே வாழ்கின்ற அடியார்களாகிய பெருமக்களின் பண்பு நலங்களைப் போற்றிப் பாராட்டிக் களித்தல், வாழ்வின் புன்மையையும் இறையருளின் மேன்மையையும் குறித்து உலக மக்களுக்கு உபதேசித்தல் முதலிய பற்பல வகைகளில், அடியார்களாகிய ஞானிகளின் பக்தியுணர்வு வெளிப்படும்.

இறைவனைக் கண்ணாரக் கண்டு, அவனது எல்லையற்ற அருள் இன்பத்திற் கலந்து திளைத்து மகிழும் ஞானச் செல்வர்கள், இறையருளில் ஒன்றித் திளைத்து இன்புற்று மகிழுந்தோறும், அவ்விறைவனையே புருஷோத்தமன் என்று உணர்ந்து, அங்ஙனம் உணர்தலால் தாம் தம்முடைய தன்மையை அறவே இழந்துவிடுவர். இறைவனையே பிரிவற அடைந்து, இடையீடின்றிக் கலந்து அணைத்து மகிழ விரும்பும் தமது காதல் வேட்கை மிகுதியினால், அவர்கள் தம்மியல்பு முற்றிலும் அழியப் பெண்ணியல்பினராகப் பெரிதும் மாறிவிடுவர். இவ்வியல்பு உலகெங்கணும் உள்ள சமயச் சான்றோர்கள், எல்லோரிடத்தும் காணப்படுகின்றது. இஃது அவர்கள் தாமாக ஏறட்டுக் கொள்வதன்று; அவர்கள் மாட்டு இது தானாகவே வந்து பொருந்தி விடுகின்றது.

**நாயக நாயகி பாவம் :**

''இந்திய நாட்டில், காதலர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் முதல் முதலிற் கண்களால் நோக்குறுதல் தொடங்கித் தம்முணர்விழப்பு எய்துவது ஈறாக நிகழ்கின்ற, மனிதவியற் காதல் நிலைகள் அனைத்துமே, புனிதம் மிக்க ஆன்மிக அருட்பொருட் குறிப்புடையனவாக விளங்குகின்றன. உணர்வரிய சிறந்த சமய நுண்பொருட் கருத்துக்களை. உணர்த்துதற்கண், பாலியற் கருத்துருவகங்கள் அங்கே தடையின்றி நேரிதிற் கையாளப்பெறுகின்றன'' என்று, கலையியற் பேரறிஞர் ஆகிய திரு. ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் கூறுதல், ஈண்டு உணரத்தக்கது.(1)

''உலக இலக்கியங்கள் எல்லாவற்றிலும், இங்ஙனமே கவிஞர்கள் தாம் விரும்பும் கடவுளை, ஒரு பெண் தன் காதலன்பாற் கொள்ளும் பேரன்புநிலைக்கு ஒப்புமை தோன்றக் காதலுற்றுப் பாடியிருத்தலைக் காணலாம். விவிலிய நூலிற் பழைய ஏற்பாடு என்னும் பகுதியிற் காணப்பெறுகின்ற 'பாடல்களுட் பாடல்' என்பது, இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். கடவுளை மணமகனாகவும், உயிர்களையெல்லாம் அவனை மணந்து கொள்ளக் காத்திருக்கும் கன்னிப் பெண்களாகவும் ஒப்பிட்டு, இயேசுநாதர் இயம்புகின்றார். இடைக்காலத்தில் விளங்கிய கிறித்தவ சமய அருட்செல்வியர்கள் ஆகிய தூய தெரிசாஅம்மையார், தூய கெர்ட்ரூட் அம்மையார் ஆகியோர், தம்மை இயேசுநாதர் தழுவிப் புல்லி மகிழ்வித்த அருளனுபவச் செய்திகளைக் குறித்து வைத்துள்ளனர். இவ்வாறே, தூய கேதரீன் அம்மையார், இயேசுநாதர்க்குத்தாம் பரிசம் இடப் பெற்றதாகவும் அவர் தமக்கு மணமோதிரம் ஒன்றைப் பரிசளித்ததாகவும் மொழிந்துள்ளார்(2) இன்னோரனைய செய்திகள் ஈண்டு நாம் ஒப்புமையாகக் கருதியுணர்தற்குரியன.

ஆன்மிக ஞானவாழ்வின் தலைசிறந்த உச்சநிலை இறையருளனுபவக் கூறாக, இவ்வியல்பு அருளாளர்கள் யாவரிடத்தும் புலப்பட்டு விளங்குகின்றது. இந்நிலையைப் 'பகவத் விஷய காமம்' என்றும்; 'நாயகநாயகி பாவம்' என்றும், 'பாலுணர்வு மேலுணர்வாதல்' (Sublimation of the sex-instinct) என்றும் சமயப் பேரறிஞர்கள் குறிப்பிடுவர். இத்தகைய பெருநிலையிற் பிறங்கி, நம்மாழ்வார் அருளிச்செய்த ஞானப்பெரும்பனுவலே, திருவிருத்தம் என்னும் இந்தச் சிறப்புமிக்க நூலாகத் திகழ்கின்றது எனலாம்.

**பராங்குச நாயகி:**

இதன்கண், ஞானப்பெருஞ் செல்வர் ஆகிய நம்மாழ்வார், தாமான தன்மையை இழந்து, பிரேமம் மிக்க பெண்மையியல்பு மேலிட்டுப் பிறங்கும் நிலையில், அரிய கடவுளனுபவச் செய்திகளை அகப்பொருள் இலக்கணக் காதல் துறைகளில் அமைத்துப் பாசுரங்கள் பாடியருளியுள்ளார். பராங்குசர் என்பது நம்மாழ்வார்க்குரிய சிறப்புப் பெயர். புறச் சமயத்தவர்கள் ஆகிய யானைகளை அடக்குதலில் அங்குசம் போன்றவர் என்பது இதன் பொருள். இவ்வாறு பராங்குசர் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ள ஆழ்வார், நாயகி யுணர்வும் மெய்ப்பாடும் அமையப் பாசுரங்கள் பாடியருளும் நிலையில், பெரியோர்கள் அவரைப் பராங்குச நாயகி என்று சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்றி மகிழ்வர். இவ்வண்ணம் ஆழ்வார் நாயகிநிலை அடைந்து, அருளனுபவத்

---

(1) "In India, the conditions of human love, from the first meeting of eyes to ultimate self-oblivion, have seemed spiritually significant, and there has always been a free and direct use of sexual imagery in religious symbolism".

—DR. ANANDA K. COOMARASWAMY,
The Transformation of Nature in Art, p.44t

(2) "Throughout the literatures of the world, the love of man for his Ishta Devata is likened to the love of a woman towards her lover and the bliss of communion is likened to the Joy of physical union.

The Biblical 'Song of Songs', the saying of Jesus Christ likening God to the bridegroom and the souls to virgins waiting for their spouse, the recorded experiences of medieval Christian saints St. Therasa, and St. Gertrude who recounted the caresses bestowed upon them by Christ, the assertion of St. Catherine that she was betrothed to Christ and a wedding-ring was given by him are all analogous."

—DR. C. P. RAMASWAMY AIYER,
Phases of Religion and Culture, p. 99.

தில் திளைத்து வெளியிடும் பாசுரங்கள், முறையே தாய்கூற்று, தோழிகூற்று, தலைவி கூற்று என்னும் மூவகைகளில் அமையும்.

காவிரியாறானது, அங்கங்கே பல கால் வாய்களாகப் பிரிந்து, வெவ்வேறுபெயர்களைப் பெற்று விளங்குமாயினும், காவிரி என்னும் தலைமைச் சிறப்புப் பெயராலேயே வழங்கப் பெறும். அதுபோலவே, தாய் தோழி தலைவி ஆகிய மூவர் பேசும் நிலைகளில் அமைந்திருப் பினும், இவைகள் அனைத்தும் நம்மாழ்வார் ஒருவரின் ஞான நல்லருளுரைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இங்ஙனம் இறையருட் பக்தியுணர்வே இனிது கனிந்து முதிர்ந்து, காதற்சுவை மிகுந்த கடவுளியற் கவிதையாக வடிவெடுத்துத் திகழ் தலே, திருவிருத்தம் என்னும் இந்நூலின் இணை யற்ற தனிப்பெருஞ் சிறப்பாகும்.

**கிடாம்பியாச்சான்:**

இத்தகைய இந்நூலின் ஏற்றம்மிக்க பெருஞ் சிறப்பினை, மிகவும் வியந்து, கிடாம் பியாச்சான் என்னும் வைணவப் பெருஞ்சான் றோர் ஒருவர், ''கருப்பப்பை ஆகிய வட்ட மான குழியிற் பத்துத் திங்கள்காறும் கிடந்து, அதனின்று வெளிப்பட்டு உலகிற் பிறந்த பின்பு இழிந்த காமம் ஆகிய கொடிய குழியிலே விழுந்து, நரை திரை மூப்புப் பிணி என்னும் பலவகைத் துயரங்களை விளைவிப்பதில் ஒப் பற்ற கிழட்டுத் தன்மையை அடைந்து, மிகவும் வருந்திப் பிறந்தும் இறந்தும் அலைந்து கொண் டிருக்கின்ற உலக மக்களே! உங்களுடைய உயி ரானது அடைதற்குரிய நன்மையாகிய பயன் களுக்கு, ஓர் இடையூறுகூட அணுகவொட்டாத படி, திருக்குருகூர் என்னும் திவ்விய தலத்தில் தோன்றிய தலைவரான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம் என்னும் நூலில் உள்ள நூறு பாடல்களில், ஒரு பாடலின் ஓர் அடியை யாவது பற்றி உணர்ந்து கொள்ளுங்கள்; உணர்ந்து கொண்டால், நீங்கள் எம்பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற வைகுந்தம் என் னும் திருநாட்டில் மிக மேலான பேரின்பத்தை நுகர்ந்து கொண்டு வாழ்ந்திருப்பீர்கள்!'' என் னும் கருத்தமையப் பாடுகின்றார்:

''கருவிருத்தக் குழி நீத்தபின்,
காமக் கடுங் குழிவீழ்ந்து,
ஒருவிருத்தம் புக்கு உழலுறுவீர்!
உயிரின் பொருள்கட்கு
ஒருவிருத்தம் புகுதாமல்
குருகையர்கோன் உரைத்த
திருவிருத்தத்து ஓர் அடி கற்று
இரீர் திருநாட்டு அகத்தே''

[விருத்தம்-வட்டம்; கிழட்டுத்தன்மை; இடையூறு; செய்யுள்வகை. பொருள்கட்கு - நன்மை ஆகிய பயன்களுக்கு. குருகை-திருக்குரு கூர்; ஆழ்வார்திருநகரி. இரீர்-இருப்பீர்களாக. திருநாடு-வைகுந்தம்.]

என்னும் இனிய தனியன் ஒன்றினால், கிடாம்பி யாச்சான் என்னும் வைணவப் பெருந்தகையார் திருவிருத்தத்தின் சிறப்பினை விளக்கியிருத்தல் காணலாம்.

**ஆழ்வார் செய்யும் விண்ணப்பம் :**

எம்பெருமான் ஆழ்வார்க்கு மயர்வற மதி நலம் அருளினான். அதுகொண்டு ஆழ்வார் தம் முடைய ஞானக்கண்ணுக்கு இலக்கான எம் பெருமானை நோக்குகின்றார். நோக்க நோக்க, அவனைப் பிரிவறக் கலந்து அநுபவிக்கப் பெற வேண்டும் என்னும் ஆராக்காதல், அவர்க்கு மிகுதிப்படுகின்றது. ஆனால் அத் தகைய இனிய அநுபவத்திற்குத் தடைகள் மூன்று இருத்தலை அவர் உணர்கின்றார்.

அவைகளுள் முதலாவது தடை, பொய்ந் நின்ற ஞானம்; அதாவது தத்துவ ஞானத்திற்கு மாறான விபரீத ஞானம். நல்வினை தீவினை கள் உண்டு, சுவர்க்க நகரங்கள் உண்டு, இம்மை மறுமை உண்டு, இறைவன் உண்டு என்று உண ரப்பெறுவது தத்துவ ஞானம். நல்வினை தீவினைகள் இல்லை, இறைவனில்லை என்று பிறழ உணர்ந்து துணிந்து கூறுவது விபரீத ஞானம். தத்துவஞானம் மெய்யுணர்வு என்றும், விபரீதஞானம் திரிபுணர்வு என்றும் கூறப் பெறும்.

இரண்டாவது தடை, பொல்லா ஒழுக்கு. இறைவன் ஒருவன் உளன் என உணர்ந்து, ''யானே நீ என்னுடைமையும் நீயே'' என அவனை வழிபட்டு ஒழுகுதல், நல்லொழுக்கு. அதற்கு மாறாக, இறையுணர்வு என்பது சிறி தும் இன்றி, யான் என்னும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றும் ஆகிய அகங்கார மமகாரங்கள் மேலிட்டு, அவற்றின் வழியே இறைவனை மறந்து ஊணே உடையே உகந்து ஓடியுழலுதல், பொல்லா ஒழுக்கு.

மூன்றாவது தடை, அழுக்கு உடம்பு. பொய்ந்நின்ற ஞானத்திற்கும், பொல்லா ஒழுக் கத்திற்கும் அடிப்படைக் காரணமாக அமைந் திருப்பது அசுத்தமான தேகத்துடன் கூடியிருக் கும் சம்பந்தமேயாகும். உடம்பு அழுக்கினின்று பிறந்தது; அழுக்குகளை உடையது; அழுக்கு கள் சேர்வதற்குக் காரணமாக இருப்பது. இறைவன்பாற் பிரிவறக் கலந்து கூடி இன்புறு வதற்கு அழுக்குடம்பும், பொல்லா ஒழுக்கமும், பொய்ந் நின்ற ஞானமும் ஆகிய இம்மூன்றும் பெரிய தடைகளாக இருக்கின்றன.

இம்மூன்றினாலுமே, எல்லாத் துன்பங் களுக்கும் நிலைக்களமான கொடிய பிறவித் துன்பம் ஏற்படுகின்றது. இதுகாறும் எத்த னையோ பிறவிகளை எடுத்து எடுத்துத் துன் புற்றாயிற்று. இனிமேலும் பிறவி எடுத்தல் கூடாது என்று கருதி, ஆழ்வார் எம்பெருமான் பால் மிகவும் பணிவுடன் விண்ணப்பம் செய்து கொள்கின்றார்!

**உயிர் அளிப்பான் பிறந்தாய்:**

தமது விண்ணப்பத்தைப் பெருமான் செவி சாய்த்துக் கேட்டருளற் பொருட்டு, ஆழ்வார் அவனைப் புகழ்ந்து பாராட்டிப் பேசுகின்

றார்! எண்ணில்லாத பலப்பல குணநலங்களை யுடையவன் எம்பெருமான். ஆயினும் அவை களுள் மிகமிகத் தலைசிறந்த குணநலங்கள் இரண்டு. அவையாவன முறையே சௌலப்பி யம் (எளிமைத்தன்மை); பரத்துவம் (ஒப்புயர் வற்ற மேன்மைத் தன்மை). அவைகள் இரண் டையும் இங்கே குறிப்பிட்டு, ஆழ்வார் பேசு கின்றார்.

இறைவன் எப்போதும் மூன்று செயல் களைச் செய்தலில், ஆறியாக இருக்கின்றான். நல்லவர்களைப் பாதுகாத்தல்; கொடியவர் களை அழித்தொழித்தல், அறத்தை நிலை நாட்டுதல் என்பனவே, அம்மூன்று செயல்கள். இவற்றுள் நல்லவர்களைப் பாதுகாத்தலைத் தான், இறைவன் மிகவும் முதன்மையாகக் கருதுகின்றான். இந்த ஒன்றில் ஏனைய இரண் டும் அடங்கிவிடும். ஆதலின் நல்லவர்களைப் பாதுகாப்பதற்கென்றே அவன் 'மீன் ஆமை கேழல்' முதலிய பல வடிவங்களில் வந்து திரு வவதரித்தான். நம்மைப்போல வினை வயப் பட்டு அவன் பிறக்கவில்லை. நல்லவர்களைப் பாதுகாக்க விரும்பித் தானே தன் கருத்தின்படி அருள் வயத்தாற் பிறந்தான். அங்ஙனம் பல பிறவிகள்ல பல வடிவுகளில் வந்து பிறந்தான். அந்தந்தப் பிறவிகளில் பிறந்தபோது, சிறிதும் வேறுபாடு தோன்றாதபடி, அதனதன் தன்மை யாகவே இருந்தான். இங்ஙனமெல்லாம் அவன் செய்தருளியது, உயிர்த் தொகுதிகளைக் காத் தருளல் வேண்டும் என்னும் அவனது ஒப்பற்ற அருள்யல்பினாலேயே யாகும். ஆதலின், 'உயிர் அளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்' என்று, ஆழ்வார் இறைவனின் எளிமைத் தன்மையைப் புகழ்ந்தார்.

**இமையோர் தலைவர்:**

இறைவன் எளியவன் மட்டும் அல்லன்; மிக மிக அரியவனும ஆவான். அரியனாதல் தான், அவனது இயற்கையியல்பு. அதுதான் மேன்மை அல்லது பரத்துவம் எனப்படும். எம் பெருமான், விண்ணுலகில் உள்ள இந்திரன் முதலிய தேவர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்றான். அம்மட்டோ! வைகுந்தம் ஆகிய பரமபத உலகில் உள்ள நித்திய முக்தர்கள் எல்லோருக்கும் கூட, அவன் தலைவனாக விளங்குகின்றான். இவ்விருவருக்கும் ஒருசேரத் தலைமை நிலைபெற்று விளங்குதல்பற்றி, 'இமையோர் தலைவா' என்று இனிது புகழ்ந்து இறைவனை விளிக்கின்றார் ஆழ்வார்!

இங்ஙனம் இறைவனை விளித்து, நின்பால் யான் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வந் துள்ளேன்; இதனைச் சிறிது நின்று கேட்டரு ளல் வேண்டும் என்கின்றார் ஆழ்வார்!

பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா
ஒழுக்கும், அழுக்குடம்பும்,
இந்நின்ற நீர்மை இனியாம்
உறாமை, உயிர்அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்
இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்
செய்யும் விண்ணப்பமே!

(பொய்ந்நின்ற-பொய்யில்நின்ற, பொய் யாக நிலைபெற்ற, ஒழுக்கு-ஒழுக்கம், நடத்தை, இந்நின்ற நீர்மை-இத்தகைய நிலைபெற்ற இயல்பு, பிறவித்துன்பம். உறாமை- அடையாத படி, உயிர்அளிப்பான்-உயிர்களைக் காப்பதற் காக. எந்நின்ற யோனியுமாய்-எப்படிப்பட்ட பிறப்புகளையும் உடையவனாய், இமையோர்-தேவர்கள், விண்ணப்பம் -வேண்டுகோள்.)

**நுண்பொருட் குறிப்புகள்:**

இவ்வினிய சிறந்த பாடலின்கண் உள்ள, ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும், மிக நுண்ணிய சிறந்த கருத்துக்கள் செறிந்து காணப் படுகின்றன. சிந்திக்குந் தோறும் இவைகள் சிந் தனைக்கு விருந்தாய்ச் சிறந்து திகழுகின்றன. ஈண்டுச் சில கருத்துக்கள் மிகவும் சிறப்புடைய யனவாக விதந்து குறிப்பிடத்தக்கவையாகும்.

*(1)* நாம் பிறவிகளைப் பெறுவதற்கும், இறைவனொடு கூடாமற் பிரிந்திருப்பதற்கும், பொய்ந்நின்ற ஞானம்-பொல்லா ஒழுக்கம்-அழுக்குடம்பு ஆகிய மூன்றுமே முதன்மையான காரணங்கள்.

*(2)* தண்டகாரணியத்தில் முனிவர்கள் இராமபிரானிடம் சென்று, 'இஃது ஒரு வெட்டு, இஃது ஒரு குத்து, இதைப்பார், இதனைக் காண்' என்று அரக்கர்கள் தமக்குச் செய்த கொடுமைகளைக்கூறித், தம் உடம்பைக் காட்டி னாற்போல, ஆழ்வார் எம்பெருமான்பால் தமது ஆத்மாவைக் காட்டி, பொய்ந்நின்ற ஞானம் முதலிய மூன்றையும்சுட்டி, 'இந்நின்ற நீர்மை' என்கின்றார் என்று, ஆளவந்தார் அருளிச் செய்வராம்.

*(3)* 'அடியேன் செய்யும் விண்ணப்பம்' என்று குறிப்பிடும் ஆழ்வார், அதற்கு ஏற்ப 'யான் உறாமை' என ஒருமையிற் கூறாமல், 'யாம் உறாமை' எனப் பன்மையிற் கூறுகின் றார். இஃது ஆழ்வாரின் தன்னலம் அற்ற பர நல உணர்வைப் புலப்படுத்துவதாகும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என் பதே பெரியோர் இயல்பாதலை, இதனால் நாம் இனிதுணரலாம்.

இச் சொற்றொடருக்கு 'வியாக்கியானச் சக்கரவர்த்தி ஆகிய பெரியவாச்சான்பிள்ளை அவர்கள், ''பிறர்படும் துன்பம் (பராநர்த்தம்) நெஞ்சிற்படுகையாலே நாட்டுக்காகத் தாம் மன்றாடுகின்றார்'' என்று எழுதியுள்ள சிறப் புரை அறிந்து மகிழற்பாலது.

*(4)* 'பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே' எனவும், 'பிறப்பில் பல்பிறவிப் பெரு மான்' எனவும் புகழ்ந்தோதப்படும் சிறப்பினனா தலின், இறைவனை 'எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்' என்றார்.

*(5)* கீதையிற் கண்ணபிரான் 'நல்லவர் களைப் பாதுகாப்பதன் பொருட்டு வந்து பிறக் கின்றேன்' என்று அருளிச் செய்திருத்தலின், இங்ஙனம் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்த

டன் வேதவடிவினன். ஆதலால் சிறந்த பிர மாணம் ஆகிய வேதத்தை ஆழ்வாரது திரு வுள்ளம் பின்பற்றிக் கடைப்பிடித்து ஒழுகுதல் உணரலாம். (2) 'தழல்போல் சினத்த அப்புள்' என்று பகைவரை அழிக்கவல்ல அந்தப் புள் ளின் ஆற்றலைக் கூறுதலால், அவ்வேதப் பிர மாணம் புறமதங்களின் புன்மைகளை அழிக்க வல்லது என்பதை உணரலாம். (3) 'சக்கரத்து அண்ணல் கடவும் புள்' என்றதனால் அந்த வேதப்பிரமாணம், இறைவனின் அருள் வரம் புக்கு உட்பட்ட அரும்பெறல் உடைமைஎன்பது விளங்கும். (4) 'விண்ணோர் தொழக் கடவும் புள்' என்றதனால் அந்தப்பிரமாணத்தின் வலி மையால் தேவர்கள் யாவரும் இறைவனுக்கு அடிமைப்படுவர் என்பது பெறப்படும்.

நப்பின்னைப் பிராட்டியானவள் கும்பர் என்னும் இடையர்குலத் தலைவனின் மகள் ஆதலால், ''குழற்கோவலர் மடப்பாவை'' என அவளைச் சிறப்பித்தார். வேய்ங்குழலின் இசை இனிமையினால் அறிவில்லாத பசுக்களையும் வசப்படுத்தவல்ல இடையர் குலத்தில் பிறந்தத னால், பண்மயத்த தன் மொழியழகின் இனிமை யினால் பேருணர்வினன் ஆகிய பெருமாளையும் தனக்கு அடிமையாம்படி வயப்படுத்த வல்ல வள் என்பது குறிப்பு நுண்பொருள். குழல் என்பதைக் கூந்தற்கும் அடையாகக் கொள்ள லாம்.

சீதேவி பூதேவி நீளாதேவி என்னும் தேவி யர் மூவரும், இறைவனை விடாது பிரிவறத் தொடர்ந்து நிற்பது பற்றியும்; அவனதுஉள்ளக் களிப்பிற்கும் கிளர்ச்சிக்கும் காரணமாயிருப்பது பற்றியும்; அவனது திருவடிச் சார்பு பெற்றிருப் பது பற்றியும் 'நிழல் போல்வனர்' எனச் சிறப் பித்தார். இனி, எம்பெருமானுக்கு நிழல் போன் றிருப்பவர்கள் என்று பொருள் கொள்வது அல் லாமல், இவர்கள் தம்மில் ஒருவருக்கொருவர் சீறுபாறு என்று பிணங்கிப் பூசலிடாமல், ஒரு வருக்கொருவர் உள்ளம் ஒத்து அன்பின் இயைந்து நிழல்போல் விளங்கும் இயல்பினைக் குறித்ததாகவும் கொள்ளலாம். இங்ஙனம் அன்றி, அடியார்க்குகளுக்கு அவர்களின் உள்ளம் மகிழும்படி, அரியபல நல்ல தண்ணளிகளைச் செய்து, நிழல் போன்றிருப்பவர்கள் என்றும் பொருள்கொள்ளுதல் பொருந்தும்.

இத் தேவிமார்கள் இறைவனிடத்திலிருந்து ஒரு சிறிதும் பிரியப்பெறாமல் இருப்பது போல, நமக்கும் நித்தியயோகம் கிடைக்குமோ! இன்ன மும் மாறிமாறிப் பல பிறப்பும் பிறக்கும்படி யாகவே நேருமோ என்று, பராங்குச நாயகி யாகிய ஆழ்வார் கவலைப்படுகின்றனர். ஆத லின் அக் கவலையுணர்வைத் தமது நெஞ்சின் மேல்ஏற்றி, 'கண்டு நிற்குங்கொல் மீளுங்கொல்' என ஆழ்வார் ஐயுற்று வினவி அலமருகின்றார்.

''தண்ணந்துழாய் அழல்போல் அடும் சக் கரத்து அண்ணல்'' என்பதற்குக் குளிர்ந்த துளசிமாலையையும், நெருப்புப்போலப் பகை வர்களைச் சுட்டு அழிக்கின்ற சக்கரத்தையும் உடைய பெருமாள் என்று பொருள் கொள்வது மட்டும் அன்றி, வேறு வகையாகவும் பொருள் கூறலாம். குளிர்ச்சியையுடையதாகக் கூறப் பெறுகின்ற துளசிமாலையினுடைய தாங் கரிய வெப்பத்தைப் போல, மிகுந்த வெப்பம் எனவும் பொருள் கொள்ளலாம். 'குளிர்ந்த துழாய்மாலையும் வெப்பமுடையதாக விளங் குமோ?' எனச் சிலர் வினவுவர். காதல் வயப் பட்டு வருந்துபவர்களுக்குக் குளிர்ந்த பொரு ளும்கூட வெதும்புவதாகவே விளங்கும். 'மேவு தண்மதியம் வெம்மதியமாலோ, மென்மலர்ப் பள்ளி வெம்பள்ளியாலோ'' எனப் பிறிதோரி டத்தில் இவ்வாழ்வார் பாடியிருத்தல் இதற்குச் சான்றாகும்.

ஆழ்வார், தமது திருவுள்ளம் வேதங் களிலே புகுந்து ஈடுபட்டு அந்தப் பிரமாணங் களின் மூலமாகத் திருமாலை அனுபவிக்கத் தொடங்கிற்று என்றும்; இணையற்ற இவ் அருளனுபவம் இங்ஙனமே மாறாமல், நிலை பெற்று நித்தியமாய் இருக்குமோ? அல்லது நிலை பிறழ்ந்து மாறிப்போய் விடுமோ? அங் ஙனம் மாறிவிடின் யான் எங்ஙனம் ஆற்றவல் லேன் என்றும்; தமக்குத் தம் ஆர்வமையினால் ஏற்படும் ஐயப்பாடுகளை இப்பாசுரத்தில் அரு ளிச் செய்திருக்கின்றார்.

''அடியவர்களுக்குக் கடவுள் இடத்தில் ஏற்படும் அளவற்ற அன்பின் இயல்பினைப் பாலியற் காதலுணர்வு (Sex love) நிலை யில் வைத்து, ஒப்புமைப்படுத்தி உருவகம் செய்து அழகுற விளக்குதல், அனைத்துச் சம யங்களிலும் காணப்படுகின்ற, ஒருவகைச் சிறந்த இலக்கிய நுண்பொருட் கவிதை மரபு நெறியாகும். ஒருசிலர் பிறழ நினைப்பதுபோல, அஃது ஓர் இழிதகவான காம உணர்ச்சிபற்றிய நோய்க்கூறு என்று தவறாக நினைத்தல் பொருந்துவதன்று. அது மிகவும் தூய புனிதம் சான்ற மேலான விண்ணுலகத்துத் தெய்விகக் காதலுணர்வின் அனுபவ நலத்தை, மண்ணுலக மக்களாகிய நம்மனோர்க்கு விளங்கச் செய்து உணர்த்தும்பொருட்டுக், கவிதைகளும் இலக்கி யங்களும் கையாளுகின்ற ஒருவகை மரபு நெறிக் கருவியேயாகும். இத்துறையில் ஆழ்வார் களாகிய வைணவப் பெரும் சான்றோர்கள் அருளிச் செய்துள்ள பாடல்கள், ஈடும் எடுப் பும் அற்ற, உலக இலக்கியங்களிலேயே எழி லோங்கிச் சிறந்த திகழ்கின்றன எனத் துணிந்து கூறலாம்.''(3).

பராங்குச நாயகியாக மாறி, நம்மாழ்வார் பாடியருளியுள்ள நலம்சிறந்த இத் திருவிருத்தப் பாடல்கள் அனைத்தும், இதற்கு ஓர் இணை யற்ற இனிய எடுத்துக்காட்டு ஆகும். (3)

---

(3) "Though yearning after God is often delineated on the analogy of sex-love, this analogy, is seldom carried to excees by studied attempts following all the pathological symptoms of erotic love. It therefore, represents a very chaste form of the expressions of divine love in terms of human love. The Azhvars were probably the pioneers in showing how love for God may be on terms of tender equality, softening down to the rapturous emotion of conjugal love".

PROF. S. N. DAS GUPTA,
The History of Indian Philosophy,
Volume—III, Page—84

உ

# திருநாவுக்கரசர் மாட்சி

'சிவநெறிச் செல்வர்'
திரு. ஆ. இராசரத்தின முதலியார்,
சானடோரியம், தாம்பரம், சென்னை.

## முன்னுரை

உலகில் பிறவி எடுத்த உயிர்கள் இன்பப் பேற்றை விரும்புகின்றன. இது இயற்கை. பேரின்பம் பெறும்பேறுதான், மக்கட் பிறவியின் பெரும்பயன். இப் பேரின்பப் பேறு கருதியே, இறைவனை அடைய அடியார்கள், குறிப்பாகச் சைவ அடியார்கள் முயலும் மார்க்கங்கள் நான்கு. அவற்றுள் ஒன்று ''தாசமார்க்கம்''. இதன் வாயிலாகச் சிவபெருமானைத் தன் அனுபவங்களால் நேரில் கண்டு பேரின்பப் பெருவாழ்வு எய்திய பெரியார் ''திருநாவுக்கரசு சுவாமிகள்''. இவர் சைவ சமயாசாரியார் நால்வருள் ''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட'' செல்வர் ஆவார்.

நமது அருமைச் சைவசமயத்தில், நால்வர் பெருமக்கள் தோன்றி இராவிட்டால், திருநீற்றின் பெருமையை உலகம் அறிந்திராது. சைவ சமயத் தத்துவ நூல்களின் நுண்பொருள்கள், நிலைபெற்றிருக்கமுடியாது. வேதம்நான்கினும் மெய்ப்பொருளாகிய நாதன் நாமமாம் ஐந்தெழுத்து மந்திரத்தின் அருமையினை, மண்ணில் பிறந்தவர்கள் உணரமாட்டார்கள். இக் கருத்தைச் சிவானந்தமாலை பின்வருமாறு சித்திரிக்கின்றது.

''சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்
எம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்-முற்கோலி
வந்திலரேல் நீறுஎங்கே!? மாமறை நூல்தான்
எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே?''

நால்வருள் அப்பர் பெருமானின் தனிச் சிறப்பு யாதெனில், இவர் வயதில் முதிர்ந்தவர். பிற மதத்திற்குச் சென்று அதன் கோட்பாடுகளை ஏற்காமல் மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தவர். நான்கு வழிகளில்ஒன்றாகிய''சரியை'' மார்க்கத்தில் நின்றவர். சிவானந்தப் பேற்றை உலகிற்கு உணர்த்திச் சைவ சமயத்திற்குத் தொண்டு பல, பல்லாண்டு புரிந்த மகான். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தாரக மந்திரத்தைப் போற்றிச் செயலில் காட்டிய செந்நெறிச்செல்வர்.

## அப்பரின் அருஞ்செயல்கள்

அவர் ஆற்றிய பணிதான் என்ன? பல ஊர்களில் திருமடங்கள் அமைத்தார். கையில் உழவாரப் படையுடன் திருத்தலங்கள் தோறும் சென்று தொண்டு செய்தார். அடியார்கள் பலர்சூழ ஆலய வழிபாடு செய்தார். திருவீழிமிழலையில் மக்கள் பசியால் வாடியபோது, இறைவனிடம் வாசி இல்லாத காசு பெற்று, ஏழை அடியார்களின் அரும் பசிப்பிணியைப் போக்கினார். காந்தியடிகளுக்கு முன்னரே, 1300 ஆண்டுகளுக்கு முன்பாக, முதன்முதலாக ''உண்ணாவிரதம்'' என்ற உண்ணாநோன்பு (சத்தியாக்கிரகம்-அறப்போராட்டம்)ஆரம்பித்துக் கடைப்பிடித்தவர், அப்பர்பெருமான் எனலாம். சோழநாட்டில் பழையாறை வடதளியில், சமணர்களால் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தை வெளிப்படுத்தும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார், அப்பர் என்னும் செய்தியை யாவரும் அறிவர். அப்பர்பெருமான் திருமறைக்காட்டில் மறைக் கதவம் திறக்கப்பாடினார்; அப்பூதி அடிகளாரின் மூத்தமகன் மீண்டும் உயிர் பெற்று எழச் செய்தார்.

திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்திற்குச் செல்லும் வழியில், சிவபெருமானால் பொதி சோறும் நீரும் கொணர்ந்து அளிக்கப்பெற்றார். சமணர்கள் நீற்றறையில் இடுதல், மதயானையைக் கொண்டு ஏவுதல், நஞ்சு கலந்த சோறு கொடுத்தல், கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் இடுதல் போன்ற பல கொடிய கொலைச் செயல்களைச் செய்தபோதும், அவற்றால் ஒரு சிறு தீங்கும் நேராமல், இறையருளால் உயிர் தப்பி உய்ந்தார். திருநல்லூரில் சிவபெருமானின் திருவடித் தீக்கை பெற்றார்; திருவையாற்றில் திருக்கயிலாயக் காட்சியைக் கண்டார்; அதற்கு முன்பு தமிழகத்திலிருந்து பல நாடுகளைக் கடந்து நெடுந்தொலைவு பயணம் புரிந்து கயிலாய யாத்திரை செய்ய முயன்றார். இறைவனே ஒரு முதிய வேதியராகவந்து, நீர் கயிலைக்குச் செல்லுதல் இயலாது, திரும்பிச் செல்க என்று கூறியபோது ''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என்று உறுதி

யாகக் கூறினார். உடல் தளர்ந்தும், உள்ளம் தளராது உறுதியோடு இருந்தார். இத்தகைய அப்பர் பெருமானின் பண்புநல மாட்சிகளுக்கு ஓர் அளவேயில்லை.

## 1. ஆலய வழிபாடு

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலவர்தன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்,
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்,
ஆரூரா என்றென்றே அலறா நில்லே!

எனவரும் திருத்தாண்டகப் பாடலில், ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையினையும், அதன் முறைகளையும், அப்பர் அழகுற விவரித்தருளினார்.

## 2. குற்றம் குறைகள்

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்
பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் சோலம் ஆய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானிஅல்லேன்
நல்லாரோடு இசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லாது ஒழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவே மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே!

எனவரும் மற்றொரு திருத்தாண்டகப் பாடலில், உலக மக்களின் குறைகளை எல்லாம், தாமே தம்மீது மேலிட்டுக் கொண்டு, தம்மைப் பலவகையான குறைகள் உடையவராகக் கூறிக் கொள்ளுகின்றார். இவ்வாற்றால் திருநாவுக்கரசர் 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற திருக்குறளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, விளங்குதல் காணலாம்.

## 3. குலம், கோத்திரம்

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டுஎன் செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே!

என்னும் திருக்குறுந்தொகைப் பாடலில், சாதி வேறுபாடுகளையும், கோத்திரப் பூசல்களையும் இழித்துப் பழித்துக் கடிந்து கூறுகின்றார்.

## 4. புலையரும் கடவுளரே

காந்தியடிகள் தோன்றிய இவ் இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டு, 1300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர், இந் நாளில் அரிசனர் எனப்படும் பிற்பட்ட—பிற் படுத்தப்பட்ட—மக்களின் வாழ்க்கை நிலை குறித்து எத்தகைய உருக்கம் கொண்டார்? அவர்களை எவ்வாறு மதித்துப் பெரிதும் போற்றிக் கடவுளாகவே கொண்டு தொழுதார் என்பது, பின்வரும் சிறந்த திருத்தாண்டகப் பாடலால் தெளிவாக விளங்குகின்றது.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து,
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்.
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்!
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்,
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்,
அவர்கண்டீர்! நாம்வணங்கும் கடவு ளாரே!

## 5. இறையருள் வெளிப்பாடு

இறைவன் விறகில் மறைந்திருக்கும் தீயைப்போலவும், பாலில் கலந்து கரந்திருக்கும் நெய்யைப்போலவும்; பட்டை தீற்றிக் கடையப் படாத மாணிக்கத்தின்கண் ஒடுங்கி நிற்கும் பேரொளியைப் போலவும், எல்லாப் பொருள் களிலும், எல்லா உயிர்களிலும் உடனாகிக் கலந்து மறைந்து உறைந்திருக்கிறான். அவ் இறைவனை உறவு என்ற கோலை நட்டு, உணர்வு என்ற கயிற்றினால் ,, கடைந்தால், இறைவன் எங்ஙனம் வெளிப்பட்டு அருள்வான் என்பதை, மிகவும் சிறிய, ஆனால் மிக மிகஇனிய சிறந்த குறுந்தொகைப் பாடல் ஒன்றினால், தெளிவுற விளக்கியருள்கின்றார்.

விறகில் தீயினன்; பாலிற் படும்நெய்போல்
மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்;
உறவு சோல்நட்டு, உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய, முன் நிற்குமே!

மாணிக்கத்திலிருந்து அதன் ஒளியை வெளிப்படுத்த வேண்டுமாயின் அதனை ஒரு சிறிது மெல்லக் கடைந்தால் போதும், பாலில் கலந்து மறைந்துள்ள நெய்யை வெளிப்படுத்த, அதனை நன்றாகக் காய்ச்சிப் பிறைகுற்றித் தயி ராக்கி, அத் தயிரில் மத்தைக் கொண்டு வலி மையாகக் கடைதல் வேண்டும்; விறகை மேலோட்டமாகப் பார்க்கும்போது, அதன்கண் நெருப்பானது மறைந்திருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால் இரண்டு விறகுக் கட்டை களைக் கொண்டு, ஒன்றனோடு ஒன்றை மிக வும் வலிமையாக அழுத்தி உரசி, நெடுநேரம் பாடுபட்டு உழைத்துக்கடைந்தால்விறகிலிருந்து நெருப்பானது வெளிப்படும். மணியிலிருந்து ஒளியை வெளிப்படுத்த மெல்லக் கடைந்தால் போதும்; பாலிலிருந்து நெய்யை வெளிப்படுத்த வலிமையாக இழுத்து வாங்கிக் கடைய வேண் டும்; விறகிலிருந்து நெருப்பை வெளிப்படுத்த மிகவும் வலிமையாக நெடுநேரம் முறுக வாங்கிக் கடைதல் வேண்டும்.

விறகு பால் மணி என்று மூன்று பொருள் களைக் குறிப்பிட்டாலும், அம்மூன்றிற்கும் பொருந்தும்படியாக 'கடைதல்' என்ற ஒரு சொல்லையே தேர்ந்தெடுத்து, அதனை 'மெல் லக் கடைதல்' 'வாங்கிக் கடைதல்' 'முறுக வாங்கிக் கடைதல்' என்ற மூன்றற்கும் ஏற்ற வாறு, அடைமொழி கொடுத்து விளக்கிக் காட்டியிருப்பது, திருநாவுக்கரசரின் சிறந்த சிவஞானச் சிறப்பினையும், உயர்ந்த செந் தமிழ்ப் புலமை நலத்தினையும் தெளிவுற விளக்குகின்றது.

உத்தமர்-மத்திமர்-அதமர் என்று மக்கள் மூன்றுவகைப் படுவர். அம் மூவர்களுக்கும் இறைவன் எங்ஙனம் முறையே வெளிப்பட்டு

அருளுகின்றான் என்பதை உணர்த்துவதற்காக, இந்த மூன்றுவகையான பொருள்களைத் திருநாவுக்கரசர் உவமையாக எடுத்துக்காட்டியிருப்பது பெரிதும் ஆழ்ந்து சிந்தித்து வியந்து மகிழ்தற்குரியது.

### 6. குறிக்கோள் வேண்டும்

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தம்முடைய வாழ்க்கையினுடைய குறிக்கோளாக ஏதேனும் சிறந்த ஒன்று இருத்தல் வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை நிலைகுலைந்து அலைந்து தட்டுத் தடுமாறிக் கெட்டு அழிந்தொழிந்து போகும் என்பதனை நமக்கு உணர்த்த,

பாலனாய்க் கழிந்த நாளும்,
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்,
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்,
குறிக்கோள் இலாது கெட்டேன்!
சேல்உலாம் பழனவேலித்
திருக்கொண்டீச் சரத்து உளானே

என்னும் அழகிய இனிய பாடலை, அப்பர் பெருமான் அருளிச் செய்திருத்தல், நாம் பெரிதும் கூர்ந்து கவனித்து ஓர்ந்து உணர்தற்கு உரியது.

### 7. மாயமாம் இதற்கு மகிழ வேண்டாம்

இவ்வுலக வாழ்க்கை நிலையில்லாதது என்பதனை, நிலையில்லாத இவ்வுலகத்தில் நமக்குத் தாய் தந்தை சகோதரர் மனைவி மக்கள் ஆகிய எத்தனைபேர் இருந்தாலும், அவர்களெல்லாம் நமக்கு உண்மையான துணையாக மாட்டார்கள் என்பதனையும், இறைவன் ஒருவனே உயிர்களுக்கெல்லாம் உற்ற துணையாக இருந்து உதவிபுரிய வல்லவன் என்பதனையும், அப்பெருமானின் திருவைந்தெழுத்தை நாம் முறையே அன்போடு ஓதி வருவோமாயின், இறைவன் நம்மைக் காத்தருள்புரிவான், நாம் சிவலோகத்தில் இன்புற்று வாழலாம் என்பதனையும், திருநாவுக்கரசர் பெருமான் நம்சிந்தை உருகுமாறு ஒரு செந்தமிழ்த் திருத்தாண்டகத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

தந்தை யார்? தாய்யார்? உடன்பிறந்தார்,
தாரம்ஆர்? புத்திரர்ஆர்? தாம்தாம் யாரே?
வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ?
மாயமாம் இதற்குஏதும் மகிழவேண்டாம்!
சிந்தையீர்! உமக்கொன்று சொல்லக்கேள்மின்!
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும்சென்னி,
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்க
லாமே!

### 8. சொற்கு உறுதிக்கு அப்பர்

நம்முடைய தமிழ்நாட்டில் எத்தனையோ பல ஞானிகளும் அருட்பெருஞ் சான்றோர்களும் தோன்றி உள்ளனர். அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. உதாரணமாக வாக்கில் சிறந்தவர் அருணகிரிநாதர்; உள்ளம் உருகப் பாடுதலில் வல்லவர் மாணிக்கவாசகர்; பலவகையான சந்தச் செந்தமிழ் நடையில் விதவிதமான பாடல்களைப் பாடுவதில் வல்லவர் திருஞானசம்பந்தர்; ஒவ்வொரு சொல்லிலும் நுணுக்கமான ஆழ்ந்த பொருள்களை அமைத்துப் பாடும் திறமையாகிய நோக்கு என்னும் செய்யுள் அமைக்கும் ஆற்றலில் வல்லவர், சங்கத் தமிழின்தலைமைப் புலவராகிய நக்கீரர்: நயமாகவும்சுவையாகவும் கற்பவர் நெஞ்சம் களிதுளும்பும்படி பாடுவதில் வல்லவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்; நம்முடைய திருநாவுக்கரசர் பெருமானோ, மக்களாகிய நம்மையெல்லாம் ஈடேற்றி உய்விப்பதற்காக, உயர்ந்த சிறந்த ஞான உபதேசங்களை உறுதியாக எடுத்துக்கூறி உணர்த்துவதில் ஒப்புயர்வற்றவர். இதனை,

''வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கில் திருஞானசம்பந்தர்— நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திற்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்''

எனவரும் சிறந்த தனிப்பாடலால் யாவரும் உணரலாம். திருநாவுக்கரசர் எத்தகைய உறுதிமிக்க, உறைப்பு மிக்க சொல்லாற்றல் உடையவர் என்பது, ''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்; ஏமாப்போம்; பிணி அறியோம்; பணிவோம் அல்லோம்; இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' எனவரும் மறுமாற்றத் திருத்தாண்டகப் பாடல்களால் செவ்விதன் உணரலாம்.

## முடிவுரை

இ தியாக ஒன்று சொல்லி இக்கட்டுரையை முடிப்போம். சிவஞானச் செல்வராகிய நம் திருநாவுக்கரசர் பெருமான், நாம் சிவபெருமானின் திருவருளைப் பெறவும், சிவகதி அடையவும் விரும்பினால், செய்யவேண்டுவனவற்றை, பின்வரும் அழகிய பாடலில் தெளிவுறக் கூறுகின்றார்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவுஎனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பீர் ஆகில்
சிவகதி விளையும் அன்றே

திருநாவுக்கரசர் அருளிச் செய்து, நமக்கு ஞானோபதேசம் புரிந்தருளிய வண்ணம், நாம் அனைவரும் மெய்ம்மை (சத்தியம்) ஆகிய உழவைச் செய்வோம்; விருப்பம் என்னும் விதையை விதைப்போம்; பொய்ம்மையாகிய களைகளை நீக்குவோம்; பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சுவோம்; நம்மை நாமே உள்முகமாக நோக்கி நம் குற்றங்களை நீக்கிக் கொண்டு, குணங்களை வளர்த்துக்கொள்வோம். தகவு என்னும் வேலியை இடுவோம்; மனமொழி மெய்கள் மூன்றும் தூய்மையாகவும் நேர்மையாகவும் செம்மையாகவும் அமையச், சிறந்த தெய்விக வாழ்க்கை வாழ்வோம். அங்ஙனம் வாழ்ந்து, அதன் பயனாகச் சிவகதி அடைவோமாக!

# தமிழகச் சமயங்களும் திருக்கோயில்களும்

'கலைமாமணி'

திரு. கவிஞர் மனசை ப. கீரன், B.A.,BT.,

அனைத்திந்திய வானொலி நிலையம், சென்னை-4.

**முன்னுரை:**

தமிழகம் சமயங்கள் பலவற்றின் பிறப்பிடமாகும். இன்று உலகத்தில் பௌத்தம் (கி.பி. 2500), சமணம் (கி.பி.2500), கிறித்தவம் (1983), இசுலாமியம் (கி. பி. 622) சீக்கியம் (கிபி. 1469) என்னும் மதங்கள் பல உள்ளன.

**இந்துமதம்:**

எனினும், இவற்றிற் கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்டது நமது இந்துமதம். இந்து மதம் என்னும் பெயர், பல சிறு பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு தொகுதிப் பெயர், ஆகும்.

சிவனை வழிபடும் சைவம், விஷ்ணுவை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், குமரனாகிய முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணபத்தியம், சூரியனை வழிபடும் சௌரம் என்னும் சமயங்கள், இந்துமதம் என்ற பிரிவில் அடங்கும்.

**சமயம்:**

'சமையம்' (சமயம்) என்னும் சொல், சமைப்பது என்னும் பொருளுடையது. அரிசியைச் சோறு ஆகச் செய்வது சமையல் எனப்படுவது போல, மனிதனின் வாழ்க்கையை நல்வழிகளில் ஈடுபடச் செய்து, பண்படுத்தி, பக்குவமாக்கிச் சமைப்பது சமயம் எனப்படும். அவ்வாறே மதம் என்னும் சொல், மதி என்னும் பகுதியிலிருந்து தோன்றியது. மதி-அறிவு. மதித்தல்-ஆராய்தல். மனிதன் தன் அறிவினால் உலகத்தையும் உலகப் பொருள்களையும் அவற்றின் இயக்கத்தையும், தன் வாழ்க்கையின்இன்ப துன்பங்களையும் அறிவினால் ஆராய்ந்து கண்ட முடிவுகளே மதம் என வழங்கப்படுகின்றன.

மனிதனிடத்தில் மறைந்துள்ள தெய்விகப் பண்புகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்துவது மதம் அல்லது சமயம் எனப்படும். (Religion is the manifestation of Divinity in man) மனிதனுக்குச் சமய உணர்வு என்பது இயற்கையிலேயே மாற்றமுடியாமல் அமைந்துள்ளது. (Man is incurably religious ). அதனாலேயே, புத்தர் பெருமான் கடவுளைப்பற்றி இல்லை என்றோ, உண்டு என்றோ ஏதும் கூறாவிடினும், நாளடைவில் அவரையே கடவுளாகக் கொண்டு மக்கள் வழிபடத் தலைப்பட்டனர்.

சமய உணர்வோடு கூடிய வாழ்க்கையே, ஒரு பண்பட்ட நல்ல தூய வாழ்க்கையாகும். சமய உணர்வில்லாதவன், அஃதாவது அறம், ஒழுக்கம், நல்லது கெட்டது என்பன பற்றிய உணர்வுகள் இல்லாதவன், விலங்குத் தன்மையும், அசுரத்தன்மையும் உடைய கொடியவனே ஆகிவிடுவான்.

சமயம் என்பதனையே 'வையத்து வாழ்வாங்கு வாழ்தல்' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டு அருளினார். அவரைப் பின்பற்றியே திருமூலரும் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று அருளிச் செய்தார்.

இந்நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற விஞ்ஞானியாகிய ஆல்பர்ட் ஈன்ஸ்டின் என்பவர் ''இறையியல் கலவாத அறிவியல்,முடத்தன்மை உடையது; அறிவியல் கலவாத இறையியல் குருட்டுத் தன்மை வாய்ந்தது'' ("Science without religion is lame, religion without science is blind") என்று கூறுகின்றார்.

தொல்காப்பியர், திருவள்ளுவர் முதலான நமது தமிழகச் சான்றோர்கள் அனைவருமே, பொதுவாகத் தெய்வநம்பிக்கையும், சமயஉணர்வும் உடையவராக விளங்கியிருந்தனர். ''தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்'' என்பது,சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள். உலகுக்குச் செய்தருளும் சிறந்த உபதேசமாகும்.

**1. சைவம்:**

சிவவழிபாடு, சுண்ணாம்புக் கற்காலம் ( Chalcholithic age ) எனப்படும் இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விளங்கியிருந்தது என்று, மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள்

தெரிவித்துள்ளனர். அமெரிக்கா ரஷ்யா கிரேக்கம் இத்தாலியம் இங்கிலாந்து முதலிய உலகின் பல பகுதிகளில், சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. அமெரிக்காவில்கொலரடோ என்னுமிடத்தில் சுமார் 10000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவலிங்கம் ஒன்று, 1937ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பெற்றது.

''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்'' என்று சேக்கிழார், சிவலிங்கம் உருவம் அருவம் என்னும் இரண்டு நிலைக்கும் உரியதாகத் திகழ்ந்தலைக் குறிப்பிட்டுள்ளார். நாகலிங்கப்பூவின் அமைப்பும், அமரநாதம் என்னும் வடநாட்டுத் தலத்தில் பனிக்கட்டியினால் இயல்பாக இயற்கையில் அமையும் திருவுருவமும், சிவலிங்கத்தின் இயற்கைத் தன்மையினை விளக்குவனவாகும்.

வரலாறு தோன்றாத காலத்திற்கு மிகவும் முற்பட்டே இராமேசுவரம் முதல், அமரநாதம் ஈறாக, இந்திய நாட்டில் உள்ள பன்னிரண்டு பழம்பெரும் தலங்களில் ''பன்னிரண்டு சோதிலிங்கங்கள்'' வழிபடப்பெற்று வருகின்றன. 'பழந் தமிழ்க் கொள்கையே சைவசமயம்' என்பது மறைமலை அடிகளார், சோமசுந்தரபாரதியார் போன்ற, பல தமிழ்ப் பேரறிஞர்களின் முடிபாகும். இவற்றால் சைவத்தின் பழமையும் பெருமையும் உணரலாம்.

**2. வைணவம்:**

சைவம் வைணவம் என்னும் இரண்டும், தமிழகத்தின் இரண்டு கண்களைப் போன்ற சமயங்களாகும். தொல்காப்பியர் காலத்திலேயே திருமால் வழிபாடு இருந்தது. முல்லை நிலத்தின் அதிதெய்வம் திருமால் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ''மாயோன்மேய காடுறை உலகம்'' என்பது தொல்காப்பியம்.

திருவள்ளுவரும் தம் திருக்குறளில் ''மடியிலாமன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு'' என்று வாமன அவதாரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். காமத்துப்பாலில் ''தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல், தாமரைக் கண்ணான் உலகு'' என்னும் குறளில், திருமாலைத் தாமரைக் கண்ணான் என்று புகழ்ந்து போற்றியுள்ளார்.

பரிபாடல் என்னும் சங்கநூல், திருமாலைப் பெரிதும் பரவிப் போற்றி யுள்ளது. சிலப்பதிகாரத்தில் திருப்பதி வேங்கடேசப்பெருமாளும், திருவரங்கம் அரங்கநாதரும் பெரிதும் சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளனர். ஆய்ச்சியர்குரவையில் ''திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே'' ''நாராயணா நம என்னா நாவென்ன நாவே'' என்றெல்லாம், திருமால் போற்றப் பெற்றுள்ளார்.

திருமாலின் அவதாரங்களாகிய இராமனும் கண்ணனும், இராமாயணம் மகாபாரதம் என்னும் இணையற்ற இதிகாசங்களால், தமிழ் மக்களின் உள்ளத்தில் பன்னெடுங்காலமாக இடம்பெற்று வழிபடப்பெற்று வருகின்றனர். ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலியவைகளால் வைணவத்தின் பெருமை, தெளிவுற விளங்கும்.

**3. சாக்தம்:**

சக்திவழிபாடும், அன்னைத் தெய்வ வழிபாடாகத்தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. பாலைத் திணைக்குரிய தெய்வம் துர்க்கை (கொற்றவை) என்று, தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

சக்தியாகிய அன்னைத் தெய்வ வழிபாட்டைச் சிலப்பதிகாரம் வேட்டுவவரியில் விரிவாகக் காணலாம். சாக்தம் என்னும் மதம், வாமமார்க்கம், தட்சிணமார்க்கம் என்று இருவகைப்பட்டிருந்தது. வாமமார்க்கம் வடஇந்தியாவில் பெரிதும் பரவி இருந்தது. அது, மது மாமிசம் மைதுனம் முதலிய தீய பழக்கங்களுக்கு இடம் அளிக்க நேர்ந்ததனால், நாளடைவில் அழிந்து போயிற்று.

தட்சிணமார்க்கம் என்னும் தென்னகத்துச் சக்திவழிபாடு, தாய்மைத் தெய்வம் ஆகிய அம்பிகையை அருளும் இரக்கமும் கருணையும் கொண்டவளாக, மிகவும் சிறந்த முறையில் வழிபட்டு வந்தது. இப்போது சாக்தம் என்று ஒருமதம் தனியாக இல்லை. அது சைவத்தின் ஒரு பகுதியாக ஒன்றிப்போய்விட்டது. இவ்வாறே சூரியனை வழிபடும் சௌரம் என்னும் மதமும், இப்போது தனியாக வழங்கவில்லை.

காணபத்தியம், கௌமாரம் என்பன, இன்று தமிழ்நாட்டில் மிகப்பெரிதும் பரவியுள்ளன. பிள்ளையார்கோயில் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு. அவ்வாறே முருகன் கோயிலும் பொதுவாக எல்லாக் கிராமங்களிலும் இருக்கக் காண்கின்றோம். ஆயினும் அவைகளைத் தனித்தனியான சமயங்களாகப் பிரித்துக் கருதுவது இல்லை. அவைகள் இரண்டும் சைவம் என்பதன் உள்ளடக்கமே யாகும்.

பண்டைக் காலத்தில் தமிழகத்தில்சமணம், பௌத்தம்என்பனவும்பெரிதும் பரவியிருந்தன. ஆயினும், வாழ்க்கையொடு பொருந்தாத கடுந்துறவு நெறியையே பெரிதும் வற்புறுத்தியதனால், நாளடைவில் மக்களிடையே செல்வாக்கு அற்றுப் பெரும் அளவில் மறைந்து, இந்துமதத்தின் கிளைப் பிரிவுகளாகவே கருதப்படும் நிலையில் உள்ளன. அவற்றின் பல கொள்கைகளையும் இயல்புகளையும் இந்துமதம் தன்னுள் ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

**திருக்கோயில்கள்:**

தமிழகத்தில் ஏராளமான திருக்கோயில்கள் உள்ளன. 'கோயில்' என்னும் சொல்லுக்குத் தொல்காப்பியத்திலேயே புணர்ச்சிவிதி கூறப்பட்டுள்ளது. கோயில்களில் படிமங்கள் என்னும் விக்கிரகங்கள் இருந்தமை பற்றியும், தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. கோயில்களுக்கு மானியங்கள், அறக்கட்டளைகள் முதலியன

மிகுதியாக வழங்கப்பெற்றிருந்தன. அவைகள் நன்கினிது நடைபெறுகின்றனவா? என்று, அரசனும் அரசு அலுவலர்களும் கண்காணித்து வந்தனர். இதனை 'அறப்புறங் காவல்' என்று தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகிய பண்டைத்தமிழ் நூல்கள், சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

கோயில்களில் சிறப்புத் திருவிழாக்களும், நாட்பூசனைகளும் முறையே நடைபெற்று வந்தன என்பதனை,

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

என்னும் திருக்குறளால் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**திருவிழாக்கள்:**

சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இந்திரவிழாவைச் சிறப்பித்துக் கூறுகின்றன. உறையூர்ப் பங்குனி உத்திரம், மதுரை ஆவணி அவிட்டம், கருவூர் உள்ளிவிழா என்பன, மிகப்பெரிய சிறந்த விழாக்களாக, நக்கீரரால் இறையனார் அகப்பொருள் உரையில் குறிக்கப்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர்த் தேவாரத்தில், மாதந்தோறும் திருமயிலையில் நிகழ்ந்த பல வேறு சிறப்புத் திருவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

திருவிழாக்கள் ஒரு நாட்டின் கலை-நாகரிகம்-பண்பாடு-மக்களின் ஒற்றுமை-இன்ப வாழ்க்கை-செல்வச்செழிப்பு என்பனவற்றை விளக்குவனவாகும். நமது தமிழகக் கோயில்களின் அருமை பெருமைகளை, அங்கங்கு நடைபெறும் திருவிழாக்களால் இனிது உணரலாம்.

திருமயிலை அறுபத்துமூவர்விழா, காஞ்சிபுரம் கருடசேவை விழா, திருவண்ணாமலைக் கார்த்திகைவிழா, சிதம்பரம் திருவாதிரைவிழா, திருவரங்கம் வைகுண்ட ஏகாதசிச் சொர்க்க வாசல்விழா, மதுரைச் சித்திரைவிழா, இராமேசுவரம் சிவராத்திரிவிழா, திருச்செந்தூர்க் கந்தர்சஷ்டி விழா, முதலிய கோயில் விழாக்களால், தமிழகத்தின் பலவகைச் சிறப்புக்கள் உணர்த்தப்பெறுகின்றன.

**திருக்கோயில்களின் சிறப்பு:**

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பெற்றுள்ள தலங்களுக்கும், கோயில்களுக்கும் உள்ள பெருமைகளைத் தேவாரத் திருமுறைகளாலும், திவ்வியப் பிரபந்தங்களாலும் யாவரும் இனிதுணரலாம்.

கட்டிடக்கலை-சிற்பக்கலை-ஓவியக்கலை-இசைக்கலை - நடனக்கலை முதலிய பல்வேறு கலைகளும், கோயில்களில் தொன்றுதொட்டுப் போற்றி வளர்க்கப்பெற்று வருகின்றன.

தமிழகத்திலுள்ள ஆறுபடைவீடுகள், பஞ்சபூதத் தலங்கள், அட்டவீரட்டத் தலங்கள், சப்தவிடங்கத்தலங்கள், மற்றுமுள்ள பல்வேறு பிரார்த்தனைத் தலங்கள் ஆகியவற்றில் ஒவ்வொன்றின் சிறப்பினையும், ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தித்து உணர்வதனாலும், நேரில் சென்று கண்டு மகிழ்வதினாலுமே உணரமுடியும்.

**முடிவுரை:**

தமிழ்நாட்டிற்கு இன்று கிடைத்துள்ள அளப்பருஞ் சிறப்புச் செல்வம், கோயில்களே யாகும். கோயில்களையும், அவற்றைச் சேர்ந்த பொருட்செல்வம், கலைச்செல்வங்களையும், அவற்றால் வளர்க்கப்பெறும் தமிழ்க்கலை நாகரிகப் பண்பாட்டுச் செல்வங்களையும், அழியாமல் பாதுகாக்க வேண்டுவது, தமிழ்மக்கள் அனைவருக்குமே உரிய தலையான சிறந்த கடமையாகும்.

***

# பெருமாள் திருமொழி

**தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை;**
**விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டு அம்மானே;**
**அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றுஅவள் அன்**
**அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன்று இருந்தேனே.**

**கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்**
**கொண்டனை அல்லால் அறியாக் குலமகள்போல்,**
**விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மா, நீ**
**கொண்டுஆளாய் ஆகிலும், உன் குரைகழலே கூறுவனே**

**— குலசேகர ஆழ்வார்**

# இளைஞர்களுக்கு ஓர் இனிய அருளுரை

(அருட்டிரு. ஞானியார் அடிகள்)

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விரித்துச், சுவைமிக்கு ஓங்க,
நகையோடு பொருள்செறிந்த நன்மேற்கோள்,
நல்லுவமை நயமும் காட்டித்,
தகையாய வழக்கோடு சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்,
திகையாவும் தமிழ்பரப்பும் திருப்புலிசை
ஞானியர்தான் சிந்தை செய்வாம்!

—ந. ரா. முருகவேள்

[ஆசிரியர் முன்னுரை :

திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோவலூர் ஆதீனத்தின் ஐந்தாம் அருட்பெருங்குரவர் திரு வார் திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவா சாரிய சுவாமிகள் என்னும் அருட்டிருஞானி யார் அடிகளார் (1873-1942), நம் தமிழ்நாடு செய்த தவப் பயனாகத் தோன்றியருளியவர் ஆவர். அவர்கள் கல்விக் கடலாய்க், குணமலை யாய்ச், செந்தமிழ்த் திங்களாய்ச், சிவநெறிச் செஞ்ஞாயிறாய், இன்சொல் மணக்கும் தென்ற லாய், அறிவுநலம் கொழிக்கும் பேரருவியாய், நகைமுகிழ்த்து அருட்டேன் சொரியும் நறுமல ராய்ச், சார்ந்தார்க்கெல்லாம் நலம்புரியும் தண் பொழிலாய், வாழ்ந்து விளங்கிய பெருமாட் சிமை உடையவர்கள்!

தமிழ்நாட்டு மக்களின் நலங்கள் பெருகி வளரவேண்டுமாயின், நம் தமிழ் மக்களிடையே அறிவொளியைப் பரப்பி, அறியாமை இருளைப் போக்கியருளுதல் வேண்டும் எனத் தெளிந்த சுவாமிகள் அவர்கள், தமது ஒப்புயர்வற்ற அரும்பெரும் ஞானத் தமிழ்ச் சொற்பொழிவு களால், ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு மேல், ''நாளும் தமிழ் பரப்பும்'' நற்பெருந் தொண்டு புரிந்தருளிய ஞானச்செல்வ வள்ளற் பெருந் தகையார் ஆவர். சுவாமிகளின் சொற்பொழிவு களிற் பொதுளி நிறைந்து விளங்கும் சிறந்த கருத்துக்களின் செறிவும், ஆழ்ந்த அருட்பேர் உணர்வும், பரந்து விரிந்த பெரும் புலமை நல னும், சீரிய நோக்கங்களில் நேரிய ஈடுபாடும், பிறவும் எவர் உள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொண்டுவிடும்.

ஞானியார் சுவாமிகளின் சொற்பொழிவு களிற் பேசுபவரும் கேட்பவரும், தம்மையும் உலகையும் மறந்து, சொற்பொழிவின்கண் ஈடு பட்டு ஒன்றித் திளைத்து இன்புறுவர். கற்றா ரும் கல்லாரும், இளைஞரும் முதிஞரும், ஆண் களும் பெண்களும், ஆகிய பலதிற நிலையினரும் பெருந் திரளாக ஒருங்கு கூடியிருந்து, சுவாமி களின் சொற்பொழிவைச் 'சித்திரப் பாவையின் அத்தக அடங்கியிருந்து, செவி வாயாகவும் நெஞ்சு களனாகவும், அமையக் கேட்டுமகிழ்ந்து பயன்பெறுவர். ஒலிபெருக்கிகள் முதலியன வழக்கத்திற்கு வாராத அந்த நாளில், ஆயிரக் கணக்கான மக்கள் ஒருங்கு திரண்டு கூடியிருந்து ஊசி விழும் ஒலிகேட்கும் வகையில், மிகவும் அமைதியாக அமர்ந்து, ஆர்வத்துடனும், பய பக்தியுடனும், அடிகளின் சொற்பொழிவைச் செவியாற் பருகி, அறிவு வேட்கை தணியப் பெறுவர்.

ஞானியார் அடிகளின் சொற்பொழிவுகள், கடல் மடை திறந்தாற்போலவும், திருக்குற்றா லத்து அருவிப் பெருக்கம் போலவும், தங்கு தடையின்றி, வெண்கல ஒலியுடன், 'கணீர்' எனும் குரலில், செஞ்சொற்களால் இயன்று, இன்னோசை அமைந்து, பயனில் சொற்கள் சிறி தும் விரவாமல், பொருள்நலங்கள் பொதுளி, புலமைநலம் நிறைந்து பொருந்தி, தொடக்கம் முதல் முடிவு வரையில் சுவை நிரம்பிக் களி துளும்ப விளங்கும். ''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க், கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'' என்ற திருக்குறளுக்குச் சிறந்த இலக் கியமாக விளங்கியவை, ஞானியார்சுவாமிகளின் சொற்பொழிவுகள் ஆகும்.

சுவாமிகள் தமது சொற்பொழிவுகளின் இடையிடையே உலகியற் பழமொழிகளின் செம்பொருளை விளக்குவார்கள்; சாத்திரங் களின் நுணுக்கங்களையும் மரபுகளையும் தெளி விப்பார்கள்; இன்மை பொருந்திய இயற்கை யான இருபொருட் குறிப்பு மொழிகளை இடம் பொருள் என்பவற்றிற்கு ஏற்பப் பேசி மகிழ்விப் பார்கள்! தூய்மை மிக்கு உயரிய பெருந் தகைமை சான்ற நகைச்சுவையினை விளைவிப்

பார்கள்; அரிய நுண்ணிய கருத்துக்களை எளிய இனிய முறையில் தெளிவித்தல் குறித்துச் சிறிய சிறிய கற்பனைக் கதைகளையும் கூறுவார்கள்! வேதாகம உபநிடதங்களிலிருந்தும், சங்க இலக்கியங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், தனிப்பாடல்கள், மற்றும் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் ஆகியவற்றில் இருந்தும், சீரிய மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக் காட்டுவார்கள். புராண கதைகளின் நுண் பொருள்களைப் புலங்கொளத் தெருட்டியருள்வார்கள்.

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்பதற்கேற்பச், சுவாமிகளின் பேச்சில் ஈடும் எடுப்பும் அற்ற பேராற்றலும், பேரொளியும் பிறங்கித் திகழும். கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும் மட்டுமேயன்றி, அடிகளார் உலகியல் உணர்விலும் தலைசிறந்து மேம்பட்டு விளங்கினர். காலமும் இடனும் வாலிதின் நோக்கி, எவர் மனமும் புண்படாமல், எச்சமயத்தினையும் இகழாமல், எடுத்துக்கொண்ட பொருளுக்குப் புறம்போகாமல், அவையறிந்து பேசும் உலகியல் உணர்வில், ஒப்புயர்வற்ற பெருந்தகைமை மிக்கவர் நமது அடிகளார்!

எத்தனையோ பல்லாயிரக்கணக்கான மக்கள், தம்மைக் கண்டும் கேட்டும் தொழுதும், நல்லுணர்வும் நல்லொழுக்கமும் பெற்று, வாழ்க்கை நலங்கள் எய்தித், திருந்தி உய்ந்து உயர்வதற்கு, ஒரு பெரும் வழிகாட்டியாக-ஞானாசிரியராக-விளங்கி வந்த அருட்டிரு ஞானியார் அடிகளார், தம்முடைய வாழ்நாளில், எத்தனையோ பல ஆயிரக்கணக்கான, அரிய பெரிய ஞானச் சொற்பொழிவுகளை ஆற்றியருளியிருக்கின்றார்கள். ஆனால், அந்தோ! அவைகள் அனைத்தும் காற்றோடு கலந்து கரந்து, அறவே மறைந்து போயின. நாடாப் பதிவுமுறை முதலியன, அந்நாளில் நினைத்தற்கும் அரிதாக இருந்தன. அச்சொற்பொழிவுகள் அனைத்தும் பதிவு செய்யப் பெற்றிருந்தால், அவைகள் நம் தமிழகத்திற்கு, ஒப்புயர்வற்ற கலை இலக்கியச் செல்வங்களாக விளங்கியிருக்கும். என் செய்வது!

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில், ''தமிழக இளைஞர் மன்றம்'' என்ற ஒன்று இருந்து வந்தது. அம் மன்றத்தின் இளைஞர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அருட்டிரு ஞானியார் அடிகள், திருச்சி மலைக் கோட்டைக் கோயிலின் நூற்றுக்கால் மண்டபத்தில், 6.1.1942 அன்று, இற்றைக்குச் சற்றேறத்தாழ 42 ஆண்டுகளுக்கு முன்னர், ஆற்றிய சொற்பொழிவு ஒன்றுமட்டும், எவ்வாறோ இறைவனின் திருவருளால், அன்பர்கள் சிலரால் குறிப்பெடுக்கப்பெற்று, ஒரு கட்டுரையாகச் சிறிய நூல் வடிவில் வெளிவந்துள்ளது. அச் சிறுநூல், தற்செயலாகக் கிடைக்கப்பெற்றது. அஃது ஒரு பெரும் புதையலாக மதித்து மகிழ்ந்து, பெரிதும் போற்றத் தக்கது!

ஆதலின், அக்கட்டுரையினைச் செம்மைப் படுத்தியும், பத்திகளாகப் பிரித்தும், விடுபட்ட மேற்கோட் பாடல்களைச் சேர்த்தும், முன்னுரை ஒன்று வரைந்தும், நமது 'திருக்கோயில்' இதழின்கண் வெளியிடப்பெறுகின்றது. அருட்டிரு ஞானியார் அடிகளின் அருமை பெருமைகளை அறிந்துணர்ந்து கொள்ளுதற்கு, 'இதன் அளவு உண்டு கோள்மதி வல்லோர்க்கே' என்றபடி, இவ் ஒரு சொற்பொழிவே, மிகச் சிறந்த சான்றாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஓர் இதழிலேயே முடிவு பெறுமாறு வெளியிட்டால் தான், அன்பர்கள் இதனைப்படித்து மகிழ்ந்து பயன்பெறுதல் கூடும் என்று கருதி, இவ்விதழிலேயே முழுவதாக, இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது. அன்பர்கள் இதனைப் படித்துப் பயன்பெறுவார்களாக!

—ஆசிரியர்.]

**அடிகளார் முன்னுரை :**

இன்று இந்தத் 'தமிழக இளைஞர் மன்றம்' என்ற ஒன்றிலே பேசுவதற்கு நேர்ந்தது, எமக்கு மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கிறது. எல்லோரும் ஒரு காலத்தில் இளைஞர்களாகவே இருந்து முதிர்ந்தவர்கள்தான். ஆனால், இப்போதும் சில முதியவர்கள், அறிவு, ஆற்றல், ஊக்கம், உணர்ச்சி, உழைப்பு முதலியவற்றால் இளைஞர்களைப்போல் இருக்கின்றனர். இளைஞர்களிலும் சிலர் மேற்கூறிய அறிவு, ஆற்றல், ஊக்கம், உழைப்பு முதலியவற்றில் முதியவர்களாக இருக்கின்றனர். அன்பர் திரு.மு.நடேச முதலியார் கூறியபடி, இளைஞனாகிய முருகன் என் உள்ளத்தில் உள்ளான். அவன் பெயர் சேய். 'சேய்' என்றால், குழந்தை என்று பொருள்படும்.

முருகன்தான், என்றும் இளைஞன். அவனுடைய தாயும் தகப்பனும் என்றும் இறவாதவர்கள். இவ்வூரை அடுத்திருக்கும் திருவானைக்காப் புராணத்தில், கச்சியப்பமுனிவர் மிகஅழகாகக் கூறியுள்ளார்கள்.

இருமுது குரவர் நாப்பண்
இளமையோ டிருந்து, சேய்என்று
ஒருவரும் பெயரும், வேறே
ஒருவரும் சுவாமி ஆகாக்
குருபரன் இறைஞ்ச, உண்மை
கொடுத்தொரு சுவாமி என்னும்
பொருவறு பெயரும் பூண்ட,
புனிதனைப் புகழ்ந்து வாழ்வாம்!

இளைஞனை அடியேனுடைய நெஞ்சில் வைத்திருப்பதால், கற்ற இளைர்கள் எனக்கு மிக்க நண்பர்கள்! இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் ஏற்பப் பேசுமாறு, அன்பர் திரு.மு.நடேச முதலியார், எம்மிடம் வேண்டிக் கொண்டார். இளைஞனாகிய முருகன் காட்டும் வழியிலே பேசி முடிக்கின்றேன்.

**(1) பிறப்பைப் பற்றிய அறிவு :**

உலகத்தில் மக்கட் பிறப்பை எய்திய இளைஞர் முதலிய எல்லோரும் முதல் முதல்

மனத்தில் நினைக்க வேண்டியது, நம்முடைய பிறப்பைப் பற்றியேயாகும். நமக்குக் கிடைத்த பொருள்களைப் பற்றி, நாம் அறிய வேண்டியது அவசியம். நமது அப்பர் சுவாமிகள் ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்று கூறியிருக்கிறார்கள். 'நந்தமக்கு' என்பதில் தம்மையும், தம்போன்றிருக்கின்ற தமரையும் கூறியிருக்கின்றார். இங்குக் கிடைத்தது என்பதைக் காட்டிலும், 'வாய்த்தது' என்பது மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஈது என்றமையால் நமக்கு அருகில் இருக்கிறது. ஓர் பிறவி என்பதனால் இது ஒரு அருமையாகக் கிடைத்த பிறவி-பொருத்தமாகக் கிடைத்த பிறவி. இதைக்குறித்தே ''நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கக் கிடைத்த இந்தப் பிறவிக்கு, ஒரு வணக்கம் செய்கின்றேன்'' என்கின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

நேசம் நிறைந்த உள்ளத்தால்,
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை,
எல்லா உலகும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்,
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்!

சிலர் இந்த உடலை அலட்சியம் செய்கின்றனர். ஆயினும் நீங்கள் அப்படி நினைக்க மாட்டீர்கள் என்று எண்ணுகின்றேன். இந்தப் பிறவியின் காரணம், அதனால் ஏற்படும் பயன், அதனுடைய நலங்கள் முதலியவைகளை நன்றாகச் சிந்திக்கவேண்டும். மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அறியவேண்டும். சரீரத்தின் அருமை இன்னொரு வகையில் ஞாபகப்படுத்தப் பட்டிருக்கிறது. மனிதப் பிறவியினால் ஆகும் காரியம் தேவப் பிறவியாலும் ஆகிறதில்லை. அப்படி ஆகவேண்டியிருந்தால், தேவர்களும் கூட, இந்தப் பூவுலகிற்கு வந்துதான் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

மதுரையை நினைக்கும்போது இந்திரனுடைய ஞாபகமும், சீகாழியை நினைக்கும்போது பிரமாவின் ஞாபகமும் வருகின்றன. உண்மையில் இவர்களுக்கு முறையே இந்திரலோகமும், சத்தியலோகமும் இடமாகும். அவர்களுடைய லோகத்தில் ஏதும் செய்யமுடிந்தால், இங்கு வர மாட்டார்கள். ஆனால் இந்திரன் மதுரையில் பழிதீர்த்துக் கொண்டான். பிரமன் சீகாழியில் அர்ச்சித்தான். ஆதலின் தேவர் உலகத்தைக் காட்டிலும், இந்தப் பூவுலகம் சிறந்ததென மதித்து உலகையும், பிறவியையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதைப் பார்த்த பெரியார் ஒருவர் 'மனிதப் பிறவியின் பெருமையை அறிந்து வேண்டுவன செய்!' என்று வருந்திக் கூறுகிறார். மனிதப் பிறப்பின் அருமையை அறியவில்லையே, அறிய வேண்டுவன அறியவில்லையே என்கின்றார்.

**(2) நான்கு நற்பண்புகள் :**

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றவர்கள், நான்கு முக்கியமான நற்பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அவையாவன: (1) கடவுள் பக்தி, (2) பாச வைராக்கியம், (3) ஈஸ்வரஞானம். இம்மூன்றையும் விடச்சிறந்தது இன்னொன்று உண்டு. (4) அதுவே பிற உயிர்களின்பாற் கொள்ளும் அருள் அல்லது இரக்கம் ஆகிய சீவகாருண்யம். நெருப்பினை அணுகும் வெண்ணெய், 'உருகுகிறோம்' என்ற நினைவில்லாமலே உருகுகின்றது. அதுபோலப் பிறர் துன்பத்தைக் கண்டு மனம் உருகவேண்டும். சீவகாருண்யம் இல்லாமல் தியானம், பக்தி, அறிவு முதலியவைகளினால் பயனில்லை. இம் மனிதர்கள் வேண்டுவன தெரியாமல் இருக்கின்றார்களே; சரீரம் இருந்தும் பயனில்லையே; வாயிருந்தும் பயனில்லையே; ஒன்றையும் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்களே என்பதைக் குறிக்க,

''ஊன் எடுத்துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ''

என்று, அருணந்தி சிவாசாரியார் தாம் இயற்றிய சிவஞான சித்தியாரில் வருந்திச் சொல்கிறார். உலகத்தினுடைய அருமையை அறிந்தோம். பிறகு சரீரத்தினுடைய அருமையைத் தெரிந்தோம். பின்னர்த் தாயின் அருமையையுணரவேண்டும்.

**(3) தாயிடம் அன்பு :**

நமக்கு வேண்டுவன என்பதில், தாயிடம் அன்பும் ஒன்றாகும். தாயிடம் யாருக்கு அன்பில்லையோ, அவர்கள் இனி அதிகமான தாயைப் பெறுவார்கள்- பல பிறவிகள் எடுப்பார்கள். தாயிடம் அன்பிருக்குமானால் பிறப்பு குறையும். தாயிடம் அன்பில்லாதவர்கள், ஏனைய கடவுள், அடியார், குரு, சீவர் முதலியவர்களிடம் அன்பு காட்டுவதில் பயனில்லை. ஒரு தாய் தன் மகனைப் பார்த்து 'உன்னுடைய அரசை நின் தம்பிக்குக் கொடுத்துவிடு, நீ பதினான்கு வருடம் காட்டிற்குப் போ என்று, உன் தகப்பனார் சொன்னார்' என்று கூறினாள்.

''ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீபோய்த்
தாழ்இருஞ் சடைகள், தாங்கித்,
தாங்கரும் தவம்மேற் கொண்டு,
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்இரண்டு ஆண்டில் வா! என்று,
இயம்பினன் அரசன் என்றாள்''

இதைக் கேட்டதும் அம் மகனுக்கு என்ன தோன்றியிருக்கும்? 'உன் தம்பிக்கு அரசு' என்பதிலும், 'பதினான்கு வருடம் காட்டிற்குச் செல்' என்பதிலும், அவனுடைய ஞாபகம் செல்லவில்லை. ஆனால் 'உன் தகப்பனார் கூறினார்' என்றதில் ஞாபகம் சென்றது.

''மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ'' என்றான். இதில் ஒரு விசேடம். **மன்னவன்** என்று தந்தையை ஒருமைப்படுத்தியும், தாயை நும் என்று பன்மைப் படுத்தியும் கூறுகிறான். இதனால் தகப்பனைக் காட்டிலும் தாயிடத்தில் அதிக அன்புவேண்டும் என்று

தெரிகிறது. (இதனால் தந்தையிடம் அன்பு கூடாது என்று சொல்லவில்லை). 'தந்தையுடைய கட்டளையாக இல்லாமல், உங்களுடைய கட்டளையாகவே இருந்தாலும், நான் மறுக்கமாட்டேனே' என்பது ஒரு பொருள். 'நும்' என்றதில் தாய்மார்கள் மூவர் என்பதும், அம்மூவரில் 'யார் சொன்னாலும் கேட்பேனே, நீங்கள் தந்தை சொன்னார் என்று சொல்லுகிறீர்களே, தாய் சொல் கேட்காதவனா யான்?' என்பது, மற்றொரு பொருள்.

இதை இளைஞர்கள் தம்முடைய மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். ''தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை'' என்று, ஒரு தாய் சொல்லியதை, இளமையில்கேட்டிருக்கின்றோம். எங்கும் இராமாயணம் படிக்கப்படுகிறது. இந்தக்கைகேயியினுடைய வார்த்தையைக் கேட்காமல் போயிருந்தால், ஒரு இராமாயணம் ஏற்பட்டிருக்குமா? இராமருக்கு இத்தனை பெருமை கிடைத்து இருக்குமா?

பெரிய குறிப்புகள் வேண்டாம், உலக வழக்கில் சொல்லுவோமானால், 'தாய்-தந்தை குரு என்பவர்கள் எல்லோரும் தெய்வங்கள்'. தெய்வம் யார்? தாய் தெய்வம் ,தந்தை தெய்வம், குரு தெய்வம். இம் மூவர்கள் பிரத்யட்ச தெய்வங்கள், கடவுள் அப்பிரத்யட்ச தெய்வம். ஞானசம்பந்தராயிருந்தால் தெய்வத்தைப் பார்க்கலாம். நம்மால் முடியாது. நாம் பார்த்தால் உடலைத்தான் பார்க்கலாம். அறிவாக இருக்கின்ற, அழியாதிருக்கின்ற ஒன்றை இந்தக் கண் பார்க்காது. அழியாத கடவுளை ஞானக் கண்ணால் பார்க்கலாம். நமது வீட்டில் பார்க்கக்கூடிய முதல் தெய்வம், தாய்தான்.

முருகனை, 'வள்ளி தேவசேனா சமேத கந்தனை நான் வணங்குகின்றேன்' என்று, அஷ்டோத்தரசதகத்தில் சொல்கிறார்கள். 'அம்மையோடு கூடிய அப்பன்' என்றே சொல்லி அருச்சனை ஆரம்பிப்பது வழக்கம். ஆகையால் தாய் தெய்வம், தந்தை தெய்வம், குரு தெய்வம், அதன் பிறகு கடவுள் தெய்வம். முதலில் தாயை அடைந்தால் தந்தையைக் காட்டுவாள், தந்தை குருவைக் காட்டுவான், குரு தெய்வத்தைக் காட்டுவார். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''. இதனால் பின்னறிய வேண்டிய தெய்வமும் உள்ளது என்று தெரிகிறது.

முன்னே அறியத்தகுந்த தெய்வங்கள் இரண்டு. பின்னே அறியத்தகுந்த தெய்வங்கள் இரண்டு. 'தாயா கடவுள்'? இருக்கமுடியாது. ஏனெனில் அவளும் நம்மைப்போல் உள்ளவள் தானே, அவளும் அழிபவள் தானே' என்று, சொல்லக்கூடிய அவ்வளவு 'அறிஞர்கள்' சிலர் இருக்கிறார்கள். தாய் கடவுள்தான். நெருப்பில் போடப்படுகின்ற, மண் தின்கின்ற,பட்சிகளுக்கு இரையாகின்ற, உடலா முக்கியம்? இல்லை. உயிர்தான் முக்கியம் . நமக்குச் சிரமமில்லாமல் உறுதிச் சொல் கூறுகின்ற அப்பர், நம்முடைய கடவுள் வருகிற நிலையைக் கூறுகிறார்.

''ஈன்றாளு மாய்,எனக்கு எந்தையுமாய்,
உடன் தோன்றினராய்,
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான்,
மனத்து உள்ளிருக்க
ஏன்றான், இமையவர்க்கு அன்பன்,
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்;
தன்அடி யோங்களுக்கே !

என்று, திருப்பாதிரிப்புலியூர்ப் பதிகத்தில் இந்த முதற்பாட்டில் முதலடியில் தாயை வைத்துப், பின் தந்தையை வைத்துப்,பின் பிறரை வைத்து அழகாகப் பாடியுள்ளார். தாயிடத்தில் அன்பு வேண்டும். இதுவே எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

**(4) தந்தையிடம் அன்பு :**

ஒரு தந்தை தன் பிள்ளையிடத்து 'நல்ல பிள்ளையாகிய உன்னை அடைந்தேன்' என்று சொல்லுகிறார். இந்தக் காலத்திலோ, 'என் பாபமே கையும், காலுமாக உருவெடுத்து வந்தாயோ' என்று, தந்தை குழந்தையைப் பார்த்துக்கூற விரும்புவான். ஆனால் தனது எலும்பு தான் பாக்கியாக மிஞ்சுமோ என்றஞ்சிச் சொல்வதில்லை.

தமிழ் மொழியில் பிள்ளை என்றால், 'பொருள்' என்று பொருள். இதைப் பரஞ்சோதி முனிவர் மீனாட்சி அவதாரப் படலத்தில் ''நன்பொருள் விரும்பினை; அதற்கிசைய'' என்று கூறியுள்ளார். ''தருமத்தையொத்த உன்னையடைந்து கூடவா, நான் வருந்தவேண்டும்? இந்த உடம்பிற்காக எத்தனை வருடம் உழைப்பது, உன்னிடம் அரசைக் கொடுத்துவிட்டுக் காட்டிற்குச் சென்றோ, பெரியவர்களை அடுத்தோ, நல்லநூல்கள் பயின்று,அதன்படி நடக்க எண்ணுகின்றேன்'' என்கிறார் தசரதர். இவ்வாறு இராமனை முன்னிலைப்படுத்தி,

''உரிமை மைந்தரைப் பெறுகின்றது,
உறுதுயர் நீக்கி,
இருமையும் பெறற்கு என்பது,
பெரியவர் இயற்கை;
தருமம் அன்னநிற் றந்த யான்
தளர்வது தகவோ!
கருமம் என்வயிற் செய்யில்,என்
கட்டுரை கேட்டி!''

என்று கூறுகிறார். ''பெரியவர் இயற்கை, உரிமை மைந்தரைப் பெற்று உறுதுயர் நீங்கி இருமையும் பெறுவதாகும்'' என்று பாடுகின்றார் கம்பர். 'இருமை' - இம்மை இங்கே, மறுமை அங்கே. அங்கே இருவகை. (1) போனால் வருமிடம், (2) போனால் வராத இடம். போனால் வருகிறது சுவர்க்கம், போனால் வராதது மோட்சம். மைந்தரைப் பெறுவது, உற்ற துன்பத்தை நீக்கி இரு இடங்களையும் அடைவது என்று, பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இன்னொரு தந்தை தன் மகனைப் பார்த்து 'நீ சமுத்திரத்தில் மூழ்கி இறந்துவிடு' என்று சொல்ல விரும்புகிறார். ஆனால் அதைச் சொல்லாமல் 'உனக்கென்றுள்ள சொத்தை

உனக்குக் கொடுக்கமாட்டேன்: என் தந்தையாகிய உன்பாட்டன் சொத்தையும் கொடுக்க மாட்டேன்' என்று சொல்லுகிறார். நல்ல பிள்ளையாக இருந்தால்,'ஓகோ! நமக்குச் செல்வத்தைக் கொடுத்தால் அழித்து விடுவோம் என்று அஞ்சிக் கொடுக்க மறுத்தார் போலும்' என உணர்ந்து கொள்வான். பின்னர் தந்தை அவனைச் சமுத்திரத்தில் விழுந்து விடும்படி சொல்லினால், நல்ல குடும்பம் என்னால், அவமதிப்புக்குள்ளாகும் என்றுதான் தந்தை சொல்லுகின்றார், என அறிந்து அவர் விருப்பத்தின்படி கடலில் விழுகிறான். ''அத்தியிடை மூழ்கெனினும் அன்பின் அதுசெய்கை புத்திரர் தம் கடனாம்.''

உலகில் அப்படிச் செய்வார்களா? அப்படி செய்த ஒருவரும் உண்டு. அவர்தான் தன் தம்பிக்கு நாட்டைக் கொடுக்கப் பரம சந்தோஷம் அடைந்தவரும், பதினான்கு வருடம் காட்டிற்குச் சென்றவருமான இராமபிரான். ஒருவன் மாட்டுவண்டியின் நுகத்தடியைக் காளையின் கழுத்தில் தூக்கிவைத்தான். மாடு, 'இத்தனை நாள் நம்மைக் காத்தவனாயிற்றே' என்று, அந்த பாரத்தைத் தூக்க விரும்பியது. ஆனால் அருளுடைய ஒருவன், அந்நுகத்தடியை அகற்றிவிடுகின்றான். காளை மகிழ்கிறது. இதைக் கம்பர், அரசபதவி நீக்கப் பெற்ற இராமனின் மகிழ்ச்சிக்கு, ஒப்பிடுகிறார்.

''தெருளுடை மனத்து மன்னன்
  ஏவலில் திறம்ப அஞ்சி,
இருளுடை உலகம் காக்கும்
  இன்னலுக்கு இயைந்து நின்றுன்;
உருளுடைச் சகடம் பூண்ட
  உடையவன் உயர்த்த, கார்ஏறு
அருளுடை ஒருவன் நீக்க,
  அப்பிணி அவிழ்ந்தது ஒத்தான்!''

இராமர் பரதனைப் பற்றிக் கூறியபொழுது, ''என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ''? என்கின்றார். இராமர் அரசை இழந்ததன்றிக், காட்டுக்குப் பதினான்கு ஆண்டு சென்று, கடலில் விழுந்தவனுக்கு ஒப்பாகிறார். துன்பங்களைச் சகித்ததனால், அவருக்குப் பல பெயர்கள் இடப்படுகின்றன. கடமையில் வெற்றி பெற்றதால் ஜெயராமர் ஆகிறார். தசரத குமாரர், சக்கரவர்த்தியின் புதல்வர் என்ற காரணத்திற்காகவா, அவருக்கு இவ்வளவு பெருமை? இல்லை. தாயிடமும் தந்தையிடமும் அன்பாக நடந்து கொண்டதாலேயே, அவருக்கு இத்தனை பெயர்கள் ,இத்தனை பெருமைகள். ஆதலால் தாய் தந்தையரிடம் விசுவாசம் வேண்டும். பெற்றோர் சுகம் கருதிப் பின்னரே தன்சுகம் கருதுதல் வேண்டும்.

முதலியார், செட்டியார் என்பதுபோல், பிள்ளை என்பார்க்கு, ஆர் விகுதி (பட்டம்) கொடுக்கின்றார்களா? இல்லை. 'பிள்ளைமார்' என்கிறோம். ஆனால் பிள்ளையார் என்று சொல்லப்படுபவர் யார்? அவர் தும்பிக்கையோடு கூடிய விநாயகர். ஏன் அவருக்கு மட்டிலும் ஆர் விகுதி கொடுக்க வேண்டும்? அவர் தன் துதிக்கையில் ஒரு சிறு குடத்தை ஏந்தியுள்ளார். காலையில் அந்தக் குடத்தைக் கொண்டு, தண்ணீர் எடுத்துத் தாய் தந்தையரை நீராட்டிப் பூசிக்கிறார். பிள்ளை பிறந்தால் அவரைப்போலத் தாய் தந்தையருக்கும் மற்றவருக்கும் உதவி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நல்ல பிள்ளையினால் தாய் தந்தையருக்கு மறுமையும், மகிமையும் உண்டு. விநாயகரின் இடதுகையில் மோதகம் ஒன்று இருக்கிறது. இதனால் 'நான் உண்டு உயிரோடிருந்தால், தாய் தந்தையரைப் பூசிப்பது முதலியன செய்வேன்' என்ற குறிப்புப் பெறப்படுகிறது. மற்ற இருகைகளும் உலக நலத்திற்காக இருக்கின்றன. இதையே திருத்தணிகைப் புராணத்தில்,

பண்ணியம் ஏந்தும் கரம்தனக்கு ஆக்கிப்,
  பால்நிலா மருப்புஅமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
  வியன்கரம் தந்தைதாய்க்கு ஆக்கிக்,
கண்ணில் ஆணவவெம் கரிபிணித்து அடக்கக்
  கரிசினேற்கு இருமையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்
  சகாயனை, அகம்தழீஇக் களிப்பாம்!

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் தாய் தந்தையரைப் பூசிப்பது, நமக்கு வேண்டுவன வற்றுள் முக்கியமானதாக வந்தமைகிறது. இதைச் சாந்தலிங்க சுவாமிகள், வைராக்கிய தீபத்தில் ''தன்பால் இனிது உதித்து, வினை ஒழித்து, அசையாது இருத்தி வீட்டமுதுஅருத்தலால்'' என்று கூறி வற்புறுத்துகிறார். இதை வாய்ச்சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் காட்டவேண்டும்! இக்காலத்தில் நாய், கிளி முதலியவற்றிற்கு உணவு ஊட்டும்போது, ஏன் தாய் தந்தையருக்கு ஊட்டக்கூடாது! அவர்களிடம் வேலைவாங்காமல் உணவு உண்பிக்க வேண்டும்.

**(5) உடன் பிறந்தாரிடத்து அன்பு:**

தன் பிள்ளைக்குப் பாலூட்டிப் பல வருடங்களுக்கு மேலாகிய, ஒரு வயது முதிர்ந்த தாய், அப்பிள்ளையிடம் ''அண்ணனுடன் காட்டிற்குப்போ, அண்ணன் என்று நினைத்துச் செல்லாதே. தெய்வமாக நினைத்து அவன் அடியவனாக எண்ணிச் சேவை செய்'' என்றதனைக் கம்பர் ''மகனே! இவன் பின்செல்; தம்பி என்னும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி'' என்று, சுமித்திரையின் வாக்காகக் கூறியுள்ளார். அந்தத் தாய் பின்னும் தன் மகனைப் பார்த்து 'அண்ணன் நகருக்குத் திரும்பினால் நீயும் உடன்வா, இல்லாவிட்டால் நீ அவனுக்கு முன் உன் உயிரை முடித்துக்கொள்' என்று கூறுவதை ''மன்னும் நகர்க்கே வந்திடின்வா; அஃது இன்றேல் முன்னம் முடி'' என்று கம்பர் கூறுகிறார். தன் பிள்ளையையே சகோதரனுக்காக உயிர்விடுமாறு ஒரு தாய் கூறுகிறாள். அந்தத் தாய் அப்படிச் சொல்வதிலும், அண்ணனாகிய இராமனைப் பற்றி அமங்கலமாக ஒன்றும் கூறாது, தன் பிள்ளையை இறந்துபோகும் படிக் கூறுகிறாள்.

உலக வழக்கில் ஒரு துஷ்டப் பையனை, தாய் அடித்தால் தந்தை அணைக்கின்றான். தந்தை அடித்தால் தாய் அணைக்கின்றாள். பெற்றோருக்கு அடங்காத பிள்ளையை உபாத்தியாயரிடம் ஒப்புவிக்கின்றனர். அவரிடம் 'கண்ணையும், மூக்கையும் வைத்துவிட்டு, மற்றதை உரித்துவிடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். அவருக்கும் அடங்காவிட்டால், ''ஊருக்கு அடங்காத பிள்ளையைக் காலற்கு'' அதாவது எமனுக்குக் கொடுத்துச் செல்லட்டும் என்று, அமங்கலமாகச் சொல்லிவிடுகிறார்கள். இதுபோல் சுமித்திரை கூறாது, 'அவன் வந்தால் வா, அவனுக்கு ஏதேனும் நேர்ந்தால், அவனுக்கு முன் நீ முடிந்துவிடு' என்று கூறுகிறாள். இது தன் மகனிடம் அவளுக்குள்ள வெறுப்பையா காட்டுகிறது? இல்லை. அந்த அமங்கலமான வார்த்தையைக் கூறும்பொழுது, பல வருடங்களுக்குப் பிறகும், அவள் தனங்களில் அக்குழந்தையின் கைபடாமலும், வாய் வைக்காமலும் பால் சொரிகிறது. பிள்ளையிடம் அவளுக்கிருந்த பேரன்பைப் ''பால்முலை சோர நின்றாள்'' என்ற தொடர் தெரிவிக்கின்றது. இது வடநாட்டுக் கதை!

தமிழ் நாட்டிலும், சகோதர வாஞ்சையைக் குறிக்கும் ஆதாரம் உள்ளது. பழங்காலத்தில் உடன்கட்டை ஏறல் என்ற வழக்கம்இருந்தது. அப்படி உடன்கட்டை ஏற வேண்டிய நிலை. தாய் தந்தையற்ற ஒரு தமிழ்ப்பெண்ணிற்கு ஏற்பட்டது. அவள் 'எனக்கு நாயகனாக நியமிக்கப்பட்டிருந்த ஒருவர், நான் காணும் முன்னே, போரில் மடிந்து வீரசுவர்க்கம் புகுந்தார். ஆதலால் நானும், தடாகத்தில், வெயில் வெப்பத்தில், எவ்வளவு ஆனந்தமாக மூழ்குவேனோ, அவ்வளவு ஆனந்தமாகத் தீயில் மூழ்குவேன். அங்குள்ள தேவப் பெண்கள், வீர சுவர்க்கம் புகுந்த அவரை, எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும் என்று சண்டையிடுவர். ஆனால் அங்குச் சென்று அவர்கள் அவரை அடையாவண்ணம் அவரை நானே அடைவேன்' என்று தீக்குளிக்க முற்பட்டாள்.

அப்பொழுது அப்பெண்ணின் தம்பியார் ஓடிவந்து தடுத்து 'தாயும் தந்தையும் இழந்த நான், தமக்கையாகிய உம்மையே அவர்களாக எண்ணியிருந்தேன். நீங்கள் என்னைவிட்டுச் செல்வதாயிருந்தால் நான் முதலில் நெருப்பில் விழுவேன்' என்று சொன்னார். 'இவனுக்காக நான் ஏன் உயிர் வாழவேண்டும்?' என்று எண்ணாத திலவதியாரை ''தம்பியார் உளர்ஆக வேண்டுமென வைத்த தயா, உம்பர் உலகு அணைய உறும் நிலைவிலக்க...'' என்று சேக்கிழார் புகழ்கிறார். இங்குத் தம்பி என்று சொல்லாமல் 'தம்பியார்' என்று விகுதி கொடுத்துப் பன்மையில் கூறுவதால், ஒரு பெண், தன் தம்பிக்கு மரியாதை கொடுக்கிறாள். ஆண்பிள்ளை யல்ல; ஒரு பெண், பதினெட்டு வயதுடைய ஒரு பெண், தமிழறிந்த வேளாளப் பெண் ஒருத்தி, தான் நினைத்த உயர்ந்த நன்மையைக் கைவிட்டுத் தன் தம்பியிடம் எவ்வளவு தயை வைத்தாள்! ஆதலால் சகோதர அன்பு வேண்டும்.

*(6)* **பெரியவர்களிடம் அன்பு :**

பெரியவர்கள்-வயதால் பெரியவர்கள், அறிவால் பெரியவர்கள். அறிவால் மேம்பட்டவர்களுக்கு அன்பு செய்ய வேண்டியதுதான். பெரியவர்களுக்கு ஏன் அன்பு செய்யவேண்டும்? என்று கேட்கலாம். பள்ளியில் படித்த சிலர் அனுபவத்தால் பெரியவர்களை அலட்சியம் செய்கின்றனர். 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பதை உணருகிறதில்லை. அறிவைக் காட்டிலும் அனுபவம் உயர்ந்தது. பெரியவர்களிடம் அன்பு அவசியம் வேண்டும். இதை நம்முடைய புலவராகிய திருவள்ளுவர் கூறியுள்ளார் 'அரியவற்றுள் எல்லாம் அரிது'. ஒரே ஒன்று அருமையானது, அதுதான் ''பெரியாரைப் பேணித் தமராக் கொளல்''. அதிகப் படிப்புடைய திருவள்ளுவனார் இதனை நம் மனத்திற் பதிய உபதேசித்துள்ளார். 'பெரியாரைப் பேணி' என்பதால், பெரியாரின் கருத்துப்படி ஒழுகி, நம்மவர்கள் என்று நம்மை அவர்கள் எண்ணும்படி நாம் நடந்துகொள்ள வேண்டும்.

இதையே கருணைப் பிரகாசரும் ஓர் இடத்தில் கூறியுள்ளார். அவர் ஒரு காட்டை வருணிக்கின்றார். அக்காட்டில் தழுவமுடியாத ஒரு மூங்கில் மரம் உண்டு. (அக்காலத்தில் மூங்கிற் குழாயினால் தானியங்கள் அளந்தனர். மரத்தால் ஆகிய அளவிற்கு மரக்கால் என்று பெயர் வந்தது. பித்தளைப்படியினாலும் அளந்தனர். இரும்பை உபயோகித்ததில்லை. புண்ணிய திருஷ்டியே இல்லாது, இலாப திருஷ்டியே உள்ள இக்காலத்தில் இரும்புப்படி உபயோகிக்கின்றனர்.) அம் மூங்கிலின்மேல் ஒரு கொடி படர்ந்து சென்றதாம். மூங்கிலோ சுவர்க்கத்தைத் தொடும்படி அவ்வளவு உயரம். அம் மூங்கிலில் படர்ந்த அக்கொடியும், சுவர்க்கத்தைத் தொட்டது. அங்குள்ள கற்பகத்தின் மேலும் படர்ந்தது.

இதை ''வளர்மதியின் மேலாய பெரியவரை அடைந்து ஒழுகிற்று'' என்கிறார். இங்கு மதி என்பதற்குச் சந்திரன் என்றும், வரை என்பதற்கு மூங்கில் என்றும், 'மதியின் மேலாய பெரியவரை' எனனும்போது, புத்தியில் மேலாகிய பெரியவர்கள் என்றும் பொருள்படும். 'அறிவில் மேலாகிய பெரியவரைப் பற்றி நடந்து துறக்கம் புகல் அரிதோ?' என்று கேட்கின்றார். இதையே திருவள்ளுவர் சொல்லுகிறார். ''தாமரையின் உயரம் தண்ணீரின் அளவுதான். ஊக்கம் காரணத்ததே உயர்வு''. மேலான எண்ணம் வேண்டும். ஓடுவதற்கு மருந்து கேட்டவன், அதைப் பெற்றுப் பின் தூங்கினதைப்போல் அல்லாமல், எண்ணமிருந்து அதோடு நில்லாது செயலும் வேண்டும்.

**உயர்வைத் தரும் குணங்கள்**

உலகத்தில் உயர வேண்டுமானால், அதற்குச் சில குணங்கள் இருக்க வேண்டும். முக்கியமாக ஒன்பது குணங்கள் இருக்கவேண்டும். (1) சாதுக்களாகிய பெரியவர்களிடத்தே விரும்பிப் பழகுகிறவர்களாக இருக்க வேண்டும். அறிவு

மட்டும் துணை செய்யாது. சாதுக்களின் துணையில்லாது உயர்ந்த வாழ்க்கை வாழமுடியாது.

(2) அன்னியரிடம் நல்ல குணம் இருந்தால் அதை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். உன்னிடமுள்ள நல்ல குணத்தை நினைக்காதே. பிறர் ஆற்றிய நன்மையைக் குறை கூற முயலாதே. அதைக்கண்டு மகிழ்ச்சியடை. தசரதர் தாம் செய்த யாகத்தை மறந்தார் என்கிறார் கம்பர். ''மெய்யாய வேதத்து உறை வேந்தர்க்கு ஏய்ந்த, யாரும் செய்யாத யாகம் இவன் செய்து மறந்த மாதோ''. நல்லன செய்து, பின் அதனை மறந்துவிடல் வேண்டும் என்பதே, இதுகொண்டு நாம் கற்கத்தக்கது. இத்தகைய சிறந்த குணம் பெரியவர்களிடம் அன்பு வைத்தால்தான் ஏற்படும்.

(3) ஆசாரியனை வணங்குதல்: குருவைக் கண்ட காலத்தில் உண்மையாக வணங்குகின்ற குணம் இருக்கவேண்டும். கண்டால் வணக்கம், காணாவிட்டால் பிணக்கம் என்றிருத்தல் கூடாது. வில்வணக்கம் போன்றும் இருத்தல் கூடாது. வில்வளைய வளைய, அதனினின்று புறப்படும் அம்பு துன்பத்தைச் செய்யும். ஆதலின் வில்வணக்கம் போல் வணங்கக் கூடாது என்பதாகும்.

(4) நாம் எவ்வளவோ கற்க வேண்டியது இருக்கின்றது என்று எண்ணுதல் வேண்டும். மேலும் மேலும் கற்க வேண்டும். 'படித்துவிட்டேன்' என்று எப்போது ஒருவன் எண்ணுகிறானோ, அப்பொழுதே அவனுடைய படிப்பு குறைய ஆரம்பிக்கிறது. ''தம்மிலும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம் எற்றே இவர்க்கு நாம்'' என்று படித்தவன் இருக்க வேண்டிய நிலையைப்பற்றி, நீதிநெறி விளக்கத்தில், குமரகுருபரர் கூறுகின்றார்.

(5) தன் மனைவியினிடத்துமட்டும் இன்புறல்: இல்லறத்தைச் செவ்வனே நடத்த மனைவியிடம் அன்பாய்இருந்து, நல்லவர்கள் நம்மைப் பற்றித் தப்புச் சொல்லாதவகையில் நாம் நடந்து கொள்ள வேண்டும். இதையே இராமன் என்ற சொல் குறிக்கிறது. ''இராமன்'' என்றால், தன்னுடைய குணத்தாலும், செயலாலும் பெரியோரை இரமிக்கச் (மகிழ) செய்பவன். பெரியவர்கள் எவன் குணத்தையும் செயலையும் கண்டு மகிழ்கிறார்களோ அவன் இராமன்.

(6) அடக்கம்: தன் சக்தியை அடக்கி ஆளல் வேண்டும். ''இளையான் அடக்கமே அடக்கம்'' என்பது நாலடியார்! (7) கடவுளிடம் அன்பு. (8) துஷ்டர்களோடு கூடாமலிருத்தல். (9) பெரியவர் கூட்டத்தை விடாதிருக்க வேண்டும். இவைகள் அமையப்பெற்றவர்களே பெரியவர்கள். அவர்கள்பால் அன்பு வேண்டும்.

(7) **வித்தை விரும்பு** :

வித்தை, வேண்டுவது. தொல்காப்பியம், பொருள் அதிகாரம் மெய்ப்பாட்டியலில் ''கல்வி தறுகண் இசைமை கொடை எனச் சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே'' என்ற சூத்திரம் உள்ளது. நமக்குப் பெருமையைத் தருவனவற்றுள் முதன்மையானது கல்வி. ஆதலின் கல்வி இச்சூத்திரத்தில் முதலில் வைக்கப்பட்டிருக்கிறது. கல்வி, காம்பீர கௌரவத்தைக் கொடுக்கிறது, மகிழ்ச்சியைக் கொடுப்பது.

''செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே''

என்னும் தொல்காப்பிய நூற்பாவில், 'புலன்' என்பதற்குக் 'கல்வி'ப் பயனாகியஅறிவுடைமை என்று பேராசிரியர் உரை எழுதுகின்றார். உலகத்தில் எல்லாராலும் விரும்பப்படுவது கல்வி. ''வள்ளுவர்நூல்-அன்பர் திருவாசகம்-தொல்காப்பியமே-தெள்ளு பரிமேலழகன் செய்த உரை-ஒள்ளிய சீர்த் தொண்டர்புராணம்-தொகுசித்தி-இவ் ஆறும் தண்தமிழின் மேலாம் தரம்'' என்று ,தமிழில் உள்ள எண்ணற்ற நூல்களில், ஆறு சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்துக் குறிக்குமிடத்தில், உமாபதிசிவாச்சாரியார் என்னும் சிவநெறிச்சான்றோர், பரிமேலழகர் உரையை அவைகளுள் ஒன்றாகக் கூறுகின்றார்.

''கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்னும் திருக்குறள் உரையிற் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் எழுதுகின்றார்.

''சிறப்புடை மகற்காயின் கற்றல் வேண்டும் என்பதூஉம், அவனாற் கற்கப் படும் நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனாற் பயனும், இக்குறளால் பெறப்பட்டன'' என்கிறார் பரிமேலழகர். எவற்றைக் கற்க வேண்டும்? பெரியவர்கள் உண்மையானவை என்று கண்டுணர்ந்த பொருள்களைக் கூறும் நூல்கள், கற்கப்படவேண்டும். கற்பதனால்என்ன பயன்? சிறப்புடைய ஒரு மனிதன் ஆக விரும்பினால், அவன் கல்வி அறிவு பெற்றிருத்தல் வேண்டும். கல்வி ஒருவனுக்குச் சிறப்பைக் கொடுக்கக்கூடியது. திருக்குறளில் பொருட்பாலில், அரசியலில் கல்வி என்னும் அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. ''அரசன் அறிவுடையவன் ஆகியக்கால், தன்னுயிர்க்கேயன்றி, மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி, இவ்வதிகாரம் அரசியலில் வைக்கப்பட்டது. ஆயினும், யாவர்க்கும் கல்வி உறுதி பயத்தற் சிறப்புடைமையினால் பொதுப்படக் கூறுகின்றார். '' என்பதும் பரிமேலழகர் தரும் விளக்கம். பலருக்கும் பயன்படுவதில், கல்வியைப் போல்வது பிறிதொன்றில்லை என்பது, இதனாற் பெறப்படும்.

''மறைமுதற் கிளந்த வாயால்,
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர், தம் பெயரை நாட்டி,
இலக்கணம் செய்யப் பெற்றே,
அறைகடல் வரைப்பின் பாடை
அனைத்தும்வென்று, ஆரியத் தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை,
உள்நினைந்து ஏத்தல் செய்வாம்!''

என்று துறைமங்கலம் சிவப்பிரகாசர் பாடுவது போல, இறைவனே தன்பெயரால் தமிழுக்குச் செய்தளித்த அரும்பெரும் இலக்கணநூல், ''இறையனார் அகப்பொருள்'' என்பது. அந்த இறையனார் அகப்பொருள் என்னும் நூலுக்குச் சங்கத் தமிழின் தலைமைப் புலவர் ஆகிய நக்கீரர் வரைந்த நல்லுரையின்கண் ''கற்று வல்லவன் என்பதிலும் மிக்க புகழ் இல்லை'' என்று குறிப்பிடுகின்றார். புகழ் உண்டாவது கற்பதனாற் கிடைக்கும் பயனாகும். உலகத்தாராலும் சமயத்தாராலும் ஒருங்கே புகழப்படுவது கல்வியே யாகும்.

கடவுளைப் பற்றிக் கூறவந்த தெய்வப் புலவர் ஆகிய திருவள்ளுவர், 'நல்ல அறிவினை உடைய கடவுள்' என்கின்றார். 'பிறவி நோய்க்கு உற்ற மருந்தாக இருக்கும் நல்ல திருவடியை உடையவன் கடவுள்' என்கின்றார்.

''கற்றதனால் ஆயபயன் என்கொல்? வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

என்பது திருக்குறள். இதன்கண் 'என்கொல்?' என்பதில் உள்ள குறிப்புச் சுவையை நோக்குங்கள். 'நற்றாள்'-எல்லாப் பிறவிப் பிணிக்கும் மருந்தாக உள்ள திருவடி. அத் திருவடியைத் தொழுவதே கல்வியறிவின் உண்மையான பயனாகும் என்று திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

இங்ஙனமே கம்பரும் கல்வியைப் பற்றிக் கூறுகின்றார். கல்வி என்பது ஒரு பெரிய மரம். கேள்விதான் அதன் கிளைகள். தவம் என்பது அதன் தழை. அன்பு என்பது அரும்பு. தருமம் மலர். அதன் பயனாக நாம் அனுபவிக்கின்ற சுகபோகங்கள் பழம் ஆகும். போகமாகிய பழம், தருமமாகிய மலரிலிருந்து உண்டாகிறது. அப் பழமும் மலரும் அரும்பும் தழையும், கிளைகளுமெல்லாம், கல்வி என்னும் பெரிய கற்பக மரத்தின் பயன்களேயாகும்.

''ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து,
எண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பணைபோக்கி,
அரும் தவத்தின்
சாகம் தழைத்து, அன்புஅரும்பித்
தருமம் மலர்ந்து,
போகம் கனிஒன்று பழுத்தது
போலும் அன்றே''

அன்போடு செய்யும் தருமமே தருமமாகும். பிறர் போற்றுவதற்காகவும், புகழ்வதற்காகவும் செய்யும் தருமம் தருமம் ஆகாது. அவ்வாறே பிறர் புகழ்வதற்காகப் போலியாக அன்பு செய்யாமல் உண்மையாக அன்பு செய்க.

வெளிப்பகட்டிற்காகக் காட்டிற்குச்சென்று செய்யும் தவந்தான், தவமா? அது தவமானால், காட்டிலுள்ள கரடி புலி சிங்கம் முதலியவைகள் தவமுனிவர்கள் ஆகிவிடுமே? காற்றையே புசித்திருத்தல் தவம் என்றால், காற்றை உண்ணும் பாம்பும் தவமுனிவர் ஆகும்.

''காலே (காற்று) மிகஉண்டு, காலே
இலாத கணபணத்தின் (பாம்பின்)
மேலே, துயில்கொள்ளும் மாலோன்
மருக! செவ் வேலவனே!''

என்னும் கந்தர் அலங்காரப் பாடலில், பாம்புகள் காற்றை உணவாகக் கொள்ளும் என்னும் கருத்தினை, அருணகிரிநாதர் தெரிவிக்கின்றார்!

தவமுனிவர்களின் இலக்கணம் யாது? அன்னியர் நம்மைத் துன்பப்படுத்தினால் அதனைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். அதைவிட மேலான தவம் இல்லை. இது வாய் அளவில் இல்லாது, செய்கையில் வேண்டும். அடிக்க வருகிறான் என்றால், எவன் அவன்? என்று கேட்கிறோம். புகழ்கிறான் என்றால், அவர் யார்? என்று கேட்கிறோம். சில சமயங்களில் அடிக்கஓங்கிய பொழுது, தவம் பறந்துபோகும். அவ்விதமின்றி மனம் பொறுத்துக் கொண்டால், அவனே காட்டிற்குப் போனவன். அவனே காற்றை உண்டவன். அவனே தவமுடையவன். அதுதான் பாதி தவம். மற்றொரு பாதி, நல்லது செய்யாவிட்டாலும், தீயது பிறர்க்குச் செய்யாதிருத்தல். ''நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்'' என்பது புறம். ''உற்றநோய் நோன்றல்; உயிர்க்கு உறுகண் செய்யாமை; அற்றே தவத்திற்கு உரு''. அன்னியர்க்குத் துன்பம் செய்யாமை, அஃது ஒரு பாதி தவம். அதன் பின்னரே தர்மம்.

மற்றைய புலன்களைவிட, காதைப் பற்றித் தான் துக்கப்படவேண்டியிருக்கிறது. வாயும், கண்ணும் இரட்டைக் கதவுடையன. காதுக்கோ அப்படியில்லை. எதுவந்தாலும், கதவில்லா வீட்டில் வைரவர் வாகனமும், சீதேவியின் மூத்தாள் வாகனமும் நுழைவது போல், நுழைகிறது. கேட்கக் கூடாததைக் கேட்டுவிட்டால், சைவர்கள் காதைப் பொத்தி 'அர அர' என்றும் வைணவர்கள் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்றும் சொல்வார்கள். படித்தவர்கள் சொற் கேட்டுக் கேட்டுக் காதைத் துளைபோடவேண்டும். பெரியவர்கள் கூறுவதைக் கேட்ட காதே, நல்ல துளையுடைய காது. அப்படிக் கேளாதது தொல்லையுடைய காது.

படியாதவர் என்றும் படியாதவர்; படித்தவர் என்றும் படிந்தவர். ''ஏகம் முதல் கல்வி'' என்று கம்பர் கூறுகிறார். கல்வி இவ்வுலக போக மாத்திரம் இன்றி, மறு உலக போகத்தையும் கொடுக்கும். அந்தப்போகத்திற்கும் மேம்பட்டதாகிய சிவபோகமும் கொடுக்கும். ''கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசர்'' என்று ஞானசம்பந்தரும், ''கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி'' என்று திருமாளிகைத் தேவரும் கூறியிருக்கின்றனர். இதனால் கல்வி முப்போகத்தையும் கொடுக்கக்கூடியது. கல்வி புறப் புறக் கல்வி (உலகத்தைப் பற்றி அறிவது), புறக்கல்வி(வெளியிலுள்ள செடிகொடிமுதலியன பற்றிய அறிவு), அகப்புறக்கல்வி (உடல்நூற் கல்வி) அகக் கல்வி (மனநூற் கல்வி) என நான்கு வகைப்படும். இவைகளையெல்லாம் கற்க வேண்டியதுதான்.

ஆனால் ஒரு கல்வி மட்டும் தவறாமல் வேண்டியிருக்கிறது. கடவுளைப் பற்றியிருக்கிற படிப்பு அவசியம் வேண்டும். அத்தகைய கல்வி நமக்கு அவசியமா? என்று கேட்கலாம். அவசியந்தான் என்று சேக்கிழார் கூறுகின்றார்.

பெரியபுராணத்தில், வீதிவிடங்கனுடைய படிப்பைப் பற்றிக் கூறும்பொழுது, ''சிவம் முயன்று அடையும் தெய்வக்கலை பல திருந்த ஓதி'' என்கிறார் சேக்கிழார். வீதிவிடங்கனாகிய அரச குமாரன், தெய்வத்தை முயற்சி செய்து அடையவேண்டிய கல்வியைப் படித்தான். விபரீத உணர்ச்சி போகத் திருந்த ஓதினான். ஒரு அரசகுமாரனே அத்தகைய நூலைக் கற்கும்போது நாமும் ஏன் படிக்கக்கூடாது? எதுவரையிலும் படிக்கவேண்டும்? வெளியில் காணும் தெய்வத்தை உள்ளே காணும் வரை கற்க வேண்டும். ''நல் குஞ்சரக்கன்று நண்ணில், கலைஞானம் கற்கும் சரக்கன்று'' (உமாபதி சிவாச்சாரியார்). அருணகிரிநாதர் சொல்லுகிறார் ''உள் அடங்க ஓத, வாழ்வு தருவாயே'' என்று எது படிக்க வாழ்வு வேண்டும்? ஞானநூல்' ஓத வாழ்வு தருவாயே' என்கிறார். எப்படிப்பட்ட ஞான நூல்? ''நோய் கலந்த வாழ்வுறாமல் நீ கலந்த ஞானநூல்.''

(8) தமிழ்க்கல்வி

'தமிழக இளைஞர் மன்றம்' என்ற பெயருக்குத், 'தமிழை அகத்திலே போற்றி வைத்துள்ள இளைஞர்களையுடைய மன்றம்' என்றும், பொருள் கொள்ளலாம். தமிழ்தான் சிறந்த மொழி. எல்லா மொழிகளும் கற்றிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் பிறந்த ஒருவன், தமிழ் படிக்காவிட்டால் செய்யவேண்டியதைச் செய்யாதவனாகிறான். தமிழுக்குப் பின்தான் மற்றவைகள். பல மொழிகள் படிப்பதால், தமிழில் உள்ள வேற்று மொழிகளை அறிந்து கொள்ளமுடியும். குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், காப்புப் பருவத்தில் ''சலாம் இடற்கு ஏக்கறு குமரன்'' என்று கூறுகிறார். இங்கு சலாம் என்பது முகம்மதிய மொழி. பல மொழிகள் படிக்காவிட்டாலும், முக்கியமாக நான்கு மொழிகள் படிக்கவேண்டும். தேசமொழி, அரச மொழி, சமயமொழி, வீட்டுமொழி ஆகிய நான்கினையும் படிக்க வேண்டும். வேண்டுவது எது? தமிழ் வேண்டும். தமிழின் பெருமையை யார் சொல்ல வல்லார்கள்? முருகன் வாக்கெனவே கருதவேண்டிய, குமரகுருபரர் வாக்கில் ''இக்கொழி தமிழ்ப் பெருமையார் அறிவார்''? என்று, மதுரைக் கலம்பகத்தில் பெறப்படுகிறது. பெருமை அறியமுடியாதபடி, அவ்வளவு நூல்கள் தமிழில் உள்ளன. உடல் இளைக்கக்கூடிய அளவு படிக்க, ஆராய நூல்களிருக்கின்றன. உடல் இளைத்துள்ள ஒருவனை, அவனது நண்பன், இளைப்பின் காரணத்தைக் கேட்டபொழுது, நல்ல தமிழ்நூல்களை எல்லாம் படித்து இளைத்து விட்டாயா? என்கிறான். ''ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ? என்பது திருக்கோவையாரிலுள்ள செய்யுள். இப்படிக் கேட்கும் பாங்கன், சாதாரணமானவனன்று, இடித்துச் சொல்லக்கூடிய 'கழற்றறி பாங்கன்.'

தமிழ்ப் படிப்பு, காட்டுப்பசு நக்குவதைப் போல், முதலில் சுகம் கொடுத்துப் பின் துன்பம் விளைவிக்கக்கூடியதன்று. ''ஆய்ந்த ஒண்தீந் தமிழ்'' என்பதால், தமிழ் 'இனியது' என்று தெளிவாய்த் தெரிகிறது. ஆய்தல் என்றால் நுட்பமாக ஆராய்தல் என்ற பொருளாகும். தமிழாக ஆன சிவன், தில்லையை விட்டு மதுரை வந்து புலவர்களுடன் நூல்களைநுணுகி ஆராய்ந்தார் என்பதால், தமிழில் மனம் உருகத் தக்க, உடல் உருகத் தக்க, அனேக நூல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. இப்படிப்பட்ட தமிழின் பெருமையை யார் உரைக்க முடியும்? இவ்வழகிய தமிழின் பெருமையைத் திருத்தணிகைப் புராணத்தில், கச்சியப்பமுனிவர் ''ஆயும்தொறும் தொறும் இன்பம் தரும் தமிழ்'' எனக் கூறுகிறார். அன்பினால் வருகின்றது இன்பம். இன்பமே கடவுள். ''என்னுடைய அன்பே, அன்பினில் விளைந்த ஆரமுதே'' எனத் திருவாசகத்திலும், ''இறவாத இன்ப அன்பு'' எனப் பெரியபுராணத்திலும் கூறப்படுகின்றன. தமிழ் என்றால் அன்பு, இன்பம். ''தமிழ், தமிழ் இனிமை நீர்மை'' என்பது நிகண்டு.

'தமிழினைப்போல் அன்பை விளைவிக்கக் கூடிய பிறமொழி கிடையாது' எனப் பல மொழிகளை ஆராய்ந்த பெரியோர் கூறுகின்றனர். இறையனார் அகப்பொருளில், ''அன்பின் ஐந்திணைக் களவு எனப்படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள், கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்'' என்பது முதற்சூத்திரம். இங்கே கூறப்பட்டுள்ள முதற்பதம் அன்பு. ''களவு கற்புஎனக் கண்ணிய, ஈண்டையோர் உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன'' என்னும் கடைசிச் சூத்திரத்தின் கடைசிச் சொற்றொடர் ''அன்பின் உயர்ச்சி மேன'' என்பது. தமிழ் மொழியானது, அன்பை வளர்ப்பதில், இன்பம் தருவதில் சிறந்தமொழியாக இருக்கிறது. அதைத் தமிழர்கள் அவசியம் நன்றாகப் படிக்க வேண்டும். அதன்பின்னர் வேற்றுமொழிகளைக் கற்கவேண்டும். ஏனைய மொழிகள் தமிழ் மொழிக்கு அரண் செய்கின்றன. பிறமொழிகளில் சிறந்த பண்டிதர்கள் கூறியவற்றைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டும். சிலர் இரண்டொன்றைப் படித்துவிட்டு, எல்லாம் படித்ததாக எண்ணிவிடுகிறார்கள். அது தவறு.

''நூல் பல கல்'' என்பது ஔவை ஆத்திசூடி. நூல் என்ன செய்யும்? மனக்கோணலை ஒழுங்கு படுத்தும். அறிவுக்குத் தெளிவு கொடுக்காத, நல் ஒழுக்கத்தைத் தராத, புத்தகத்தைப் படித்தல் கூடாது. 'நுண்ணிய நூல் பல கற்றல் வேண்டும்'. ஒழுக்கத்தை, அன்பைத் தரும் நூலைப் படிக்கவேண்டும். எதனையும் படித்தல், எதனையும் கேட்டல், எவரிடத்தும் கேட்டல் என்பனவற்றை, அறவே விட்டுவிடல் வேண்டும். சாந்தி அடைவது எப்படி? கற்றலினால்தான். கல்லாத மனம் ஒடுங்கி உவகை அடையவில்லை. ''கற்றவர்கள் கண்டது அடக்கம்'' என்பது, முன்றுறையரையனார் கூற்று. கல்வி, தளர்வுற்ற காலத்துத் தளர்ச்சியை நீக்கும். துன்பம்வந்த இடத்தும்துன்பந்தோன்றாது

இன்பம் பயக்கும். தலையில் மூட்டை சுமந்து வந்த ஒரு வித்துவானை நோக்கி, 'ஏன் இப்படி சுமக்கிறீர்கள்?' என்று ஒருவர் கேட்டார். அதற்கு அப்புலவர் 'தலைவிதி-வசம்', 'தலைவி -திவசம்' எனச் சாதுரியமாக இரு பொருள் படும்படிக் கூறினார். மற்றொரு வித்துவான் சாகுந் தருவாயிலுள்ள பொழுது, அவன் மகள் துணியில் பாலைத் தோய்த்து, வாயில் பிழிந் தாள். பிழிந்தபின் 'பால் கசக்கிறதா' என்று, அப் பெண் கேட்டாள். அதற்கு வித்துவான் 'பாலும் கசக்கவில்லை, பால் விடும் துணியும் கசக்கவில்லை' என்றார். 'கசக்கவில்லை' என் பதில், பால்விடும் துணி அழுக்குடையது என் பதையும் உணர்த்துகிறார். சாகுந்தருவாயில் கூட, இப்புலவர் கல்வியைப் பயன்படுத்துவதைப் பாருங்கள். முற்காலத்தில் இத்தகைய புலவர் களை மிகவும் பெருமைப்படுத்தினார்கள். முற் காலத்தில் மதுரையில் நாற்பத்தொன்பது புல வர்களைச் சிவபெருமான் ஆலயத்தில் வைத்துப் பூசித்தார்கள். திருப்பரங்குன்றத்தில் நக்கீர தேவரை, முருகன் அருகில்வைத்து வணங்கு கிறார்கள். 'முற்காலத்தில்' என்று கூறியதனா லேயே, 'தற்காலத்தில்' புலவர்களை நாம் பெருமைப்படுத்துவதில்லை என்னும் குறிப்பும் வெளிப்படும்!

### (9) பெண் தமிழ்க்கல்வி :

பழங்காலத்தில் தமிழ்படிக்காத பெண்ணே கிடையாது. இதைக் கம்பர் கூறுகிறார் ''பிறை நுதலார்க்கெலாம் பொருந்து கல்வி''. பெண்கள் தருமநூல்கள் படிக்கவேண்டும். நாயகனைப் பேணச் செய் நூல்களைப் படிக்கவேண்டும். சமய நூல்களைக் கற்கவேண்டும். தமிழை வளர்க்கவேண்டும். பழைய தமிழ்ப்பெண்கள் பாடிய செய்யுள்களுக்கு உரை காணல், தற் காலப் பண்டிதர் சிலரால் முடியாதிருத்திறது. பழங்காலத்தில் ஒளவையைத் தவிர வேறு பெண் புலவர்கள் இருந்தனரா? என்று கேட் கிறார்கள். கழார்க்கீரனெயிற்றியார், காமக் கண்ணி, நப்பசலையார், குறமகள் குறியெயினி, நக்கண்ணையார், வெண்கண்ணியார், நல் வெள்ளையார், மாறோகத்து நப்பசலையார், வெள்ளிவீதியார், வெறிபாடிய காமக்கண்ணி யார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், பொன்முடியார், பூதப்பாண்டியன்தேவியார், ஆதிமருதியார், வெண்ணிக்குயத்தியார், பாரி மகளிர் எனப் பல பெண்புலவர்கள் இருந்திருக் கின்றனர். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இவர்களது பாடல்களைப் பல சான்றோர்கள் தம் உரையில் மேற்கோள்களாக எடுத்தாண் டுள்ளார்கள். கம்பராமாயணத்தில்,

''பெருந் தடங்கண் பிறைநுத லார்க்குஎலாம்,
பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே''

எனவரும் பாடலால், பெண்கள் கல்வி கற்க வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்துகின் றார், கம்பர். பெண்கள் கல்வி கற்பது அவ சியம்தான்; ஆனால் அவர்கள் எத்தகைய கல் வியைக் கற்கவேண்டும்? பொருத்தமில்லாத கல்வியைக் கற்றல் கூடாது; பெண்கள் பொருத் தமான கல்விபயில வேண்டும் என்பதற்காகவே ''பொருந்து கல்வி'' என்று கம்பர் குறிக்கிறார். படித்த பிற்பாடு கேட்பது, உறுதிப்படுத்திக் கொள்வதற்காகும். படியாமற் கேட்பது அறி வதற்காகும். ஓர் ஊரில் அறியாமை இல்லை என்பதற்குக் காரணம். அங்குள்ளவர்கள் அனை வரும் கேள்வி அடைந்தவர்கள்! ''வெண்மை யில்லை பல் கேள்வி மேவலால்'' என்று கம்பர் கூறுகிறார். 'கற்றிலனாயினும், கேட்க' என்று திருவள்ளுவர் கூறுகிறார். கண்ணப்பர் படிக்க வில்லை; ஆனால் 'ஊனுக்கு ஊன்' என்று கேட்டு வைத்தார். இதனால்தான் ஆறாவது நாளில் முக்தி அடையமுடிந்தது.

### (10) படிக்கும் முறை :

அவசரமாகப் படிக்கக்கூடாது. மெதுவாகப் படிக்கவேண்டும். 'விரைந்து பார்க்கில் தெரி யாது ஒன்றும்', 'விரையாது ஏகில் கருகாது' என்கிறார், இலக்கணக் கொத்தாசிரியர்! படித் ததை ஞாபகத்தில் வைப்பதற்காகப் பழைய பாடங்களையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய பாடங்களையும் பார்த்து வைத்துக் கொள்ளவேண்டும். இதன் பின்னரே பள்ளி செல்லவேண்டும். புதிய பாடத்தைப் படித்ததில், தான் கொண்ட பொருளையே, ஆசிரியர் கூறுவாரானால் மகிழ்ச்சி ஏற்படும். தவறினால் இப்படித் தவறினோமென்று உண ரல் வேண்டும். இப்படி உணர்வதால் அறிவு வளரும். பழைய பாடஞ் சிந்தித்தல் இன்றி யமையாதது. 'படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும் அதுபோல' என்று, சிவப் பிரகாச அடிகள் கூறுகின்றார்.

### (11) நட்பு:

திருக்குறளில் பொருட்பாலில் 70 அதி காரங்களுள்ளன. அவற்றுள் அரசியலுக்கு 25 அதிகாரங்கள். ஒழிபியலுக்கு 13 அதிகாரங்கள் அங்கவியலுக்குரிய 32 அதிகாரங்கள். அமைச் சுக்கு 10 அதிகாரம், நாட்டிற்கு ஒன்று. அர ணுக்கு ஒன்று. பொருள் செயல் வகைக்குஒன்று படைக்கு இரண்டு. நட்பிற்கு மாத்திரம் 17 அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் நட்பின் முக்கியத்துவம் தெரியவரு கின்றது. அங்கவியலில் பாதிக்கு மேல் நட்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் நட்பின் முக்கியம் தெரியவருகிறது. நட்பு எல்லோ ரோடும் செய்துவிடக்கூடாது. அனால், விரோ தம் யாரிடமும் வேண்டாம். நல்ல நட்பிற்கு 5 அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வேண் டாத நட்பிற்கு 12அதிகாரங்கள் இருக்கின்றன. இதனால் நாம் எதில் சாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் உணர்த்து கிறார். இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். ''இணக்கம் அறிந்து இணங்கு'' என்று ஒளவை கூறுகிறாள்.

### (12) அரசர் மாட்டு அன்பு :

அரசர் மாட்டு அன்பு வேண்டுவது. இளை ஞர்கள்தேசத்தைப்பற்றியும், கைத்தொழிலைப்

பற்றியும், வியாபாரத்தைப் பற்றியும், ஊக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், அரசியல் துறையில்மட்டும் வேகமாக இறங்கக் கூடாது. இதனால் அரசனிடம் அன்பு தேவை யில்லை என்பது, பொருள் அன்று. இறைமாட்சி என்பதுல், இறை என்றால் கடவுள். சிலப்பதிகாரத்தில் இறை என்பதற்கு, எங்கும் தங்குதல் என்ற பொருளில், கடவுளைக் குறிக்கிறது என்கிறார் அடியார்க்கு நல்லார். அரசனுக்குக் கடவுளின் பெயரை வைத்திருக்கிறார்கள். 'வேந்தனும் ஓங்குக' என்று ஞானசம்பந்தர் கூறுகின்றார். திருவாய்மொழியில் ''திருவுடைமன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே'' என்று வருகிறது. அரசன் திருமாலின் அம்சம். இவற்றால் அரசனின் பெருமையும் அவனுக்கு அன்பு செய்யவேண்டிய அவசியமும் தெரிகின்றன.

### (13) அனைவரிடத்தும் அன்பு:

எல்லோரிடத்தும் அன்பு வேண்டும். உயர்வு தாழ்வு கருதாது, எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தவேண்டும். மிக ஏழையாக இருந்தாலும், அவனிடமும் நம்முடைய அன்பு செல்லவேண்டும். அப்பொழுதுதான் நாம் முழு மனிதராக ஆகின்றோம். இராமபிரான் தன் தம்பியோடு உலாவி வரும்பொழுது, ஒதுங்கிப் போகும் ஓர் ஏழை மனிதனைக் கண்டான். அவனை அருகில் அழைத்து அவனைப் பற்றியும், அவனது குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தான்.

'' எதிர்வரும் அவர்களை, எமைஉடை ஐயன்,
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர,
எதுவினே? இடர்இலே? இனிது நும்மனேயும்?
'மதிதரு குமரரும் வலியர்கொல்? என்பான்''

என்று, இராமனின் செய்கையைக் குறிக்கிறார், கம்பர்!

### (14) ஒழுக்கம்:

ஒழுக்கம் வேண்டும். ஒழுகு அம்-ஒழுக்கம். நீர் ஒழுகுதல் ஆரம்ப முதல் கடைசிவரை விடாது ஒழுகி வருவதுபோல, எப்பொழுதும் ஒழுக்கம் வேண்டும். ஒரு மனிதன் உயர்வுற வேண்டுமானால், அவனுக்கு ஒழுக்கம் அவசியம். செல்வம் வேண்டும், தரித்திரம் வேண்டாம்; அதுபோல் ஒழுக்கம் வேண்டும், ஒழுக்கமின்மை வேண்டாம். ஒழுக்கம் என்ன செய்யும்? நம்முடைய ஆத்மா மோட்சம் அடைவதற்கு ஒழுக்கமே ஆதாரம். ஒழுக்கம் தருமத்தை வளர்க்கும். தருமம் வளர்ந்தால் பாவம் குறையும். அதனால் மூடத்தனம் நிவர்த்தியாகும். பின் நித்திய அநித்தியப் பொருள்களின் விவேகம் உண்டாகும். அதனால் மண் விண் என்னும் இரண்டு உலகத்திலும் வெறுப்பு ஏற்பட, முக்தி வாய்க்கப்பெறும். ஒழுக்கம் முதற்படி. மோட்சம் கடைசிப்படி. முதற்படியை விட்டு மேல் செல்ல முயன்றால் தவறி விழ வேண்டியதுதான். ஒழுக்கத்தைக் கோவிலுக்குப் போகும் போது மாத்திரமில்லாது, சில நாட்களில் மட்டுமில்லாது, என்றும் கடைப்பிடிக்க வேண்டும்.

### (15) குரு பக்தி வேண்டுவது:

கல்வி கற்பித்தவன் கடவுளே. அவன் கற்பிக்கும் கல்வி, இம்மை மட்டும் அன்று உதவுவது. எழு பிறப்பினும் உதவுவது. கல்வி கற்பித்தார்க்கு, நாம் கைம்மாறு செய்ய இயலாது. அவர் கருத்தின்படி, அவரது மனம்மகிழும்படி செயலிலும் நடத்தல் வேண்டும். இவ்வழி பாடே எக்காலத்தினும் கல்வியை நிலைநிறுத்தி அறிவை வளர்த்துப் புகழ், பொருள், பூசை முத முதலியவற்றைத் தருவது. நம் வீட்டிற்குரிய ஞான குருவினிடத்தும், அன்பர்களாக வாழ வேண்டும். அதனால் கடவுள், உலகம், உயிர் ஆகிய இவற்றின் இலக்கணம் உணர்வோம். கடவுளைப் பற்றுவோம். துன்பத்தினின்று நீங்குவோம். இன்பமடைவோம்.

### (16) கடவுள் வழிபாடு:

அடுத்து வேண்டுவது கடவுள் வழிபாடு. இளைஞர்கள், இளைஞர்களாக இருந்தவர்கள், அனைவரும் இதை எண்ணவேண்டும். சோழ நாட்டில் மண்ணி ஆற்றங்கரையில் உள்ள சேய்ஞலூரில், முருகன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். திருவிடைமருதூரில் சிவபெருமானே மகாலிங்கத்தை வைத்துப் பூசித்தார். தாய் மருந்து உண்கிறாள். தனக்காக அன்று, தன் பிள்ளைகளுக்காகத் தான். அதுபோல நாமும் கடவுள் வழிபாடு செய்யவேண்டும் என்றே, இறைவனும் நமக்கு வழிகாட்டுகிறார். நம்மினும் உயர்ந்தவர் கடவுள். நாம் பாலராக இருந்து, காளையராகிப், பின்னர் முதுமையடைகின்றோம். ஆனால் அவர் முன்னே விருத்தராக இருந்து, காளையாகிப், பின்னே பாலராக மாறினார். நாம் பிற்காலத்தில் பாலராக முடியாது. இதனால் நம்மினும் சிறந்தவராக இருக்கின்ற கடவுளை வழிபடவேண்டும். கடவுள் வழிபாடு சிறந்ததொன்று.

### (17) சமயப்பற்று:

சமயத்தோடுதான் கடவுள். சமயமின்றிக் கடவுள் இல்லை. பலசமயங்கள் இருக்கின்றன. எந்தச் சமயத்தையும் வெறுக்கக்கூடாது. ஆசாரியனிடம் அன்புடன் இருக்கவேண்டும். அனுட்டானத்தில் துவேஷம் கூடாது. இறைவன் பெயரைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளாகும். இறைவனை வணங்காத உடம்பு, உயிர் போன உடம்பாகும். இசுலாமிய மதத்தில் 'கடவுள் ஒருவரே. வேறொரு கடவுள் இல்லை. அவரை அடைய மகமத் என்ற தூதரொருவர் இருக்கிறார்' என்று பொருள்படும், **''லா இலாஹி இல்லல்லாகி மகமது ருசுலுலாகி''** என்பது, அவர்கள் மந்திரம். இவ்விதமாகவே பல சமயங்களிலும் பல உண்மைகள் இருக்கின்றன. அவைகளைத் துவேஷிக்கக்கூடாதே ஒழிய, அவைகளைப் பின்பற்றி நம்முடைய சமயத்தைத் தளர்த்திவிடக் கூடாது. நம்முடைய சமயத்தில் தளராத பற்று இருத்தல் வேண்டும். அதில் முதலையைப் போல் விடாப்பிடி இருக்க வேண்டும்.

சிறப்பாகச் சைவர்களாக இருக்கின்றவர்கள், தங்கள் சமயத்தைக் காட்டிக் கொள்ளச் சமயச் சின்னமாகிய திருநீற்றைப்பூசவேண்டும். வைணவர்களாக இருந்தால், திருமண் இட்டுக் கொள்ளவேண்டும். எஜமானன் முன்போகும் வேலைக்காரன் ஒருவன், தான் இன்னான் என்று காட்டிக் கொள்வதற்குத் தனக்குக் கொடுக்கப்பட்ட வில்லை ( 'Badge, Uniform ) முதலிய அடையாளங்களை அணிந்து கொள்வதுபோல, நம்முடைய தலைவனாக இருக்கின்ற இறைவன் அடையாளமாக நமக்குத் தந்துள்ள நமது சமயச் சின்னங்களை அணிந்து கொள்ளவேண்டும். பின்னர் குருவை அடைந்து ஜபம் முதலியன செய்து இறைவனை வழிபடுதல் வேண்டும்.

ஆங்கில நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குறிக்கோள் ( Motto ) எழுதி வைத்திருப்பர். நாத்திகன் ஒருவன் வீட்டில் ''God is nowhere '' என்று எழுதி வைத்திருந்தான். அவனுக்குத் தீரா நோய்வந்தது. வைத்தியர்கள் கைவிட்டார்கள். இறுதியில் கடவுள் பக்தியால்தான் நோய் நீங்கும் என்று அறிவிக்கப்பட்டான். தன் எண்ணத்திற்கு மாறாகக் கடவுள் உள்ளார் என்று ஒப்புக் கொண்டான். இதை அறிந்த ஒருவர் 'உங்களுடைய குறிக்கோள் என்ன ஆயிற்று?' என்று, அவனைக் கேட்டார். அதற்கு அவன் 'என்னுடைய குறிக்கோள் இருந்தபடியே இருக்கிறது' என்று கூறி ''God is now here'' என்ற பதிலைக் கொடுத்தான். அவன் தன் குறிக்கோளிலிருந்து தவறவில்லை. அதுபோல் நாமும் குறிக்கோள் ஒன்று வைத்துக்கொண்டு அதனினின்று வழுவாது இருக்கவேண்டும். ஆகிய, இவையெல்லாம் நமக்கு வேண்டுவன.

ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்.
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீ ரடியா ரெல்லாம்!

---

# அர்த்த பஞ்சகம்

வேத வேதாந்தங்களிலெல்லாம் சிறப்பாக எடுத்து வற்புறுத்திப் பேசப்படும் ஐந்து பொருள்களையே ''அர்த்த பஞ்சகம்'' என வழங்குவர். அவை முறையே இறைவனின் நிலை (பரஸ்வரூபம்), உயிரின் நிலை (சேதநஸ்வரூபம்), இறைவனை அடைதற்கு உரியநெறி (உபாயஸ்வரூபம்), இறைவனை நாம் அடைய வொட்டாத தடையாகிய ஊழிவினை (விரோதிஸ்வரூபம்). நாம் அடைதற்குரிய பேறு (புருஷார்த்த ஸ்வரூபம்) என்னும் ஐந்துமாம்.

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆயிரம் பாடல்களிலும், இவ்வைந்து பொருள்களே சிறப்புற எடுத்துச் செவ்விதின் உணர்த்தப்பட்டுள்ளன என்பர்.

''மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்,
தக்க நெறியும், தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும், வாழ்வினையும், ஓதும் குருகையர்கோன்
யாழின்இசை வேதத் தியல்''

என்பது, பராசரபட்டர் அருளிய திருவாய்மொழித் தனியன்.

திருவெட்டெழுத்து மந்திரம், பிரணவத்தால் சேதந ஸ்வரூபத்தையும், நம என்பதனால் விரோதி ஸ்வரூபம் உபாய ஸ்வரூபங்களையும், நாராயண என்பதனால் பரஸ்வரூபத்தையும், 'நாராயணாய' என்னும் நான்காம் வேற்றுமையுருபால் புருஷார்த்த ஸ்வரூபத்தையும் உணர்த்தியருள்வதாக, வைஷ்ணவப் பெரியோர்கள் கூறுவர். இதனால், அர்த்தபஞ்சகம் எத்துணைச் சிறப்புடையது என்பது தெளிவாம்.

ஸ்ரீமந் நாராயணனே அறப் பெரிய முதல்வன்; ஆத்மாவிற்குச் சொரூபம் அடியேன் என்பதே; சரணாகதியே இறைவனை அடைவதற்குரிய வழி; பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கமும் அழுக்குடம்பும் ஆகிய இவையே விரோதிகள்; ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதுவே பரம புருஷார்த்தம்; என்னும் இவ்வைந்து பொருள்களுமே 'அர்த்த பஞ்சகம்' எனப்படும்.

—ஆசிரியர்.

# திருப்பாலைவனம் திருக்கோயில்

திரு. சிறுவை நச்சினார்க்கினியன்

''தொண்டைநாடு சான்றோர் உடைத்து'' என்பது முதுமொழி. அது மட்டுமல்ல, வரலாற்றின் அடிச்சுவட்டைக் காணும்போது மறுக்க இயலாத உண்மையுங்கூட. இப் பூவுலகில் தோன்றிச் சிறந்துயர்ந்த பொருள்கள் அனைத்தும் அழியுந் தன்மையுடையன. ஆனால் சான்றோர்களின் புகழும் பெருமையும் வாழையடி வாழையாக நிலைத்து நின்று புகழ்மணம் பரப்பிக் கொண்டிருக்கும். இத்தகு சிறப்புக்கு இலக்காகத் தொண்டைநாட்டில், சென்னைப் பெருநகருக்கு அடுத்த பொன்னேரி வட்டத்தில் பழவேற்காட்டிற்குப் போகும் வழியில் ''திருப் பாலைவனம்'' என்னும் ஊர் உள்ளது. பண்டைய நாளில், இவ்வூர் ''கோளூர்'' என்னும் ஊரின் ஒரு பகுதியாக விளங்கியது எனலாம்.

முதலில் இதன்பெயர் ''பாலைவனம்'' என்பதே. பாலை மரங்கள் மிகுதியாக வளர்ந்து அடர்ந்த சோலையாக விளங்கியது. இதனுடன் தென்னையும், கமுகும்கூட வளர்ந்து இருந்தன. பண்டைநாளில் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பயணம் செய்யும்போது இடையில் களைப்பாறத் தகுந்த சோலையாக விளங்கியது. 'எழில் மிகுந்த இயற்கை நலம் பெற்று விளங்கியது. இவ்வூரில்தான் சான்றோர் பலர் செய்த நற்றவத்தால் சிவபெருமான் சுயம்புலிங்கமாகத் தோன்றினார். பெருமானின் திருமேனி மரப்பட்டையால் மூடப்பெற்று இருந்தது. இத்திருமேனி வெளிப்பட்ட நிலை சுவை மிகுந்ததோர் செய்தியாகும்.

இவ்வூர் அமைந்த தொண்டை நன்நாட்டினை, கி.பி.1064 முதல் கி.பி.1271 வரை சுமார் ஒன்பது சோழ மன்னர்களும், இப்பேரரசர்களுக்கு அடங்கி ஆண்ட சிற்றரசர்கள் நால்வரும், இதற்குப் பிறகு சுப்பராயர், விசயநகர வேந்தர்கள், காகதீய அரசர் முதலியோர் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது இவ்வூர்.

சோழ அமைச்சர்களுள் ஒருவன், தன் பரிவாரங்களுடன் பயணம் செய்யும்போது இப்பாலைவனச் சோலையில் தங்கலானான். யானையை ஒரு மரத்தில் கட்டினான். மீண்டும் பயணத்தைத் தொடங்கியபோது, யானையை அவிழ்க்கச் சென்றபோது யானை இறந்து கிடந்தது. யானை இறந்த துயரத்தால் வெகுண்டு, அம்மரத்தைக் கோடாரி கொண்டு வெட்டச் செய்தான் அரசன். அம்மரத்தின் அடிப்பகுதியினின்றும் இரத்தம் வழிவதைக் கண்டு பயந்தவனாய்க் குருதி வரும் காரணத்தை அறிய, சோதிக்கலானான். ஒரு லிங்கத்தை மரம் மூடியிருந்தது என அறிந்தான். பதைத்தான். பின்னர் தான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக அங்கே ஒரு கோயில் எடுத்து வழிபட்டான் என்பது ஒரு குறிப்பு. லிங்கம் சுயம்பு, வெண்மையாக இருக்கும், உச்சி பிளவுபட்டிருக்கும். இந்நிகழ்ச்சியினை.

" பாலைமரப் பொழில்நிறையுன்
பதியடைந்த சோழன்
பகரரிய சேனையிலோ ரானைதரு பிணைத்த
காலையதின் கருவிகளிற் கணவுதிரம் பெருகிக்
கணப்போதி லுயிர்விலகக் கண்டவனும்
பயந்தே
சோலையிலம் மரத்தடியைச் சோதனை செய்துனது
சுயம்புருவங் கண்டுமன்னன் துய்யசெம்
பொன் கோயில்
சீலமுடன் செய்துதொழும் திருப்பாலை வனம்வாழ்
தெள்ளமுதாம் பாலீசா! திருவருள்
செய்தருளே! ''

என்று சிவராஜ சுவாமிகள் பாடியுள்ளார்.

மற்றும் பௌராணிக நோக்கில், பிச்சாண்டி வேடம் பூண்டு நிர்த்தனம் செய்த பரமசிவனைக் கண்டுமோகித்த தாருகாவனத்து ரிஷி பத்தினிகளில் ஒருத்தி, தான் பாலைமரமாகிச் சிவலிங்கத்தைச் சூழ்ந்து ஆலிங்கனச் சுகத்தினை அனுபவித்த தலம் எனவும் ஒரு குறிப்பு. மேலும் இத்தலம் அருந்ததியின் மேல் கொண்ட கோபத்தினால் சூரியனுக்கு வந்த சாபவிமோசனத்தைப் போக்கிய தலம் எனவும்; முகுந்த மாமுனி பேறுபெற்ற தலம் எனவும், இம் முனிவர் பேறுபெற்ற காலத்தில் ஆனந்தக் களிப்பினால் அவர்தம் கண்களினின்று ஒழுகிய பாஷ்யங்களின் தொகுதியே அக்கோயிலின்

திருக்குளமாக விளங்கியது. இதனை ''ஆனந்த தீர்த்தம்'' என்றும், ''அமிர்தபுஷ்கரணி'' என்றும் வழங்கினர். இத்தீர்த்தத்தில் (குளத்தில்) தவளைகள் வசிப்பதில்லை. தாமரைகள் பூத்து அழகு செய்கிறது. சந்திரனும், சுமுகமுனிவரும் பூசித்த தலம் எனவும் கூறப்படுகிறது. பாலை வனத்தில் இறைவன் எழுந்தருளியதால், ''பாலீஸ்வரர்'' எனத் திருநாமம் பெற்றார். திரு எனும் சிறப்புச் சொல்லும் இணைந்து ''திருப்பாலீஸ்வரர்'' எனப்பட்டார். இங்ஙனமே பாலைவனம் திருப்பாலைவனம்ஆகியது.

பாலீசுவரர் பெருமான் திருமேனியை மூடியிருந்த பாலை மரத்தைப் பற்றி, தமிழக அரசு வெளியிட்ட ''பொருட் பண்புநூல்'' குணபாடம் (மூலிகை வகுப்பு), பாலை (பாலையில் 5வகை உண்டு) என்னும் தலைப்பில், ஊசிப் பாலை எனும் வகுப்பினை ஆராய்ந்து, அதன் குணநலங்கள் பற்றிக் கூறி, இறுதியில், ''செங்கல்பட்டைச் சார்ந்த பொன்னேரிக்கு அடுத்த பாலைவனம் என்னும் ஊரிலுள்ள சிவன்கோவிலுள் (தல விருட்சமாக) பழைய மரம் ஒன்று இருக்கிறது'' என அந்நூலின் ஆசிரியர் சித்த மருத்துவர், திரு.க.ச.முருகேச முதலியார் அவர்கள் கூறிமகிழ்கின்றார். (பக்.491).

இத் திருக்கோயில் எடுப்பித்துச் சுமார் 800 ஆண்டுகள் ஆகி இருக்கலாம் எனத் தெரிகிறது. இக்கோயிலில் 71 கல்வெட்டுக்கள் உள்ளன. இது நால்வர்களால் பாடல் பெற்றதல்ல. காரணம் நாயன்மார்கள் காலம் 7ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டாகும். திருப்பாலீசுவரர் கோயில், 11, 12ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது. ஆகவே, இது பாடல் பெறாத வைப்புத் தலமாகும். இறைவன் பெயர் அமிர்தேசுவரர் என வழங்கும். திருமேனி வெண்மையாக இருக்கும். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதுண்டபோது அவ்வமிர்தத்தின் ஒரு பகுதியை இலிங்கமாக அமைத்து வழிபட்டனர் என்பது ஒரு குறிப்பு.

மேலும், கல்வெட்டின்படி கோயிலின் வடமேற்கு 2 கல் தொலைவில்''கோளூர்''என்னும் ஊர் இருக்கிறது. ''கோளூர் எல்லையிலுள்ள திருப்பாற்றுறையில் உள்ள திருப்பாலைவன முடையார் கோவில்'' என்பதுதான் வாசகம். ஆகவே கோளூர் என்னும் பேரூரின் ஒரு பகுதியே திருப்பாற்றுறை எனும் திருப்பாலைவனம். ஆகவே இறைவன் திருமேனி அமிர்தத்தால் ஆனது என்பது வெறும் கதையாகாது. திருவுருவம் அமிர்தம் ஆதலால் அபிடேகம் செய்யும்போது, பால், பன்னீர், இளநீர், தண்ணீர் மட்டுமே, பயன்படுத்தப் படுகின்றன. பிற பொருள்களான பழம், தேன், எண்ணெய், சீயக்காய் பயன்படுத்துவதில்லை.

சந்தனப்பொட்டு சாத்தினால் கரைந்து விடுகிறது. இப்பொழுது வெள்ளியில் செய்யப் பெற்ற திருநீற்றுப் பட்டயத்தின் மீதுதான், சந்தனம் சாத்தப்படுகிறது. இறைவன் அமிர்தேசுவரர், திருப்பாலீச்சுரர், பையூர்க் கோட்டமுடையான், பையூர்க் கோட்டத்திருத்தேவன், பாலீச்சரப்பெருமானார், திருப்பாலைவன முடையார் எனப் பல நாமங்களை உடையவர். இறைவி பெயர் யோகாம்பிகை, லோகாம்பிகை பிரியாநாச்சியார் என்றெல்லாம் அழைத்து மகிழ்வர்.

இறைவனின் பெயரில் ஒன்று ''திருப்பாலைவன முடையான்'' என்பது. காரணம் கோவிலுக்குச் சொந்தமாகப்பணையம்பாக்கம், திருப்பாலைவனம் ஆகிய சிற்றூர்கள் இருந்தன. இவ்வூருக்கு உரிய வரிகளை மதுராந்தகம், பொத்தப்பிச்சோழன் என்னும் விஜயகண்ட கோபாலன் நீக்கினான் எனவும் தெரியவருகிறது.இதுபோன்றே ''பையூர்க் கோட்டமுடையான்'' என்ற திருப்பெயரும் காணப்படுகிறது. திருப்பாலைவனத்தைச் சுற்றியும்,கல்வெட்டில் காணும் ஊர்கள், மெதூர், பெரும்பேடு, பூவாமி (பழைய பெயர் பூவாம்பி), கோளூர், தத்தமஞ்சி, பிரளம்பாக்கம் (கல்வெட்டில் பனையம் பாக்கம்) அயநல்லூர், ஈச்சூர், பெருங்கழும்பூர், நெக்குன்றம், சிறுவாக்கம், பேரூர் ஆவூர், ஆமூர், எயினூர், புதுவாயில் முதலியன இவ்வூர்கள் அனைத்தும் இவைகளுடன் மேலும் சுமார் 8க்கும் மேற்பட்ட ஊர்கள் இணைந்த ஒன்றிற்குப் ''பையூர்க்கோட்டம்'' என்று அழைக்கப்படுகிறது.

இவ்வூர்களில் வாழ்ந்த - வாழும் மக்கள் பெரும்பாலோர் வேளாளர். இவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள். இவர்கள் 'பையூர்க் கோட்ட வேளாளர்' என அழைக்கப்பட்டனர். இக்கோட்டத்தின் பல ஊர்களில் ஊராட்சிமன்றங்கள் சோழர் காலத்திலேயே இருந்தன. சில ஊர்களில் புகழ்பெற்ற இறைவன் உறைவிடங்கள் உள்ளன. இவ்வேளாளர்கள் தாங்களே விரும்பிப் பையூர்க் கோட்டமுடையானாகிய திருப்பாலீசப் பெருமான் திருக்கோயிலைச் சோழர்களுக்குப் பின்னர்க் காத்து வருகின்றனர். தங்கள் நிலங்களை, கால்நடைகளை கோயில் திருப்பணிக்காக மனமுவந்து அளித்துள்ளனர். இதனைக் கல்வெட்டுகளே தெரிவிக்கின்றன. இன்னும் இந்தப் பையூர்க் கோட்ட வேளாளர் இக்கோயில் திருப்பணிகளைக் கண்ணில் இமையெனக் காத்து வருகின்றனர்.

இத்தலத்தில் மூன்று மடங்கள் இருந்தன. தன்மதாவளன் திருமடம், கண்டகோபால மாணிக்கமடம், அன்பர்க்கு அடியார்மடம் ஆகியன. இம்மடங்கள் அடியார்களை உண்பித்தலும், நந்தவனத்தைப் பாதுகாத்தலும், திருமுறை ஓதலும், கோவிலில் இருந்த திருக்கோட்டி மண்டபத்தை மேற்பார்த்தலும் ஆகிய திருப்பணிகளில் ஈடுபட்டன.

இவ்வாறெல்லாம் புகழ் மிக்க திருப்பாலைவனம் திருப்பாலீச்சுரர் திருக்கோயிலும், நந்தவனமும், திருக்குளத் தீர்த்தமும், இவைகளைக் கட்டிக் காத்துவரும் பையூர்க்கோட்டம் வாழ் பெருங்குடி மக்களும் சிறந்து வாழ்ந்து, தங்களையும் தங்கள் திருக்கோயில்களையும் பரிபாலித்த சோழ அரசர்களின் பெருமையினையும் உலகறியச் செய்வது மானுடப் பிறவியின் பண்பார்ந்த செயல்களாம்.

***

உ

# அகம் தரும் அருளிச் செயல்கள்

திரு. நா. வேணுகோபால்நாயகர், பி.ஏ., பி.எல்.,

வழக்கறிஞர்,

செயலாளர், ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கம், சென்னை.

ஸ்ரீவைணவக் கன்னிகை கடல்வண்ணன் மீது செலுத்தும் கட்டுக்கடங்காக் காதலைக் காண்போம்.

வாளாய கண் பனிப்ப
மென்முலைகள் பொன் அரும்ப,
நாள் நாளும் நின்னினைந்து,
நைவேற்கு, ஓ! மண்ணளந்த
தாளாளா தண்குடந்தை
நகராளா, வரை எழுந்த
தோளாளா, என் தனக்கோர்
துணையாளன் ஆகாயே!

கங்குலும் பகலும் கண்துயில் அறியாமலும் கண்ணநீர் கைகளால் இறைத்தும் காதல் நோயில் வாடும் தன் மகளின் நிலைகண்டு பொறாத திருத்தாயார், இது யாரால் ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கக் கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்கலாம்! அது கேட்டுக் ''காரார் குழல் கொண்ட கட்டுவிச்சி கட்டேறி, கட்டுரையா! கட்டுவிச்சியும் காட்டுகிறாள் அவனை! நீரேதும் அஞ்சேல்மின், நும் மகளை நோய் செய்தான் ஆரானும் அல்லன், அறிந்தேன், அவனைநான்! கூரார் வேற்கண்ணீர், உமக்கறியக் கூறுகேனோ, ஆரால் இவ் வையம் அடியளப் புண்டது தான்? ஆரால் இலங்கை பொடிபொடியாய் வீழ்ந்தது? மற்றுக் காண்மின்!''

காதலியை கைவிட்ட கள்வனை உலகறியக் நியாயம் கேட்கலாம். அறப்போர் தொடுக்கலாம். மடல் ஊரலாம். அதாவது, ஊரார் அறிய அவனைத் திருத்த முற்படுதல். ''மற்றிவை தான் உன்னி உலவா உலகு அறிய ஊர்வன்நான் முன்னே முளைத்தெழுந்து ஓங்கி ஒளிபரந்த மன்னியபூம் பெண்ணை மடல்''. தான் விரும்பிய காதலர் தன்னை வந்து விரைவில் கூடுவரா என்று ஏங்கும் மங்கை, கூடல் இழைத்து மனத் தேர்வடையலாம். கூடல் இழைத்தலாவது: வட்டமாகக் கோடு கீறி, அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து, இரண்டிரண்டு சுழியாகக் கூட்டிப் பார்க்கும்போது, இரட்டைக் கணக்காக முடிவுபெற்றால் கூடுகை; ஒற்றைக் கணக்காக முடிவு பெற்றால் கூடாமையாம்.

பூமகன் புகழ்வானவர் போற்றுதற்
காமகன் ஆணி வாணுதல் தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர் தம்
கோமகன் வரில், கூடிடு கூடலே!

துவாரகையின் பதியானாலும், அவன் கன்றுகள் பின் போகின்றானே! இதற்குப் பாசம் தான் காரணம். நானும் அவனிடம் பாசம் வைத்துள்ளதால், என்னிடமும் அவன் வர வேண்டாமா?

ஆவல் அன்புடையார் தம்மனத்து அன்றி
மேவலன் விரையார் துவராபதிக்
காவலன் கன்றுமேய்த்து விளையாடும்
கோவலன் வரில் கூடிடு, கூடலே!

பிரிவாற்றாமையைப் பெறாத நாயகி, குரலில் இனிய குயிலைத் தூதுவிடலாம். அந்தக் குயிலை வசப்படுத்தத், தான் வளர்க்கும் கிளியைத் தோழமைப்படுத்தலாம்.

மென்னடை யன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூருறை வான்தன்
பொன்னடி காண்பதோ ராசையினால், என்
பொரு கயற் கண்ணிணை துஞ்சா
இன்னடி சிலொடு பாலமுது ஊட்டி
எடுத்த என்கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்வன் குயிலே!
உலகளந்தான் வரக் கூவாய்!

உயிருள்ள குயில் மட்டுமல்ல; உயிரற்ற குளிர் மேகங்களையும் தூது விடலாம். அவை தங்குதடையின்றி, மின்னல் வேகத்திலும் செல்லுமே!

சங்கமா கடல் கடைந்தான்
தண்முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பம்!
கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்பழியப் புகுந்து ஒருநாள்
தங்குமேல்என் ஆவி
தங்குமென்று உரையீரே!

ஸ்ரீவைணவ தம்பதிகளின் கலியாணமும் நடைபெறுகிறது. ஊரே விழாக் கோலம்தான். கலியாணச் சடங்குகள் நம்மை வசீகரிக்கின்றன.

வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி
நான்

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதுன் வந்து, என்னைக்
கைத்தளம் பற்றக் கனாக்கண்டேன் தோழி
நான்

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி,
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,
மங்கல வீதிவலம் செய்து மணநீர்
அங்கு அவனோடு உடன்சென்று அங்குஆனை
மேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ
நான்

மணவாழ்க்கையின் பயன்தான் என்ன? ''மங்கலம் என்ப மனைமாட்சி, மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு. கொண்ட பெண்டிர் மக்களுடன் கூடி வாழ்வதே வைணவ இல்லற லட்சியம். ''நல்லகோட் பாட் டுலகங்கள் மூன்றி லுள்ளும், தான் நிறைந்த, அல்லிக் கமலக் கண் ணனை அந்தண் குருகூர்ச் சடகோபன் சொல் லப்பட்ட ஆயிரத்துள் இவையும் பத்தும் வல் லார்கள் நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே.''

மணம் செய்து கொண்ட நாயகன் மகிழ்ந்து உடன் உறையவில்லை. மன உரிமைப் போராட்டம் (Restitution of Conjugal Rights) தொடுக்கின்றாள் நாயகி. அவன் எங்கு இருப் பினும், அவனிடம் கொண்டு செல்லுங்கள் ளெக் கெஞ்சுகிறாள் நாயகி.

மற்றிருந் தீர்கட் கறியலாகா
மாதவ னென்பதோ ரன்புதன்னை
உற்றிருந் தேனுக் குரைப்ப தெல்லாம்
ஊமைய ரோடுசெவிடர் வார்த்தை,
பெற்றிருந்தாளை ஒழியவே போய்
பேர்த் தொரு தாயில் வளர்ந்த நம்பி,
மற்பொருந் தாமற் களமடைந்த
மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின்

நாணி இனிஓர் கருமம்இல்லை,
நால் அயலாரும் அறிந்து ஒழிந்தார்,
பாணியாது என்னை மருந்து செய்து
பண்டு பண்டாக்க உறுதியாகில்
மாணி உருவாய் உலகளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீர் என்னைக்காக்கவேண்டின்
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின்

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்
காடுவாழ் சாதியும் ஆகப்பெற்றான்
பற்றி உரலிடை ஆப்புமுண்டான்
பாவிகாள் உங்களுக்கு ஏச்சுக்கொல்லோ
கற்றன பேசி வசையுணாதே
காலிகள் உய்ய மழைதடுத்து
கொற்றக் குடையாக ஏந்திநின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின்.

ஊடல் கூடலில் முடிகிறது. ஊடுதல் காமத் திற்கு இன்பம், அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்.

இல்லச் சிறையிலே சிக்கிக் கொண்ட ஸ்ரீ வைணவன், இறைவன் உகந்தருளின நிலங் களான திவ்விய தேசங்களைச் சென்று நேரில் சேவிக்கவேண்டும். ''கிளர் ஒளி இளமை கெடு வதன் முன்னம், வளர் ஒளி மாயோன் மருவிய கோயில், வளர் இளம்பொழில் சூழ் மால்இரும் சோலை, தளர்வு இலர்ஆகில் சார்வது சதிரே''. அங்ஙனம் சேவிக்க இயலாவிடின், ''சென்று சேவிக்கவேண்டும்'' என்ற அவாவில் துடித்துக் கொண்டிருக்கவேண்டும்.

இருள்இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை
மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டுஎன்
கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும்
நாளோ

எம்பெருமான் எதற்காகப் பின்னானார் வணங்கும் சோதியாக இந்நிலவுலகில் அர்ச்சை யிலே (வழிபடும் உருவத்திலே) எழுந்தருளியுள் ளான்?

வன்பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய
மண் உய்ய, மண்ணுலகில் மனிசர் உய்ய,
துன்பமிகு துயர்அகல, அயர்வு ஒன்றில்லாச்
சுகம் வளர, அகம்மகிழத் தொண்டர்வாழ,
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும்
நாளே!

ஸ்ரீவைணவன் குடும்ப பாரத்தைத் தாங்கு வதால், தன் வீட்டை விட்டு நிலை பெயராமல் போகலாம், ஆனால், அவன் நெஞ்சம் சிறக டித்துப் பறந்து, நீள்சிகர வேங்கடத்தையும் சேரலாமே! ''பாரும் நீரெரிகாற்றினோடு ஆகா சமும் இவை ஆயினான் பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகு மிடம், காரும் வார் பனி நீள்விசும்பிடைச் சோரும் மாமுகில் தோய் தர, சேரும் வார்பொழில் சூழ்எழில் திருவேங் கடம் அடைநெஞ்சமே''.

ஸ்ரீவைணவன் தனக்குப் பேறு தப்பாது என்று மார்பிலே கைவைத்திருத்தல் வேண்டும். எம்பெருமான் எல்லாவித உறவுமாகி இதயக் கமலத்தில் எழுந்தருளியிருப்பதால் இடர்க்கட லில் கிடந்து உழலலாமா?

அத்தன்ஆகி, அன்னைஆகி, ஆளும் எம்பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்
கொள்வான்,
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தினால் இடர்க் கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே.

இல்லறத்தில் நின்று ஐம்பெரும் வேள்வி களையும் செவ்வனே ஆற்றிவரும் வைணவன், தம் ஐம்புலன்களும் நோவ, ஊன்வாட, உயிர் காவலிட்டுத் தவம் செய்ய வேண்டாம்.

இறைவன் திருவருளைப் பெறுதற்கு அவை தேவை இல்லை.

ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்ட
    உடலிற் பிரியாப் புலனைத்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா!
    தமதா இமையோர் உலகாள கிற்பீர்
கானாட மஞ்சைக் கணமாட மாடே
    கயலாறு கானீர்ப் பழனம் புடைபோய்த்,
தேனாட மாடக் கொடியாடு தில்லைச்
    திருச் சித்ரகூடம் சென்று சேர்மின்களே!

காயோடு நீடு கனியுண்டு, வீசு
    கடுங்கால் நுகர்ந்து, நெடுங்காலம் , ஐந்து
தீயோடு, நின்று தவஞ்செய்ய வேண்டா!
    திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பர்
வாயோதும் வேதம் கற்கின்ற தொல்சீர்
    மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
    திருச் சித்ரகூடம் சென்று சேர்மின்களே

விலக்க முடியாத விலகல், உற்றார், உறவினர், உலக வாழ்வையே நீத்தல்! கண்ணீர், கதறல். காலனின் அழைப்பு. ''ஆசை வாய்ச் சென்ற சிந்தையராகி, அன்னை, அத்தன், என் புத்திரர், பூமி, வாசமார் குழலாள், என்று மாறும் எல்லை, சோர்வினால் பொருள் வைத்தது உண்டாகில், ''சொல்லு, சொல்லு'' மயங்கி சுற்றும் இருந்து,ஆர் வினாவிலும் வாய் திறவாதே அந்த காலம்.

''மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து,
    மேல்மிடற்றினை உள்ளெழ வாங்கி,
காலும் கையும் விதிர் விதிர்த் தேடிறிக்
    கண்ட உறக்கம் ஆவது''

''வாய் ஒரு பக்கம் வாங்கி வலிப்ப,
    வார்த்த நீர்க் குழிக்கண்கள் மிழற்ற,
தாய் ஒருபக்கம், தந்தை ஒருபக்கம் அலற்ற,
    தீ ஒருபக்கம் சேர்வதன் முன்''.

ஸ்ரீ வைணவர்கள், பரமபதித்துவிட்டவரின் திருமேனியைச் சூழ்ந்து கொண்டு அவருடைய குற்றங்களைப் பேசாமல், குணங்களையே பேசுதல் வேண்டும். அத்திருமேனியைப் புதுத் துணியால் போர்த்தி, பாடையில் இட்டு எடுப்பதை, நரியினங்கள் நாவை நீட்டி எதிர்நோக்கியிருக்கும்.

கூடிக் கூடி உற்றார்கள் இருந்து
    குற்றங்கள் நிற்க, நற்றங்கள் பறைந்து,
பாடிப் பாடி ஓர் பாடையில் இட்டு,
    நரிப்படைக்கு ஒரு பாகுடம் போல,
கோடி மூடி எடுப்பது.

எம்பெருமானை தன் வாழ்க்கையில் ஒரு முறை சரணடைந்த ஸ்ரீவைணவன், இறுதிக் காலத்திலும் இறைவனுடைய இணையடிகளை இறைஞ்சவேண்டியதென்பது அவசியமில்லை. பலமுற்றவர்களை நாம் நாடுவது நமக்குப் பலமற்ற நேரத்தில் அவர்கள் தானே வந்து உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் தான்!

    துப்புடையாரை அடைவ தெல்லாம்
        சோர்விடத்துத் துணை ஆவர் என்றே
    ஒப்பிலே னாகிலும் நின் அடைந்தேன்,
        ஆனைக்கு நீ அருள் செய்தமையால்,
எய்ப் பென்னை வந்து நலியும்போது அங்கு
    ஏதும் நான் உன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்
அரங்கத் தரவணைப் பள்ளியானே! [தேன்,

சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய்,
    சங்கொடு சக்கரம் ஏந்தினானே,
நாமடித்து என்னை அநேக தண்டம்
    செய்வதா நிற்பர் நமன் தமர்கள்,
போமிடத்து உன்திறத்து எத்தனையும்
    புகாவண்ணம் நிற்பதோர் மாயைவல்லை
ஆமிடத்தே உன்னைச் சொல்லிவைத்தேன்,
    அரங்கத் தரவணைப் பள்ளியானே.

செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற
    தேவர்கள் நாயகனே, எம்மானே,
எஞ்சலில் என்னுடைய இன்னமுதே,
    ஏழ் உலகுமுடையாய், என்னப்பா,
வஞ்ச உருவின் நமர் தமர்கள்,
    வலிந்து நலிந்து என்னைப்பற்றும்போது,
அஞ்சலை என்று என்னைக் காக்கவேண்டும்,
    அரங்கத் தரவணைப் பள்ளியானே.

அந்திமக் காலத்திலும் அருளாளனான எம் பெருமானைத் தொழல் வேண்டியது அவசியமில்லை என்று அயர்வறும் அமரர்கள் அதிபதியான ஸ்ரீவரதராசப் பெருமாளும், திருக்கச்சி நம்பிகள் மூலம் உடையவர்க்கு அருளிய ஆறு வார்த்தைகளில் அருளியுள்ளாரன்றோ! ஸ்ரீவைணவனின் ஆத்மா, தன் தேக யாத்திரையை முடித்துக் கொண்டு அந்தரம் ஏழினூடு உயர்ந்து கலங்காப் பெருநகராம் பரமபதத்தை அணுகுகின்றது. திருநாட்டில் வாசலிலே என்ன தெம்பு எக்காளம், எதிர்நோக்கு, வரவேற்பு! வைகுண்டத்தைப்பற்றி என்ன நுணுக்கமானவர்ணனை, வியப்பான விவரங்கள்!

சூழ்விசும்பு அணிமுகில் தூரியம் முழக்கின,
ஆழ்கடல் அலைதிரை கையெடுத்து ஆடின,
ஏழ்பொழிலும் வளம்ஏந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக் கண்டுஉகந்தே.

நாரணன் தமரைக் கண்டுஉகந்து, நன்னீர்முகில்
பூரண பொற்குடம் பூரித்தது, உயர்விண்ணில்,
நீரணி கடல்கள் நின்றார்த்தன, நெடுவரைத்
தோரணம் நிறைத்தெங்கும் தொழுதனர் உலகே.

மடந்தையர் வாழ்த்தலும், மருதரும் வசுக்களும்
தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர்
    தொடுகடல்
கிடந்த எங்கேசவன் கிளரொளி மணிமுடி
குடந்தை எங்கோவலன் குடிஅடி யார்க்கே.

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்,
வைகுந்தன் தமர்எமர் எமதுஇடம் புகுதென்று
வைகுந்தந்து அமரரும் முனிவரும் வியந்தனர்,
வைகுந்தம் புவது மண்ணவர் விதியே.

வந்தவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை,

அகம்தரும் அருளிச் செயல்களான இப் பக்திப் புதையலுக்கு, இலக்கிய விருந்துக்குக் கற்பனை என்றே கொண்டாலும்,இக் கருத்து, களஞ்சியத்திற்கு உலகில் ஈடு உண்டோ! இணையும் உண்டோ! எடுப்பும் உண்டோ! ஏற்றமும் உண்டோ!

# திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பு

## முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியில், அளப்பருஞ் சிறப்புடைய நூல்கள் மிகப் பல உள்ளன. அவற்றுள், திருமூலர் என்னும் தெய்வப்பெருஞ் சான்றோர் இயற்றிய திருமந்திரம் என்னும் புனிதநூல், தனிப்பெருஞ் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

தமிழ் நூல்களின் வரிசையில், இலக்கணத் துறையில், தொல்காப்பியமும், நீதி நூற் பிரிவில் திருக்குறளும், பக்திநெறிப் பனுவல்களில் திருவாசகமும், செந்தமிழ்க் காப்பியங்களிற் சிலப்பதிகாரமும், கவிதை நயச்சுவையிற் கம்பராமாயணமும், தத்துவ நுண்பொருட் செறிவில் சிவஞானபோதமும், சமய குரவர் வரலாறு விளக்கும் வாய்மையிற் பெரியபுராணமும் போல, யோக ஞான அனுபவ விளக்கத் துறையிற் பெரிதும் சிறப்புற்று விளங்குவது, திருமூலர் இயற்றியருளிய திருமந்திரம் ஆகும்.

## திருமந்திரம் :

மக்கள் வாழ்வின் இம்மை மறுமை நலங்களுக்கு உரிய மறைபொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கெடுத்துத் தெளிவித்து உரைப்பதில், திருமந்திரம் போல்வதொரு விழுமிய முழுநூலை, உலகின்கண் வேறு எந்த மொழியிலும் காண்டல் அரிது. முடிந்த முடிபான சிறந்த மந்திரங்கள், அவற்றை உருவேற்றும் முறைகள், அவற்றை அமைக்கும் சக்கரங்கள், அம் மந்திரங்களுக்குரிய மாபெரும் தெய்வங்கள், அத்தெய்வங்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளான சிவபரம்பொருளின் ஆணைவழி நின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகள், சரியை கிரியை யோகம் ஞானம் முதலிய தவஒழுக்கத்தின் பாகுபாடுகள் அவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைமைகள், அழிவிலாப் பேரின்பம் ஆகிய வீடுபேற்றியல் நிலைகள், ஆகிய பலவற்றையும், முற்ற எடுத்து முடியக் கூறித் தெற்றென விளக்கும் முழுமுதல் நூல், திருமூலர் அருளிய திருமந்திரமேயாகும் எனத் துணிந்து கூறலாம்.

அதனாலேயே, நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாக வந்த மாபெரும் சான்றோர்கள் பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் பெரிதும் போற்றிப் பயின்று, பயன் கொண்டுள்ளனர்.

## இராமலிங்கர் :

அண்மைக் காலத்துச் சான்றோர் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளை அறியாதவர், தமிழ்நாட்டில் எவரும் இரார். அவருக்குத் திருமந்திரத்தின்பால் இருந்த ஈடுபாடு எல்லையற்றது. ''தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்'' என்பது, இராமலிங்க அடிகளார் திருவுள்ளம். இராமலிங்கர் ஒரு பெருஞ் சித்தபுருடர், என விளங்கியவர். 'பாம்பறியும் பாம்பின்கால்'' என்றபடி தத்தபுருடராகத் திகழ்ந்திருந்த இராமலிங்கர்கிாம், 'கயிலாயத்தொரு சித்தர்' எனப்பெறும் திருமூலரின் அருமை பெருமைகளைச் செவ்வி தின் அறிந்திருத்தல் இயலும். ஆதலின் அவர் திருமந்திரத் திருமுறையின் பெருமையை யுணர்ந்து பெரிதும் போற்றிப் பயன்கொண்டார் எனத் தெரிகின்றது.

''இறைவன் ஒருசமயம் எனக்குத் தில்லை திருச்சிற்றம்பலத்தின்கண் குருவடிவாகப் போந்து மெய்ம்மொழிப் பொருளை உபதேசித்தான்; பின்னர் ஒருகால் திருமந்திரத் திருமுறையினால், அம்மெய்ம்மொழிப் பொருள் விளங்கும்படி தெளிவுமிக உணர்த்தியருள்னான். பிறிதொரு சமயம் என் உள்ளத்திலே நிலைபெற்று மெய்ம்மொழிப் பொருளைக் காட்டியருளினான். அவைகள் என் உள்ளத்திலே மருவிப் பொருந்தியுள்ளன. அவற்றையே யான் நம்பியிருக்கின்றேன்; என்னுடைய இந்நிலையை இறைவனின் திருவுள்ளம் நன்கறியும்'' என்கிறார் இராமலிங்கர்.

''திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்,
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்,
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்,
மருவளர் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்''

எனவரும் திருவருட்பாப் பாடல் ஒன்றே, இராமலிங்க வள்ளலார்க்குத் திருமந்திரத்தின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது புலப்படுத்தப் போதியதாகும்.

## தாயுமானவர் :

இராமலிங்கர்க்கு முன்பு இருந்த சான்றோர் தாயுமானவர். அவர்தம் சால்புநலம் அளப்பரியது. வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகப் பெருங்குரவர் என விளங்கியவர் தாயுமானவர்! எளிமையும் இனிமையும் தெளிவும் நிறைந்த அவர்தம் பாடல்களைச் சமயவுணர்வுடையோர் அனைவரும் ஆரா அன்பிற் போற்றி மகிழ்வர். அத்தகைய தாயுமானவர் திருமூலரின் யோகஞான நெறிமுறைகளைப் பின்பற்றி உய்ந்து உயர்ந்த சிறப்பினரேயாவர். ''திருமூலரின் மரபில் வந்த மௌன குரு என்பவரே எனக்கு ஞானகுருவாக அமைந்து அருள் புரிந்தார். என்னை உலகாயதம் (நாத்திக வாதம்) ஆகிய புறச் சமயநெறியிற் புகுதாமல் காத்து ஆட்கொண்டார்; வேதாந்த சித்தாந்த சமரசச் சிவாநுபூதி நெறியில் நிற்கும்படிசெய்து வாழ்வித்தார்'' எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

''தரணிமிசை லோகாயதன் சமயநடை-
சாராமல், வேதாந்த சித்தாந்த
சமரசச் சிவாநுபூதி

மன்ன, ஒருசொற் கொண்டு என்னைத்
தடுத்தாண்டு, அன்பின்
வாழ்வித்த ஞானகுருவே!

மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே!
மூலன்மரபில் வரும் மௌன குருவே!''

எனவரும் பாடற் பகுதியால், இவ்வுண்மை செவ்விதின் புலனாதல் காணலாம்.

இம்மட்டோ; திருமூலரின் சிறப்புக்களையெல்லாம் நினைத்து வியந்து, தாயுமானவர் அவரைச் ''சக்கரவர்த்தி'' என்றும், ''தவராசயோகி'' என்றும் குறிப்பிட்டுப் புகழ்ந்துபோற்றுகின்றார்! அவருடைய அருளைத் தாம் அடையப் பெறும்நாள், எந்நாளோ என்றும் ஏக்கறுகின்றார்.

''சக்கர வர்த்தி
தவராசயோகி எனும்
மிக்கதிரு மூலன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?''

என்பது, அவர் பாடியருளிய குருமரபு வணக்கச் செய்யுள்களில் ஒன்று. திருமூலர் திருமந்திரத்தில் சொற்பொருட் சுவைகளிலும், கருத்து நலங்களிலும், தாயுமானவர் பெரிதும் ஆழ்ந்து திளைத்து மகிழ்ந்துள்ளார்.

உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாணல் ஆகுமோ?
திரையற்ற நீர்போலச் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே

எனவரும் திருமந்திரச் செய்யுளின் சிறந்த நுண்பொருளில் திளைத்து வியந்து, பொன் போலப் போற்றிப் பெரிதும் பாராட்டி,

திரையற்ற நீர்போல் தெளியஎனத் தேர்ந்த
உரைபற்றி, உற்றங்கு ஒடுங்கும்நாள் எந்நாளோ?

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருக்கும் அருமைப்பாடு, இங்கு நாம் நன்கினிது சிந்தித்து இன்புறுதற்குரியது.

## அருணகிரியார் :

தாயுமானவர்க்குச் சற்று முன்னே வாழ்ந்திருந்த அருளாளர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். 'வாக்கிற்கு அருணகிரி' எனத் தமிழ் கூறும் நல்லுலகம் அவரைத் தகவுற மதித்துச் சால்புறப் போற்றி வருகின்றது. அருணகிரியாரைத் தமக்கு ஒரு ஞானத் தந்தை என்றும், அவரைப் போல ஒவ்வொரு சொல்லும் உயரிய பொருளும் அனுபவமும் அமையும்படி உண்மையாகக் கூறியவர்கள் எவரும் இலர் என்றும், தாயுமானவர் கூறுகின்றார்.

''ஐயா!.. அருணகிரி அப்பா! உனைப்போல்
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்''?

என்பது அவர்தம் பாடல். இங்ஙனம் தாயுமானவர் புகழ்ந்து ஏத்தும் அருணகிரியார்க்கும், திருமூலர்பால் மிக்கமதிப்பும் ஈடுபாடும் இருந்ததெனத் தெரிகின்றது. ''நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்'' என்று திருமூலர் பாடியிருப்பதனால், அருளாளர் சிலருக்கு ''நாதர்'' என்னும் பெயர் அமைவதுண்டு எனத் தெரிகின்றது. அம்முறையில் ''அருணகிரிநாதர்'' எனப் பெயர் அமைந்து வழங்கி வரும் சிறப்பு, இங்குக் கருதத்தகும். திருமூலருக்கும் அருணகிரியாருக்கும் இடையே எத்தனையோ பல சொற்பொருட் கருத்தொப்புமைகள் அமைந்து காணப்படுகின்றன. அவற்றுள் ஒருசிலவற்றை மட்டும், இங்குக் குறிப்பிடுதல் சாலும்.

திருமூலர் ஆகிய சிறந்த சிவயோகியார் ஓராண்டுக்கு ஒன்றாக, மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, திருமந்திரப் பாடல்கள் மூவாயிரத்தினையும் பாடியருளினர் என்பது வரலாறு. இஃது உண்மையா? இவ்வாறு இருத்தலும் இயலுமோ? காலத்தை வெல்ல எவரால் முடியும்? என நம்மில் ஒருசிலர் ஐயப்படுவதுண்டு. இவ் ஐயப்பாட்டிற்கு விடையளித்து விளக்கம் தருவதுபோல, அருணகிரிநாதரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது. ''சிவயோகியர்கள் காலத்தை வென்று நெடுங்காலம் நிலை பெற்றிருப்பார்கள்; அவர்களுக்கு இறப்பு என்பது இல்லை; அவர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள்; தீவினையாகிய கன்மங்களைச் செய்கின்ற நம்மைப் போன்றவர்கள்தான், காலத்தை வெல்லும் வகையறியாமல் மரித்தொழிவார்கள்'' என்பதை அப்பாடல் அறிவுறுத்துகின்றது.

''நீலச் சிகண்டியில் ஏறும்பிரான்
எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்;
குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார்,
சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்; மரிப்பார்
வெறும் கர்மிகளே''

எனவரும் கந்தரலங்காரப் பாடல், திருமூலரை நினைத்துத்தான் அருணகிரியாராற் பாடப் பெற்றதோ என்று, நாம் நினைத்து மகிழும்படி அமைந்துள்ளது.

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே''

என்பன போன்றுவரும் திருமந்திரப் பாடல்கள் சிவயோகிகள் காலத்தை வென்றிருப்பார் என்னும் செய்திக்குச் சிறந்த சான்று பகருதல் காணலாம்.

''ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பார் சிவயோகி யர்களே''

எனவரும் திருமந்திரப்பாடற் பகுதியின் பொருளையே தழுவி விளக்கும் முறையில்,

''நின்னை உணர்ந்துணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன்; இறந்தே
விட்டது இவ்வுடம்பே''

என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின்கண் அருளிச் செய்திருத்தல், அறிந்து இன்புறற் பாலது.

''கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தின்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே''

என்று, இறையருட் பேற்றால் எய்தும் இன்பச் சுவை நலத்தின் சிறப்பினைத் திருமூலர் விளக்கியருள்கின்றார். இதனைத் தாமும் அனுபவித்து உணர்ந்து உடன்பட்டு வலியுறுத்தி அநுபவித்து மொழிபவர் போல,

''பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை, மெய்யன்பினால்
மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்;
தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்து அறக் கைத்ததுவே''

என அருணகிரிநாதர் பாடியிருத்தல், அவருக்குத் திருமூலர் திருமந்திரத்தின்பால் அமைந்திருந்த அளப்பரிய பேரார்வத்தினையும் பெருமதிப்பினையும் புலப்படுத்தும்.

## சிவநெறிச் சான்றோர் :

இனி சேக்கிழார் பெருமான், நம்பியாண்டார் நம்பிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் சிவநெறிப் பெருஞ் சான்றோர்கள், திருமந்திரத்தைப் போற்றிய திறத்தினைத் தனியே விரித்து உரைக்கவேண்டுவது இல்லை. சேக்கிழார் பெருமான் திருமூலரின் வரலாற்றினைச் சிறப்புறவும் சுவைபெருகவும் பாடியிருப்பதுடன்,

''ஊனுடம்பிற் பிறவிவிடம்
தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானமுதல் நான்கும்மலர்
நற்றிருமந் திரமாலை''

என்றும், இனிதெடுத்து விளக்கிப் புகழ்ந்து போற்றுகின்றார். நம்பியாண்டார் நம்பிகளோ, தம்முடைய திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலில்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை, முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே
பரவிட்டு, என்உச்சி
அடிமன்னவைத்த பிரான்
மூலன் ஆகின்ற அங்கணனே

என்னும் பாடலில், திருமூலரை ''என் உச்சியில் தம் திருவடியை மன்னும்படி வைத்த பிரான், அங்கணன் (அருள்நோக்கம் உடையவன்)'' என்றும்; திருமந்திரத்தை ''முழுத்தமிழின்படி மன்னும் வேதத்தின் சொல்'' என்றும் புகழ்ந்து போற்றுகின்றார்.

நம்பியாண்டார்க்கு முற்பட்ட நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, தாம் ''சகாமார்க்கம்'' என்னும் யோக நெறிக்குரிய தலைவராதலின், அவ்யோக நெறியிற் கைவந்த திருமூலரையே தமக்குரிய குருவும் தலைவருமாகக் குறிப்பிட்டு, ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என அருளிச் செய்தார். ''நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்'' எனத் திருவாய் மலர்ந்திருத்தலின் சுந்தரர் யோகநெறி நின்றவர் என்பது புலனாகும்.

## திருநாவுக்கரசர் :

இனி, திருநாவுக்கரசரும் திருமந்திரத்தை ஓதித் தெளிந்து சிறந்தவரே எனக் கூறுதல் பொருந்தும். திருநாவுக்கரசரின் தேவாரத்தில் திருமந்திரத்தை நினைவூட்டும் பகுதிகள் பற்பல காணப்படுகின்றன.

''ஒன்றி யிருந்து நினைமின்கள்;
உந்தமக்கு ஊனம் இல்லை''
''என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே''
''உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி''

என்பனபோல வரும் பாடற் பகுதிகள், திருமந்திரம் விளக்கும் யோகச் செந்நெறியின்இயல்பினையே உட்கிடையாகக் கொண்டு விளங்குகின்றன.

''தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்;
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியனே''

எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல்,

''தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந் தானே''

எனவரும் திருமந்திரப் பாடலையே பெரிதும் அடியொற்றியமைந்தது போலக் காணப்படுகின்றது.

''வானம் துளங்கிலென்? மண்கம்பம்
ஆகிலென்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்?விரிசுடர்
வீழிலென்? வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன் றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே''

என்னும் திருநாவுக்கரசர் திருவிருத்தம்,

''வான்நின் றிடிக்கில்என்? மாகடல்
பொங்கில் என்?
கான்நின்ற செந்தீக் கலந்துடன் வேகில்என்?
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்?
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே''

எனவரும் திருமந்திரப் பாடலைப் பெரிதும் நினைவூட்டும் வகையில் அமைந்து விளங்குதல் காணலாம். இவ்வாறே,

எந்தையும் என்னை அறியகி லான்ஆகில்
எந்தையை யானும் அறியகில் லேனே''

என்னும் திருமந்திரப்பாடல் (2428) வரிகளை நினைப்பித்து, அவற்றின் பொருளை விரித்துரைத்து விளக்குதல் போல,

''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடி யான்என் றறிதலும்
தன்னை நானும் பிரான்என் றறிந்தேனே''

எனவரும்திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல் அமைந்திருக்குந்தன்மை, நாம் சிந்தித்து மகிழும் நலமுடையதாகும்.

## திருஞானசம்பந்தர் :

திருஞானசம்பந்தர், திருவாவடுதுறைக்கு வந்து இங்குள்ள மாசிலாமணி ஈசரையும், ஒப்பிலாமுலை அம்மையையும் வழிபட்டபோது, இங்கே தமிழ்மணம் கமழ்தலை யுணர்ந்து, பலிபீடத்தின்கீழ் இருந்து திருமந்திர ஏடுகளை ஆராய்ந்து வெளிப்படுத்தியருளினர் என்பது வழிவழிச் செய்தி.

''அப்பரிசு எண்பத்துநான்குநூ றாயிரம்
மெய்ப்பரிசு எய்தி விருந்துயிராய் நிற்கும்''

எனவரும் திருமந்திரப் பாடலின் கருத்து,

''உரைசேரும் எண்பத்து நான்குநூறு
ஆயிர மாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்

என்னும்திருஞானசம்பந்தரின்தேவாரப் பாடலிலும் சிறப்புற மருவி வந்துள்ளது. மேலும்திருஞானசம்பந்தர்க்கு ''ஆணை நமது என்னவல்லான் ''என்ற ஒரு சிறப்பு பெயர் உண்டு.

''நனிபள்ளி உள்க வினைகெடுதல்
ஆணை நமதே'' (0.84.11)

''வானில் அரசாள்வர்
ஆணை நமதே'' (2.84.11)

''அந்தஉலகு எய்தி அரசாளும்
அதுவே சரதம் ஆணை நமதே''(3.78.11)

''வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்கு ஆணையும் நமதே'' (3.118.1)

எனத் திருஞானசம்பந்தர், தம் திருப்பதிகங்களில் ''ஆணை நமதே'' என அருளிச் செய்திருத்தல் காணலாம். ஏனைய பிற திருமுறையாசிரியர்கள் எவரும் இங்ஙனம் ஆணையிட்டுப் பாடியிருக்கக் காண்கின்றிலோம். திருஞானசம்பந்தர் ஒருவர் மட்டுமே இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவருக்கு இத்துறையில் வழிகாட்டியாக அமைந்தவர்,

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு ஏற்ப, ஆணையிற் கிளந்து பற்பல திருமந்திரப் பாடல்களை (516, 532, 543, 590, 722, 730, 734, 805) அருளிச் செய்த திருமூலரேயாவர் எனத் துணிந்து கூறலாம்.

## மணிவாசகர் :

'இவ்வாறே பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்'' எனக் குமரகுருபரரால் புகழ்ந்து போற்றப்பட்ட மணிவாசகப் பெருமானுக்கும், திருமந்திரத்தில் மிக்க ஈடுபாடு இருந்ததென்று தெரிகின்றது.

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்

என்னும் திருமந்திரப் பாடலை நினைப்பிக்கும் வகையில்,

பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடு இரண் டும்அறியேனையே''

என்று வரும் திருவாசகப் பாடற்பகுதி இலங்குகின்றது. 'இஃதொன்றோ? அம்பிகை இறைவனுக்கு அருட்சத்தியாகப் பலவகை நிலைகளிலும் விளங்கி நிற்கும் பெரு மாண்பினை வியந்து,

''வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே*'

என ஆசிரியர் திருமூலர் அருளிச் செய்திருப்பதனைத் தழுவி, திருப்பொற் சுண்ணத்தில்,

''எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்
தகப்பன் தமையன்''

என மணிவாசகப் பெருமானும், சுவைகெழுமப் பாடியிருத்தலைக் காண்கின்றோம்.

## முடிவுரை :

இவ்வாறே சைவசித்தாந்த தத்துவநெறிப் பெருஞ் சான்றோர்களான ஆசிரியர் மெய்கண்டார், அருள்நந்திசிவம், உமாபதிசிவம் போன்ற பெருமக்களும், திருமந்திர நூலைப் பயின்று, அதன் சொற் பொருட் கருத்துச் சுவை நலங்களிற் பெரிதும் தோய்ந்து, அதன் அரிய பெரிய விழுமிய கருத்துக்களைத் தத்தம் நூல்களிற் பொதிந்து போற்றிப் பயன் கொண்டிருக்கக் காண்கின்றோம். அது பெரிதும், விரிவாக ஆராய்ந்து அறிதற்குரியது. ஆதலின் அதனைப் பிறிதொருகாற் கருதி மகிழ்வோம்.

இதுகாறும் கூறியவாற்றால், அண்மைக் காலத்தில் இருந்த இராமலிங்கர் முதலாகத் தொன்மைக் காலத்தில் விளங்கிய சான்றோர்கள் பற்பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் போற்றிப் பயின்று, பயன்கொண்டு மகிழ்ந்தனர் என்னும் உண்மை இனிது புலப்படும். ஆதலின், அத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த திருமந்திர நூலினை, நாமும் பல்காற் பாங்குறப் பயின்று, நலம் பலவும் எய்தி உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

---

# தேவாரம்

'தேவாரம்' என்பது, சைவசமய ஆசிரியர்கள் ஆகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரும் பாடிய பாடல்களைக் குறிக்கும். இச்சொற்குப் பலவகைகளிற் பொருள் கூறலாம்.

(அ) தே—வாரம். தே-தெய்வம். வாரம்-அன்பு. தெய்வத்தினிடத்து அன்பை விளைவிக்கும் பாடல்கள்.

(ஆ) தம்மை ஓதுபவர்க்குத் தெய்வத்தின் அன்பு, அருள் என்பவற்றை எளிதிற் கிடைக்கும்படி செய்யும் தன்மை வாய்ந்த பாடல்கள்.

(இ) தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த அன்பின் பயனாகப் பொங்கி எழுந்து வெளிப்பட்டருளிய பாடல்கள்.

(ஈ) தே-வாரம். வாரம்-இசை இயக்கம் நான்கனுள் ஒன்று. எனவே தெய்வம் சுட்டிய இசைத் திறன் (வாரம்) அமைந்த பாடல்கள்.

(உ) தே-வாரம். வாரம்-உரிமை. தெய்வத்திற்கே உரிமையுடைய பாடல்கள். அதாவது பிற புலவர்கள் பலர் போரும், காதலும் போன்ற பொருள்களைக் குறித்துப் பாடிப்போந்த பாடல்களைப்போல் அல்லாமல், தெய்வத்தினையே தமக்குரிய குறிக்கோட் பொருளாகக் கொண்டு வழுத்துதற்காக வெளிப்பட்ட பாடல்கள்.

(ஊ) தே-ஆரம். ஆரம்-மாலை. தெய்வத்திற்கு மாலைபோல விளங்கும் சிறந்த பாடல்கள்.

(எ) பூமாலை பொன்மாலை மணிமாலை முதலிய மாலைகள் போல்வனவற்றினின்று வேறுபட்டு உயர்ந்து, தெய்வத்தன்மை பொலியும் சிறந்த பாமாலைகள்.

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் தம்முடைய உரைநூல்களில், 'தேவாரம்' என்பதைத் திருநாவுக்கரசர் பாடல்களுக்கேயுரிய சிறப்புப் பெயராக வழங்குவர். திருஞானசம்பந்தர் பாடலைத் 'திருக்கடைக்காப்பு' என்றும், சுந்தரர் பாடல்களைத் 'திருப்பாட்டு' என்றும் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

—ஆசிரியர்

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

வடிவழகார்ந்த வேல் வள்ளலைப் போற்றி வளம் பல பெற்றிட வாரீர் !
மிகவருள் ஞான முருகனை மேவி மெய்ந்நலம் பெற்றிட வாரீர் !
மயிலேறும் மாமணியை வந்தித்து வாழ்த்தி மனமொன்றிப் பரவிட வாரீர் !

அலுவலகம் : 236 மலைக்கோயில் : 293 சத்திரம் : 235

(அ) 1. மலைக்கோயில் அலுவலகம் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இடைவெளி இன்றிச் செயல்படும்.

2. பக்தர்கள் தங்களுக்குத் தேவையான அர்ச்சனை, அபிடேகம், பூசை முதலியவைகளைச் செய்வதற்கு வெளியார்களிடம் தொடர்பு கொள்ளாமல் மலைக் கோயில் அலுவலகத்திற்கு நேரில் வந்து டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

3. அபிடேகம் செய்த பஞ்சாமிர்தம் எங்கும் விற்பனை செய்யப்படுவதில்லை. அபிடேகத்திற்காகத் திருக்கோயிலில் தயார் செய்யும் பஞ்சாமிர்தம் மலைக் கோயிலில் விற்பனை செய்யப்படுகிறது.

4. மலைக்கோயிலில் பூசை அர்ச்சனை, அபிடேகம் செய்வது பற்றிய தகவல்களை, மலைக்கோயிலில் உள்ள அலுவலகத்திலும், மத்தியப் பேருந்து நிலையத்தில் உள்ள தகவல் நிலையத்திலும், அடிவாரம் சந்நிதி வீதியில் உள்ள தலைமையலுவலகத்திலும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

5. தங்குவதற்கு ஏற்ற வசதிகள் கொண்ட விடுதிகள் :—

அ. பேருந்து நிலையத்தின் அருகில் தேவத்தானச் சத்திரம்.
ஆ. அடிவாரத்தில் தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி.
இ. கிரிவீதியில் சிறுகுடில்கள்.

இவ்வலுவலகங்கள் 24 மணி நேரமும் செயல்படும்.

6. மலைமீது செல்ல மின்இழுவை ரயில்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

7. முடிக்காணிக்கை செலுத்துவோர், சண்முகநதி, கிரிவீதி முடிமண்டபம், சரவணப் பொய்கை முடிக்கொட்டகை, சத்திரம், தண்டபாணி நிலையம் ஆகிய இடங்களில் மட்டுமே செலுத்துமாறு வேண்டுகிறோம்.

8. ஆண்டவருக்குரிய காணிக்கைகளைப் பக்தர்கள் தாங்களாகவே உண்டியல் பெட்டிகளில் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

9. இராக்காலப் பூசை செய்வதற்கு நிரந்தரக்கட்டளையாக ரூ. 3,000 செலுத்தினால் குறிப்பிட்ட நாளில் இராக்காலப் பூசை செய்யப்படும்

(ஆ) மலைக்கோயில் கட்டண விவரங்கள் (விசேட காலங்களில்)

| | | ரூ. பை |
|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் ... ... ... | 10.25 |
| 2. | பால் அபிடேகம் ... ... ... | 5.00 |
| 3. | தீர்த்த அபிடேகம் ... ... ... | 1.75 |
| 4. | சிறப்பு அனுமதி (நபர் 1-க்கு) ... ... | 10.00 |
| 5. | காலைப்பூசை டிக்கட் (நபர் 1-க்கு) ... ... | 10.00 |
| 6. | உச்சிகாலப் பூசை டிக்கட் (நபர் 1-க்கு) ... | 25.00 |
| 7. | மாலை நேர வழிபாடு டிக்கட் (நபர் 1-க்கு) ... | 50.00 |
| 8. | அனுமதிச்சீட்டு (நபர் 1-க்கு) ... ... | 1.00 |
| 9. | காவடிச்சீட்டு (நபர் 1-க்கு) ... ... | 1.00 |
| 10. | அட்டோத்திர அர்ச்சனை டிக்கட் ... ... | 1.00 |
| 11. | சகஸ்ரநாம அர்ச்சனை டிக்கட் ... ... | 1.50 |
| 12. | போகர் அர்ச்சனை டிக்கட் ... ... | 0.50 |
| 13. | தீபாராதனை டிக்கட் 1க்கு ... ... | 0.25 |
| 14. | பஞ்சாமிர்தம் 1 கிலோ டின் 1க்கு ... ... | 10.00 |
| 15. | பஞ்சாமிர்தம் அரை கிலோ டின் 1க்கு ... ... | 5.00 |
| 16. | தங்கமயில்வாகனத்தில் சுவாமி புறப்பாடு செய்ய ... | 200.00 |
| 17. | தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு செய்ய... ... | 900.00 |
| 18. | மின்இழுவை ரயில் பயணக்கட்டணங்கள் போகவர ... | 2.50 |
| 19. | பெரியவர்களுக்குப் போக அல்லது வரமட்டும் ... | 1.50 |
| | குழந்தைகளுக்குப் போக அல்லது வரமட்டும் ... | 0.75 |
| 20. | முடிக்காணிக்கைச் சீட்டு (நாவிதர் கூலி உள்பட) ... | 2.00 |

டி. வேணுகோபால், பி. ஏ.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

டாக்டர் திருமதி ராதாதியாகராஜன்,
எம். ஏ., பி. எச்டி.,
தக்கார்.



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலின் தெற்கு இராயகோபுரம் பத்தாம் நிலைத் திருப்பணித் துவக்க விழாவில், ஸ்ரீமத் அகோபில மடம் **அழகியசிங்கஜீயர்** சுவாமிகள், கேரள மாநில ஆளுநர் மேதகு பா. **இராமச்சந்திரன்**, ஆந்திர அரசின் மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசகர், தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம.**வீரப்பன்**, சத்துணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.. **சவுந்திரராசன்**, பி.காம்., அறநிலையத்துறை ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பீ. நடேசன், ஐ.ஏ.எஸ்., திருச்சித் துணை ஆணையர் திரு கே. சிதம்பரம், பி.ஏ., நிர்வாக அதிகாரி திரு. கே. வேலுசாமி, பி.ஏ. ஆகிய பெருமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (23.12.83).





வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.